R A T T H A T H I N R A T T H A M

இரத்தத்தின் இரத்தம்

சமகால இரத்தசாட்சிகளின் இரத்தினச்சுருக்கம்

Pastor. S. ROMILTON

இரத்தத்தின் இரத்தம்

Pastor. S. ROMILTON

சமகால இரத்தசாட்சிகளின் இரத்தினச்சுருக்கம்



அடைபட்ட அக்கினி

Pastor. **S. ROMILTON**
246- B, Pocket - C, Mayur Vihar,
Phase -2, Delhi - 110091.
Mob : 98106 46981

அட்டவணை

1. துருக்கி - எர்கன் சென் குல் ---------- 007
2. மௌரிஷியானா - தீமோத்தி ---------- 009
3. கம்போடியா - ஹெய்மும் அவர் குடும்பமும் ---------- 011
4. இந்தோனேஷியா - டிலோரஸ் ---------- 013
5. வியட்நாம் - போதகர் ஒருவர் ---------- 015
6. எருசலேம் - தோமா ---------- 016
7. இங்கிலாந்து - ஜான் லாம்பர்ட் ---------- 018
8. ருமேனியா - சகோதரர் வாசிலே ---------- 020
9. ரஷ்யா - கேப்டன் மார்க்கோ ---------- 022
10. சீனா - போதகர் லீ டெக்ஸியன் ---------- 025
11. புனித பிரான்சிஸ் அசிசியின் ஜெபம் ---------- 027
12. சைபீரியா - பவுலோஸ் ---------- 028
13. இந்தோனேஷியா - பாஸ்டர் ஹென்றிக் பட்டிவெல் ---------- 030
14. சூடான் -சூடானிய சிறுவர்கள் ---------- 032
15. ருமேனியா - ரிச்சர்ட் உம்பிராண்ட் ---------- 034
16. டைட்டானிக் - ம்ஷெ. ராபர்ட் பேட்மன் ---------- 036
17. ஈக்வடார் - நாத்தே செயின்ட் ---------- 038
18. லாவோஸ் - விசுவாச கிறிஸ்தவர்கள் ---------- 039
19. சீனா - வாட்ச்மன் நீ ---------- 041
20. மடகாஸ்கர் - குற்றம் சாட்டப்பட்ட 15 பேர் ---------- 044
21. பெரு - பாஸ்டர் ஸப்பாட்டா ---------- 046
22. லாவோஸ் - லூ ---------- 048
23. சூடான் - பீட்டர் ---------- 050
24. ருமேனியா - ஒரு இளம்பெண் ---------- 052
25. பாகிஸ்தான் - சலீமா, ரஹீலா ---------- 054
26. வியட்நாம் விசுவாசிகளின் ஜெபம் ---------- 056
27. பூட்டான் - நார்பு ப்ரோமிலா ---------- 057
28. பங்களாதேஷ் - ஆண்ட்ரூ ---------- 059
29. ருமேனியா - சபீனா உம்பிராண்ட் ---------- 061
30. இந்தியா பாஸ்டர் கார்த்தேஷ்வர் டிகல் ---------- 063
31. ஜப்பான் - இபராகி குன் ---------- 065
32. பிலிப்பைன்ஸ் - ஒரு சிறு பெண் ---------- 068
33. சூடான் - ஜேம்ஸ் ஜேடா ---------- 070

34. லியோனார்ட் ரேவன்ஹில் - இரத்தசாட்சிக் கிரீடம் ---------------------- 072
35. ருமேனியா - பாஸ்டர் ஃப்ளாரெஸ்கு ---------------------- 074
36. க்யூபா - **Tom White** ---------------------- 076
37. அம்மோரியா - ஏழு கைதிகள் ---------------------- 078
38. இந்தோனேஷியா - பத்ரஸ் ---------------------- 080
39. ருமேனியா - பாஸ்டர் கோச்சங்கா ---------------------- 082
40. வில்லியம் பார்க்லே ---------------------- 084
41. ருமேனியா - பாஸ்டர் ரிச்சர்ட் உம்பிராண்ட் ---------------------- 085
42. சவுதி அரேபியா - ஒரு கணவனும் மனைவியும் ---------------------- 087
43. ரோம சாம்ராஜ்யம் - தீபன் படைப்பிரிவு ---------------------- 089
44. ரஷ்யா - ஒரு பல்கலைக்கழக மாணவன் ---------------------- 091
45. எகிப்து - ஒரு கிறிஸ்தவ யூத் லீடர் ---------------------- 093
46. இத்தாலி - எஸூபியஸ் ---------------------- 096
47. ஸ்விட்சர்லாந்து - மைக்கேல் ஸாட்லர் ---------------------- 097
48. கிரீஸ் - அனஸ்தேசியஸ் ---------------------- 099
49. ஹாலந்து - அன்ட்டோனியஸ் ---------------------- 100
50. ஜப்பானின் இரத்த சாட்சிகள் ---------------------- 101
51. சிலிசியா - தராக்கஸ், ப்ரோபஸ், அன்ட்ரோனிகஸ் ---------------------- 103
52. இங்கிலாந்து - ஜான் ஸ்மித் ---------------------- 104
53. கோத் இன சபாஸ் ---------------------- 105
54. எகிப்து - அப்பல்லோனியா ---------------------- 106
55. ரஃபா தோமா அல்க்காஸ் ---------------------- 107
56. எரித்ரியாவின் கைதிகள் ---------------------- 108
57. இந்தோனேஷிய கிறிஸ்தவர்கள் ---------------------- 110
58. செர்பியா - ஜார்ஜ் ---------------------- 111
59. பன்னிரண்டு எகிப்திய இரத்த சாட்சிகள் ---------------------- 112
60. ஸ்பெயின் - கொலம்பா ---------------------- 113
61. சீன இரகசிய சபைகளின் பாடல் ---------------------- 114
62. ரோம் - வேலன்ட்டைன் ---------------------- 115
63. பாகிஸ்தான் - முக்தார் மஸி ---------------------- 116
64. எருசலேம் - இயேசு கிறிஸ்து ---------------------- 117
65. உகாண்டா - ஜனானி லுவம் ---------------------- 118
66. ரோம் - ஆக்னஸ் ---------------------- 120
67. சபீனா உம்பிராண்ட் ---------------------- 121
68. ஈராக் - பர்பாஸிமஸ் ---------------------- 122
69. தர்சு - பவுல் ---------------------- 123
70. மடகாஸ்கர் - ரஃபரலாஹி ---------------------- 124

முன்னுரை

சவால் ஒன்றுக்கு நீங்கள் ஆயத்தமா? அப்படியானால், கிறிஸ்துவுக்காகத் தங்களை முழுவதுமாய் விற்றுப்போட்ட எழுபது பேர் கொண்ட இப்புத்தகத்தின் பக்கங்களை ஒவ்வொன்றாய்த் திருப்புங்கள்.

கிறிஸ்துவைத் தீவிரமாய்ப் பின்பற்றுகிறவர்கள் அதற்கான ஒரு விலைக்கிரயத்தை செலுத்தவே செய்கின்றனர். அவரை வெறித்தனமாய்ப் பின்பற்றுகிறவர்களோ அதற்கேற்ற மிகப்பெரிய விலைக்கிரயத்தை அடிக்கடி செலுத்திக்கொண்டே செல்கின்றனர். அப்படிக் கேட்கப்பட்ட விலைக்கிரயத்தை மனதார செலுத்திய அர்ப்பணிப்பும், திட வைராக்கியமும், நேச அக்கினியும் நிறைந்த சாட்சிகளின் தின தியானங்கள் கொண்ட நூல் இது.

சகலத்திலும் எல்லை மீறிய தலைமுறை கண்ட இந்தக் காலத்திலே, கிறிஸ்துவின் மேலிருந்த தங்கள் அன்புக்காக எந்த எல்லைக்கும் சென்று எப்படிப்பட்ட விலைக்கிரயத்தையும், சென்றுபோன நூற்றாண்டுகள் முதல் இன்று வரை உலகம் முழுவதுமிலிருந்து செலுத்தி வந்த நமது சக விசுவாச உதிரங்களின் இந்த வாழ்க்கை வரலாறுகள் உண்மையாகவே நமது விசுவாசத்தைத் தட்டியெழுப்பி, பெலப்படுத்தி, உற்சாகமும் நம்பிக்கையும் அளிக்கிறது.

இதிலுள்ள ஒவ்வொரு கதையும் உண்மை. ஒவ்வொன்றும் மறக்க முடியாதது. காலத்தைத் தாண்டி நிற்கும் இவை ஒவ்வொன்றும் உண்மையாகவே உங்கள் வாழ்வை மாற்றும்.

சவாலை உங்களுக்கென்று ஏற்று முன் செல்லுங்கள். வரலாறு திரும்புகிறது !

இரத்தத்தின் இரத்தம்

<u>உளமார்ந்த நன்றிகள் :</u>

இப்புத்தகத்திலுள்ள அநேக சம்பவங்கள்
Rev. **ரிச்சர்ட் உம்பிராண்ட்** அவர்களின்
VOICE OF MARTYRS நிறுவனத்தின்
EXTREME DEVOTION என்ற
நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.
அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த **நன்றிகள் !**

இப்படியும் ஒரு கேள்வியா?

01

துருக்கி : எர்கன் சென் குல்

இஸ்லாமிய நாடாகிய துருக்கியில் எர்கன் சென் குல் தன் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தபோது, தன் தேசத்தையும் கலாச்சாரத்தையும் அவர் ஒரு பொருட்டாக எண்ணாமல் அவைகளுக்குத் தன் முகத்தையல்ல, முதுகையே காட்டினார் என்ற கோணத்திலேயே அநேகர் அவரைப் பார்த்தனர். என் தேவனுக்காக எதையும் நான் செய்வேன் என்று அவர் சொன்னபோது, தான் சொல்வது இன்னதென்று அறிந்தே அவர் சொன்னார். ஆனால் இப்போது நடந்தது என்ன?

அந்த இருட்டும் ஈரமுமான சிறை அறையிலே, உடன் சிறைக்கைதிகள் சூழ்ந்திருக்க, அங்கே உட்கார்ந்திருந்தார் எர்கன். ஒரு கிறிஸ்தவப் புத்தகப் பதிப்பாளருக்குக் கிறிஸ்தவப் புத்தகங்களை விநியோகித்ததினால் 'இஸ்லாமை அவமதித்தான்' என்று சொல்லப்பட்டு உள்ளூர் போலீஸால் கைது செய்யப்பட்டிருந்தார் அவர்.

தன்னைத் தப்புவிக்கும்படியாய்த் தேவனை நோக்கிக் கெஞ்சினார் எர்கன். தான் அந்த டஞ்சன் ஜெயிலிலே அடைபட்டுக் கிடக்கும்படியான எந்தத் தவறையும் செய்யவில்லை என்று அறிந்திருந்தார் அவர். எர்கனின் இதயத்திலே ஆண்டவர் தமது அமர்ந்த மெல்லிய சத்தத்திலே பேச ஆரம்பித்தார். 'நீ எனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்றாயே எர்கன்? அதை நீ உண்மையிலே உணர்ந்துதான் சொன்னாயா?

இந்தக் கேள்வியைக் கேட்ட மாத்திரத்தில் மனமுடைந்த எர்கன் ஏங்கி அழுது கொண்டே ஆண்டவரை ஆராதிக்க ஆரம்பித்தார். அவர் சொன்னார், 'ஆம் ஆண்டவரே அதை நான் உண்மையிலேயே உணர்ந்துதான் சொன்னேன்..' அதைத் தொடர்ந்து தன் சிறையிலே ஒவ்வொரு நாளும் மூன்று மணி நேரம் பிரசங்கிக்கத் தொடங்கினார் அவர்.

சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்.

எபே 6:19, 20

ஒரு புதிய பணித்தளத்தை தனக்குக் கொடுப்பதற்காகவே தேவன் தன்னைக் கைது செய்யப்படும்படி அனுமதித்திருக்கிறார் என்று அவர் அறிந்துகொண்டார். போலீஸ் தங்களைக் கட்டாயப்படுத்தி அவனுக்கு விரோதமாய்ப் பொய் சாட்சி சொல்லும்படி ஆவணங்களில் கையெழுத்திட நிர்ப்பந்தித்ததாக சாட்சிகள் அவருக்கு ஆதரவாக ஏற்றுக்கொள்ளும் வரை முப்பது நாட்கள் சிறையிலிருந்தார் எர்கன். அவர் மேல் எந்தவொரு குற்றத்தையும் நீதிபதியால் கண்டுபிடிக்க இயலவில்லை.

அவரது கைது, அவரை இன்னும் திடப்படுத்தி சாட்சியாக நிறுத்தியது. அவரது விடுதலையைத் தொடர்ந்து, சிறையிலே அவருக்கு அமைதியையும் சமாதானத்தையும் அருளிய ஆண்டவரைத் தேடி, அவரோடு ஜெயிலில் இருந்தவர்கள் அவரது சபைக்கு வர ஆரம்பித்தனர். தான் மறுபடியும் கைது செய்யப்பட நேரிடலாம் என்று அறிந்தும்கூட, எர்கன் மகிழ்ச்சியோடு இன்னும் கிறிஸ்தவப் புத்தகங்களை விநியோகத்துக் கொண்டிருக்கிறார்.

தேவன் நம்மை உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது, உபத்திரவம் என்ற எண்ணமெல்லாம் நம் மனதில் தோன்றுவதே இல்லை என்று அநேகக் கிறிஸ்தவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆம், நாம் நமது விசுவாசத்தை வாழ்ந்து காட்ட நினைப்பதென்னவோ உண்மை ஆனால் உபத்திரவப்படும் அளவுக்கெல்லாம் அல்ல.. நமக்குப் பதவி உயர்வு மறுக்கப்படும் போதோ, பொது வாழ்வில் நாம் புறக்கணிக்கப்படும் போதோ, நாம் வெறுப்படைகிறோம். நாம் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு, ஏமாற்றப்பட்டு, நம்மிடம் உள்ளவைகள் உரிந்துகொள்ளப்படுகின்றன என்றே உணர்கிறோம். அப்படிப்பட்ட தவிப்பின் மத்தியிலும் கூட ஜெபத்தோடு நாம் தேவ சித்தத்தை அவசியம் தேடியே ஆக வேண்டும். அப்படிச் செய்யத் தொடங்கும்போது, அந்த ஜெபத்தினால் நமது கண்ணோட்டமே மாறிப்போகிறது என்பதை நாம் கண்டுகொள்கிறோம். நாம் வளரும்படியான வாய்ப்புகளைக் காணத் தொடங்குகிறோம். நமக்கு நம்பிக்கை பிறக்கிறது. வலியின் நடுவே வாக்குத்தத்தம் வெளிப்படுகிறது. நாம் நடத்தப்படும் விதம் எத்தனை தான் நியாயமற்றதாய்க் காணப்பட்டாலும், அதுவும் தேவ திட்டத்தின் ஒரு பகுதியே என்பதை நாம் கடந்து போகும் பாதையில் கண்டுகொள்ளத் தொடங்குவோம். உபத்திரவத்தின் பாதையிலே தேவனின் கண்ணோட்டத்தை நாமும் காணும்படியாக ஜெபிக்கும்போது, எப்படிப்பட்ட விலைக்கிரயத்துக்கு மத்தியிலும் அவருக்குக் கீழ்ப்படிய நமக்குத் தைரியமும் துணிவும் தானாய்க் வருகிறது.

இப்படியும் ஓர் ஒருமனமா ?

02

மௌரிஷானியா : தீமோத்தி

அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்..'

கொலோ 2:2

'என்னால இதுக்கு மேல தாங்க முடியல தீமோத்தி, வேத புஸ்தகங்களை எங்க மறைச்சு வச்சிருக்கிறன்னு இந்த கவர்னர்ட்ட சொல்லிரு..ப்ளீஸ், சொல்லு தீமோத்தி..' என்று தன் கணவனைக் கெஞ்சினாள் மௌரா. ரோம ராஜ்யத்துக்கு உட்பட்ட பிராந்தியமான மௌரிஷானியாவிலிருந்த தீமோத்தியுவும் மௌராவும் இப்போது அவன் கைதாகும் சில வாரங்களுக்கு முன்பு தான் திருமணமாகியிருந்தனர்.

தீமோத்தியுவின் நெஞ்சுரத்தை உடைப்பதற்காக ரோம வீரர்கள் அவளது கணவனின் கண்களில் பழுக்கக் காய்ச்சிய கம்பிகளால் உருவக்குத்தும் கோரத்தைத் தன் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தாள் மௌரா. ரோம கவர்னர் அரியேனுஸ்வின் கட்டளைப்படி கழுத்தில் பாராங்கல் கட்டப்பட்டு தலைகீழாய்த் தொங்கவிடப்பட்டிருந்த அவன், மூச்சடைக்கத் தன் வாயினுள் அடைக்கப்பட்ட துணியை வெளியே எடுத்து விடமாட்டார்களோ என்று தவித்துக் கொண்டிருந்தான். தான் கைது செய்யப்பட்டபோது ஆரம்பத்தில் அவனுக்குள்ளிருந்த பயம் இப்போது விலகி, ஒரு தெய்வீக அமைதி அவனை ஆட்கொண்டிருந்தது.

தன் விசுவாசத்தை மறுதலித்து, வேதபுத்தகங்களைத் தன் சபையில் அவன் மறைத்து வைத்திருந்த அந்த இடத்தின் இரகசியத்தைத் தங்களுக்குச் சொல்லிவிடுவான் என்று எதிர்பார்த்து, அவனது வாய்க்கட்டை அவிழ்த்துவிட்டபோது, அவர்கள் எதிர்பார்ப்புக்கு மாறாகத், தன் இரட்சகருக்காகத் தான் மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறேன் என்ற அவனது தீர்மானத்தை, 'நீ என் மேல் வைத்திருக்கும் அன்பையும் பாசத்தையும் கிறிஸ்துவுக்கும் உனக்கும் நடுவில் வரவிடாதே மௌரா ' என்று அவளுக்கும் சொல்லித் தன் இளம் மனைவியைக் கடிந்து கொண்டான். அவளது கணவனின் துணிவைக் கண்டு மௌராவும் தன் தீர்மானத்தில் உறுதியாகிவிட்டாள்.

ஏற்கனவே தீமோத்தியுவின் மறுப்பைக் கண்டு வெறுப்பும் எரிச்சலும் கொண்டிருந்த அரியேனுஸ், மௌராவிடம் இப்போது, தான் கண்ட இந்தத் துணிச்சலை உடைக்கத் துணிந்து, ரோம சாம்ராஜ்யத்திலே செய்யப்பட்டு வந்த மிகக் கொடுமையான சித்ரவதைகளுக்கு அவளை உள்ளாக்க, அவளோ கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்து விட்டாள். இருவரும் மிகக் கடூரமான, வார்த்தைகளால் விவரிக்க முடியாத வதைகளுக்கு ஆளாக்கப்பட்டபின், ஒரே சிலுவையில் முன்னும் பின்னுமாக அறையப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

தனித்தனியான விசுவாசிகள் கைகளிலே இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தைக் கையளிக்கவில்லை - மாறாக ஒரு ஆவிக்குரிய குடும்பத்தை அவர் ஸ்தாபித்தார். இந்த ஊழியத்தைச் செய்ய அவர்கள் தன்னந்தனியே விட்டு விடப்படக்கூடாது என்பதற்காகவே 'சகோதரனே' 'சகோதரியே' என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தினார் அவர். புதிய விசுவாசிகள் சபை கூடுதலிலும், ஐக்கியத்திலும், கூட்டமாய்க்கூடி ஆராதிப்பதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தி, கிறிஸ்துவின் அதே பணியைத் தொடர்ந்தார் பவுல். கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் அவசியப்படுகிறார்கள் - முக்கியமாக சோதனை நேரங்களில்..ஒரு விசுவாசி விழும்போது, மற்றவர் அவரை உற்சாகப்படுத்தித் தாங்குகிறார். முன்னுதாரணமாய் வாழ்ந்து காட்டும் இப்படிப்பட்ட வாழ்க்கையையே கிறிஸ்தவ விசுவாசத்தின் கடமையும் தேவையுமாய் புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. ஒருவரின் முன்னுதாரணமான விசுவாசமும் தைரியமும் மற்றவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களைப் பின்பற்றச் செய்கிறது. அதைப் போலவே, உபத்திரவத்தின் அழுத்தம் தாங்காமல் ஒரு விசுவாசி தன் தைரியத்தையும் விசுவாசத்தையும் இழக்கும்போது, அதைப் பார்க்கும் மற்றவரது மனமும் தண்ணீராய்க் கரைந்து வழுவிப்போகிறது. கிறிஸ்தவ சமூகத்தின் இந்த அன்பின் பிணைப்பையும் ஐக்கிய உறுதியையும் வரலாறு மிக உயர்வாகக் காண்கிறது - முக்கியமாக உபத்திரவக் காலக்கட்டங்களிலே!

இப்படியும் ஒரு குடும்பமா?

03

கம்போடியா:
ஹெய்மும் அவர் குடும்பமும்

'தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான்...'

மாற்கு 3:35

கம்போடியக் காடுகளிலே ஹெய்ம் மற்றும் அவரது குடும்பத்தினர், தங்கள் சவக்குழிகளைத் தாங்களே வெட்டும்படி அவர்கள் கைகளிலே மண்வெட்டி கொடுக்கப்பட்டது. தங்கள் தேசத்தின் மகிமையான புரட்சிக்கு எதிராளிகள் என்று 'க்மேர் ரோஃக்' எனப்பட்ட தீவிரவாதக் குழுக்களால் முத்திரை குத்தப்பட்ட கிறிஸ்தவர்களில் சிறைப்படுத்தப்பட்டவர்கள் அவர்கள்.

ஹெய்மும் குடும்பமும் முழங்காலிட்டு கைகூப்பி ஜெபிக்க அந்தத் தீவிரவாதிகள் அவர்களை அனுமதித்திருந்தனர். அப்போதும் அந்த வீரர்களை மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ளும்படி ஹெய்ம் அவர்களை மன்றாடினார். மரணத்தை முகமுகமாய்ச் சந்தித்த அந்த வேளையிலும் அவரது குரலில் காணப்பட்ட அன்பையும் மனதுருக்கத்தையும் கண்டு அந்தத் தீவிரவாதிகள் ஆச்சரியப்பட்டனர்.

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே அவரது மகன்களில் ஒருவன் குதித்து காடுகளுக்குள் ஓட ஆரம்பித்தான். அவனைப் பிடிக்க அந்த வீரர்கள் ஓட, ஹெய்ம் அவர்களை நிறுத்தினார். அவரது அமைதியையும் நிதானத்தையும் கண்ட அந்தக் கம்யூனிஸ்ட்கள் அவர் என்ன செய்யப்போகிறார் என்று கவனித்தனர்.

அவரது மீதியான குடும்பத்தினர் மேல் தீவிரவாதிகளின் துப்பாக்கி குறிபார்த்துக்கொண்டிருக்க, காட்டின் எல்லை வரை ஓடிய ஹெய்ம், தன் மகனை நோக்கிக் குரல் கொடுத்தார்..'மகனே, உன் உயிரைக் காத்துக்கொள்ளத் தப்பியோடும் குற்றவாளியாய் இன்னும் சில நாள் நீ உயிரோடு இருப்பதை விட, கிறிஸ்துவோடு இன்றே பரலோகத்தில் சேர்ந்து என்றென்றுமாய் விடுதலையாய் வாழ உன் குடும்பத்தோடு இங்கே இந்தக் குழியருகில் நீயும் எங்களோடு இணைந்து கொள்ள மாட்டாயா?

சிறிது நேரத்தில் புதருக்குள்ளிருந்து வெளிப்பட்ட ஹெய்மின் மகன் தன் தகப்பனோடும் குடும்பத்தோடும் முழந்தாள்படியிட்டான். ‘இப்போது நாங்கள் ஆயத்தம்’ என்று ஹெய்ம் அந்த வீரர்களைப் பார்த்துச் சொல்ல, அவர்களில் ஒருவரும் தங்கள் துப்பாக்கி விசையை அழுத்தமுடியாமல் நின்றிருந்தனர். இதற்குள் பையன் திரும்பி வந்ததை அறியாமல் அங்கே வந்த ஆபீஸர் ஒருவன், ‘கோழைகளே!’ என்று அந்தத் தீவிரவாதிகளைத் திட்டினவனாய், ஹெய்மின் குடும்பத்தை சுட்டுக் கொன்றான்.

சில குடும்பங்கள் மிக நெருக்கமாய், ஒருவரோடொருவர் பின்னிப்பிணைந்த குடும்பங்களாய் அறியப்படுகின்றன. இன்னும் சிலரோ ’நாங்கள் தலைமுறை தலைமுறையான பணம் படைத்தவர்களாக்கும்’ என்ற பெருமையிலேயே வாழ்பவர்கள். இன்னும் சில குடும்பங்களோ நாங்கள் சமுதாயத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக்கும் என்று மார்தட்டிக் கொள்வார்கள். இப்படிப்பட்ட வெளிப்பிரகாரமான காரியங்களிலேயே மக்கள் பெருமிதப்பட்டுப் பெருமைபாராட்டிக் கொண்டாலும், மற்றவர்கள் மேல் நீண்ட தாக்கத்தை ஏற்படுத்தும் காரியத்தில் கர்த்தரின் கண்ணோட்டமும் எண்ணோட்டமும் முற்றிலும் வேறானதே! தேவராஜ்யத்தில் ஒரு குடும்பம் எதினால் உபயோகமுள்ளதாய் இருக்கிறது? அளவுகடந்த கீழ்ப்படிதல் ஒன்றினால் மாத்திரமே! அது அந்தக் குடும்பம் உபயோகிக்கும் நவீன காரைப் பொறுத்ததல்ல.. ஆனால் கிறிஸ்துவுக்குத் தங்களைத் அர்ப்பணித்திருக்கும் அர்ப்பணிப்பைப் பொறுத்ததே! கிறிஸ்துவுக்கு எப்படியாகக் கீழ்ப்படிய வேண்டுமென்று பெற்றோர் முன்மாதிரியான ஒரு வாழ்க்கை வாழும்படியாகவே தேவன் குடும்ப வடிவமைப்பை அமைத்திருக்கிறார். ஹெய்மின் குடும்பம் இந்த விஷயத்தில் ஒரு தனித்தன்மையுடையதாய் இருந்தாலும், நாமோ நமது வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளிலும் அப்படிப்பட்ட கீழ்ப்படிதலைக் காண்பிக்கலாமே? உங்கள் குடும்பத்தின் அர்ப்பணிப்பை நீங்கள் எப்படி வரையறுக்கிறீர்கள்? உங்கள் முழுக்குடும்பமும் ‘இப்படியும் ஒரு அர்ப்பணிப்பின் குடும்பமா?’ என்று சொல்லக்கூடிய முன்மாதிரியான குடும்பமாய்க் காணப்படுமா?

இப்படியும் ஒரு முறையீடா?

04

இந்தோனேஷியா - டிலோரஸ்



ஓடி ஓடி மூச்சிரைத்து நடுங்கிய வயதான டிலோர், 'தேவனே, உமது பிள்ளைகளாகிய எங்கள் மேல் தயவாய் இரங்கமாட்டீரோ?' என்று அழுது கொண்டே ஜெபித்தார். அவரது கிராமத்தை முற்றுகையிட்டு சரமாரியாகத் தாக்கிக் கொண்டிருந்த தீவிரவாதிகளின் தாக்குதலுக்குத் தப்பி மற்ற விசுவாசிகளோடு தானும் தன் ஜீவன் தப்ப ஓடிக்கொண்டிருந்தார் டிலோரஸ். பாதுகாப்பான ஒரு இடத்தை சென்றடையும் வரை தனது கைத்தடி ஒன்றைப் பிடித்துக்கொண்டு செங்குத்தான மலையில் அடிமேல் அடி வைத்து ஏறினார். தீவிரவாதத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் புலம்பெயர்ந்து குடிவைக்கப்பட்டிருந்த அகதிகள் முகாமுக்கு எப்படியோ வந்து சேர்ந்தார் அவர்.

பதிமூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட குட்டித் தீவுகளாலான இந்தோனேஷியா தேசத்திலிருந்த இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களில் டிரோலரசும் ஒருவர். உலகத்தில் மிக அதிகமாய் இஸ்லாமியர் வாழும் நாடுகளில் இந்தோனேஷியாவும் ஒன்று. ஆனாலும் தலைமுறை தலைமுறைகளாய்க் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் ஒருவருக்கொருவர் சகோதரர்களைப் போலவே சமாதானமாய் ஒன்றாய் வாழ்ந்து வந்தனர். ஆனால் சமீப காலங்களில் 'புனிதப்போர்' என்ற பெயரில் தீவிரவாதத்தைத் தூண்டிவிடும் புதிய எதிரி ஒன்றை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டனர். ஆகவே இன்று இந்தோனேஷியாவிலே முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே சமாதானமில்லை.

'தேவரீர் பூமியின் மேல்குடியிருக்கிற வர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்..'

வெளி 6:10

அங்கே ஒரு நகரிலே, கிறிஸ்துவின் சமாதானத்தின் செய்தியைப் பறைசாற்றும் வண்ணமாக ஆளுநர் மாளிகையில் கூடிய கிறிஸ்தவர்கள் குழு ஒன்று 'என்னை முற்றும் அர்ப்பணித்தேன்' என்ற பாடலை அவருக்கு முன்பாகப் பாடியது. 'எங்களில் எத்தனை பேர் தீவிரவாத இஸ்லாமியர்களுக்குப் பலியோனோம், பாருங்கள்!' என்று அவருக்கு முன்பாக அவர்கள் தங்கள் குமுறலைக் கோரிக்கையாக வைத்தார்கள்.

ஒரு புறம் கிறிஸ்தவர்கள் அங்கே அமைதியாக தேவனை ஆராதித்துக்கொண்டிருக்க, அதே நேரத்தில் கிறிஸ்தவக் கிராமம் ஒன்று அடித்து நொறுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. மீண்டு எழும்ப முயன்ற அநேகக் கிறிஸ்தவ வளாகங்கள் இன்று எரிந்து சாம்பலான மண்மேடுகளாய்க் கிடக்கிறது.

தங்கள் விடுதலைக்காக தேவனை நோக்கிக் கதறும் எண்ணிலடங்கா நசுக்கப்பட்ட விசுவாசிகளில் டிலோரசும் ஒருவர்! தேவனின் நியாயத்தீர்ப்புக்காகவும் பழிவாங்கும் நாளுக்காகவும் ஏங்கிக் காத்துக்கிடக்கும் எண்ணற்ற இரத்த சாட்சிகளைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் பேசுகிறது. ஆனால் அவர்களது கதறல் மட்டுமல்ல, மரித்த அவர்களது உண்மையான ஏக்கப் பெருமூச்சுகளோடு, உயிரோடுள்ள நமது சத்தமும் தேவனுக்கு முன்பாகக் கேட்கப்படல் வேண்டும். நாம் நமது வசதியான வீடுகளிலே, நமது சுதந்திர உலகத்திலே வாழ்ந்து கொண்டிருந்தாலும், ஒடுக்கப்பட்ட அவர்களை விட்டு நாம் தூரமாய் அல்ல, அவர்களுக்காக உண்மையாய் ஜெபிக்கும் தூரத்திலேயே இருக்கிறோம். அவர்களது பாதுகாவலுக்காகவும் விடுதலைக்காகவும் நமது ஜெபங்களை ஏறெடுக்கும்போது, நெருக்கப்படும் அவர்களோடு நாமும் நமது இதயங்களை இணைத்துக் கொள்கிறோம். டெலோரசுக்காகவும் அவரைப் போன்ற இந்தோனேஷிய விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்க இன்று உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா? அவர்களது இடங்களிலே அவர்கள் பாதுகாக்கப்படவும், தங்கள் உபத்திரவங்களிலிருந்து விடுவிக்கப்படவும் நீங்கள் தேவனை நோக்கிக் கெஞ்சுவீர்களா?

வியட்நாம்: போதகர் ஒருவர்

‘ உபத்திரவமே

உலகத்தில் மிக மோசமான ஒன்று என்பது இல்லை என்று நாங்கள் அறிந்துகொண்டோம். ஆனால் அதைவிட மிக மோசமானது

தேவனுக்குக் கீழ்ப்படியாமையே!

- தனது விசுவாசத்துக்காகக் கைது செய்யப்பட்ட வியட்நாம் போதகர் ஒருவர் -

இப்படியும் ஒரு தழும்பா ?

06

எருசலேம் : தோமா

'அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லா வற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார்..'

2 தீமோ 3:10

அவன் அந்த வதந்திகளைத் தன் காதினால் கேட்டான். தங்கள் போதகரை உயிரோடு தாங்கள் கண்டதாக மற்ற சீஷர்கள் சொன்னதை நேரடியாகவே கேட்டான் அவன். அவர்கள் சொன்னது அது தான். அதற்குத் தோமா,'அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலை விட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன்' என்று சொல்லியிருந்தான்..

தோமா விரும்பியது ஒரு அற்புதத்தை அல்ல. அவன் வேண்டியது ஒரு ஆச்சரியமான அடையாளமும் அல்ல. அவன் கேட்டதெல்லாம் இயேசுவின் பாடுகளின் அடையாளமான அவருடைய சரீரத்தில் காணப்பட்ட தழும்புகளைத் தான் பார்க்க வேண்டுமென்பது மாத்திரமே! இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்து மகிமையான சரீரத்தோடு இருந்தாலும், அந்த சரீரத்திலே தமது தழும்புகளைத் தாங்கியே காணப்பட்டார் - தான் செலுத்திய விலைக்கிரயத்தின் நினைவின் அடையாளமாக !

எட்டு நாட்களுக்குப் பின் மறுபடியும் தம்மை வெளிப்படுத்தினார் இயேசு. தன் எஜமானரும் போதகருமான அவரை நேருக்கு நேர் தோமா சந்தித்தபோது எப்படியாய் அவன் உணர்ந்திருப்பான் ! மற்ற சீஷர்கள் அவன் சொன்னதை அவனுக்கு ஞாபகமூட்டியபோது, தனது 'பேர் போன' அவிசுவாச வார்த்தைகள் அவனுக்கே முட்டாள்தனமாகத் தெரிந்திருக்கும். ஆனாலும் இயேசு அவனை அதற்காகக் கடுமையாகக் கடிந்து கொள்ளவில்லை. மாறாக அவர் அவனை நேருக்குநேர் பார்த்து, தன் கரங்களை அவனுக்கு நீட்டிக்கொடுத்துத் தன் தழும்புகளைத் தொட்டுப்பார்த்து விசுவாசிக்கும்படி அவனை தைரியப்படுத்தினார்.

அவரது சரீரமாகிய சபை இன்றும் படும் உபத்திரவங்களின் நினைவாகவே, அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் அந்தத் தழும்புகள் கிறிஸ்துவின் சரீரத்தில் நிலைத்திருக்கின்றன. அவர் மரணத்தை ஜெயமாக விழுங்கிய பின்னும், இந்தப் பூமியில் அவரது சரீரம் (சபை) பாடுகளை அனுபவித்த வண்ணமாகவே இருக்கிறது. உலகமெங்கிலும் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தினிமித்தம் தங்கள் பாடுகளின் தழும்புகளை சுமந்து திரியும் யாவரோடும் இன்றும் அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு அவர்களோடு தன்னையும் இணைத்துக்கொள்கிறார்.

தழும்புகளே நமது ஆசான்கள் -பாடுகளின் பாடங்களின் தெளிவான நினைவூட்டுதல்கள். அவைகள் பெரும்பாலும் பார்க்க அருவருப்பானவைகளும், மற்றவர்களின் கண்களுக்கு மறைத்து வைக்கப்படுபவைகளுமாகவே இருக்கின்றன. அதைப் போலவே, சபையின் இந்த உபத்திரவத்தின் தழும்புகள் அநேகக் கிறிஸ்தவக் கூடுகைகளிலே உரையாடல்களின் கருப்பொருளாகவோ, பிரசங்கங்களின் மையக் கருத்தாகவோ இருப்பதேயில்லை. அதைப்பற்றியெல்லாம் நாம் கவலைப்படுவதுமில்லை. அது ஒரு இரகசியம். ஆனாலும் நமக்குக் கற்றுத்தருவதே அதின் நோக்கம். முழு உலகமும் சுவிசேஷத்தைக் கேட்பதிலும் ஏற்றுக்கொள்வதிலும் உள்ள தேவனது திட்டத்தில் மிக ஆச்சரியமான ஒரு பங்கு, அந்த சுவிசேஷத்துக்காக சபையானது அனுபவிக்கும் பாடுகளுக்கும் நிச்சயம் உண்டு. இயேசு தமது தழும்புகளை எல்லாரும் காணும்படியாய் சுமந்து திரிந்தார். சொல்லப்போனால், தோமாவுக்கு அதைக் கற்றுக்கொடுப்பதற்காவே அவைகளைத் தொட்டுப்பார்க்கும்படி அவனைத் தம்மருகில் அழைத்தார். அவரது தழும்புகளே நமது இரட்சிப்புக்காக அவர் செலுத்திய விலைக்கிரயத்தை நமக்கு ஞாபகமூட்டும் நமது ஆசான்கள். நசுக்கப்பட்டு ஒடுக்கப்படும் சபை படும் பாடுகளைப் புறக்கணியாமல் நாம் அவைகளிலிருந்து தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்..

இப்படியும் ஒரு தெரிந்துகொள்தலா ?

07

இங்கிலாந்து- ஜாண் லாம்பர்ட்

கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்... நானும் என் வீட்டாருமோவென் றால், கர்த்தரையே சேவிப்போம்..'

யோசுவா 24:15

வாழ்வா சாவா எதைத் தெரிந்துகொள்கிறாய்? நீயே சொல்!

இக்கேள்வியைக் கேட்டது, வானளாவிய அதிகாரம் படைத்த இங்கிலாந்து மன்னர் எட்டாம் ஹென்றி. அவருக்கு முன்பாக மதத்தின் பேரில் 'குற்றவாளி' என்று குற்றஞ்சாட்டப்பட்டு நின்றவர், கிரேக்க லத்தீன் பேராசிரியர் ஜாண் லாம்பர்ட்.

'வேதவசனங்களோடு ஒவ்வாத பிரசங்கம் ஒன்றைச் செய்தார்' என்று தனது போதகரைத் துணிச்சலாக எதிர்த்ததே லாம்பர்ட் மேல் சாட்டப்பட்ட குற்றம். முதலாவது கேன்ட்டர்பரியின் ஆர்ச் பிஷப்புக்கு முன்பாகவும், அதன் பின் மன்னர் ஹென்றிக்கு முன்பாகவும் கொண்டுவரப்பட்டார் அவர். அங்கே கூடியிருந்த பிஷப்புகள், வக்கீல்கள் மற்றும் நீதிபதிகளுக்கு முன் அந்த வேத வசனத்தையும் அதின் பொருளையும் மூல பாஷையான கிரேக்கத்திலிருந்து விளக்கி, தன் வாதத்தை அவர்களுக்கு முன்பாகத் தெளிவாக வைத்தார் அவர். இருதரப்பு வாதப்பிரதிவாதங்களையும் கேட்டுக் கேட்டுக் எரிச்சலான மன்னர், கடைசியாக லாம்பர்ட்டுக்கு முன் ஒரு இறுதி வாய்ப்பை வைத்தார். 'வாழ விரும்புகிறாயா? சாக விரும்புகிறாயா? என்ன சொல்கிறாய்?'

நீண்ட ஒரு பெருமூச்சோடு தீர்க்கமாய்ச் சொன்னார் லாம்பர்ட், 'என் ஆத்துமாவைத் தேவனின் கரங்களிலும், இந்த சரீரத்தையோ உமது கருணைமிகு உத்தரவுக்கும் ஒப்புக்கொடுக்கிறேன்..'

'நீ சாகத்தான் வேண்டும், மத துவேஷிகளின் பாதுகாவலனாய் நான் இருப்பதில்லை' என்று எகத்தாளமாய்ச் சொன்னான் அந்த அரசன். மத எதிர்ப்பாளன் என்று தீர்க்கப்பட்டு உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார் லாம்பர்ட்.

ஆனாலும் அணு அணுவாய் வதைக்கப்பட்டு சாகடிக்கப்பட்ட அந்த நிலையிலும் தலைவணங்காமல் நின்ற லாம்பர்ட், தன் கைகளை உயர்த்தி 'கிறிஸ்துவே அல்லாமல் வேறொருவர் அல்ல, கிறிஸ்துவே அல்லாமல் வேறொருவர் அல்லவே அல்ல' என்று ஆராதித்துக்கொண்டே ஜீவனை விட்டார் அவர்.

வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கும் இந்த நவீன யுகத்திலே, மன நிறைவு என்ற ஒன்றுக்கே இடமில்லாத அளவு நமது தெரிந்துகொள்ளுதல்களின் வரையரைகள் வரம்புமீறி நிற்கின்றன. முன்னே இருக்கும் டிவியின் 200 சேனல்களிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்வது என் சொந்த உரிமை என்றாகிப் போன நிலை. நமக்கோ எல்லாம் விதம்விதமாய் வகை வகையாய் வேண்டும். சாப்பிடுவது, உடுத்துவது, வசிக்கும் வீடு, வாகனங்கள் ஒவ்வொன்றிலும் கணக்கற்ற விதம்விதமான வெரைட்டிகள் நம் வாசல் கதவைத்தட்டி நிற்கிறது. இவை எல்லாவற்றிற்கும் முரணாக, வாழ்க்கையின் மிக முக்கியக் கேள்விகள் நம்மைப் புரட்டியெடுக்கும்போது, நாம் கொடுக்கவேண்டிய ஒரே ஒரு பதில், 'இயேசுவே அல்லாமல் வேறு ஒருவருமல்ல' என்பதே! பரலோகம் செல்ல வேறு ஒரு வழி உண்டா? - அவரே வழி. ஒருவரது வாழ்வில் அவரது முழுமனதான பக்திக்குத் தகுதியான முன்னுரிமை ஒன்று உண்டா? - அது கிறிஸ்துவல்லாமல் வேறொருவரும் இல்லை - அவரே எல்லாரிலும் எல்லாவற்றிலும் உயர்ந்தவர். மனித இதயத்தின் வாஞ்சையையும் தாகத்தையும் அவரையல்லாமல் வேறே ஒருவர் திருப்தி செய்யக்கூடுமோ ? கிறிஸ்துவேயன்றி வேறொருவரும் திருப்தி செய்ய இயலாது. சத்தியத்துக்கு மாற்று வேறொன்றுமில்லை. வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகள் மனதில் மோதியடிக்கையில் 'கிறிஸ்துவே அன்றி சந்தோஷமும் சமாதானமும் அருளி, ஆத்துமாவைத் திருப்தியாக்குபவர் வேறொருவரும் இல்லவே இல்லை' என்று தைரியமாய் சாட்சியிட நீங்கள் ஆயத்தமா?

இப்படியும் ஒரு துரோகமா ?

08

ருமேனியா - சகோதரர் வாசிலே

‘எல்லா மூடநம்பிக்கைகளையும் தேசத்திலிருந்து ஒழிக்கும்’ ஏழு அம்சத் திட்டத்தின் ஏழாண்டுப் பகுதியின் ஒரு பகுதியாக, சபைகளை இழுத்து மூடி, போதகர்களைக் கைது செய்வதில் முழுமூச்சாய் இறங்கியிருந்தது கம்யூனிச ருமேனியா.

தாங்களும் அரசாங்கத்தின் கண்களுக்கு வெகு நாட்களுக்குத் தப்ப முடியாது என்று அறிந்தும், தங்கள் சிறிய வீட்டிலேயே சகோதரர் வாசிலேயும் அவரது மனைவியும் சபைக் கூட்டங்களை நடத்தி வந்தனர். ‘கர்த்தாவே, சிறையில் வாடும் ஏதோ ஒருவருக்கு என்னுடைய உதவி அவசியப்படுகிறதென்று நீர் கண்டால், என்னை மீண்டும் சிறைக்கு அனுப்பும்’ என்று ஒவ்வொரு மாலையிலும் வாசிலே ஜெபித்து வந்தார். வேறுவழியின்றி அரைமனதோடு அவரது மனைவியும் அதற்கு ஆமென் என்று சொல்லி வந்தார்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

மத்தேயு 6:12

அதன் பின் அவர்களது சபை விசுவாசிகளில் ஒருவரது வீட்டில் ரெய்டு நடத்தப்பட்டு, வாசிலேயின் பிரசங்கக் குறிப்புகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று அவருக்குத் தெரியவந்தது. சகோதரர் வாசிலேயின் உடன் போதகரும், ஊழியரும் நண்பருமானவரே போலீஸுக்குத் துப்புக்கொடுக்கும் இன்ஃபார்மராகி, வாசிலேயையும் அவரது சபையையும் காட்டிக்கொடுத்தது பிறகு தெரியவந்தது.

ஒரு நாள் இரவு 1 மணிக்குப் போதகர் வாசிலேயின் சிறிய அப்பார்ட்மண்ட் வீடு ரெய்டு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார். அவர்கள் அவரது கையில் விலங்கு மாட்டும்போது, ‘என் மனைவியை முத்தமிட்டு விடைபெற நீங்கள் என்னை அனுமதிக்காதவரை என்னால் இங்கிருந்து சமாதானத்தோடு புறப்பட இயலாது’ என்று வார்சிலே சொல்ல, அரைமனதோடு ஒப்புக்கொண்டனர் அவர்கள்.

கணவனும் மனைவியும் கடைசியாகக் கரம் பிடித்துப் பாட்டுப்பாடி, ஜெபித்ததைக் கண்ட போலீஸ் கண் கலங்கியது. வாசிலேயின் மனைவி கண்ணீரோடு அவர்கள் பின்னே ஓடிவர, போலீஸ் அவரை வண்டியில் ஏற்றியது. அதன் பின்வந்த பல வருடங்கள் கண்காணாமலே போகுமுன் போதகர் வாசிலே தன் மனைவியைப் பார்த்து, 'என் அன்பை நமது மகனுக்கும், முக்கியமாக, என்னைக் காட்டிக்கொடுத்த பாஸ்டருக்கும் மறக்காமல் சொல்லிவிடு..' என்று கடைசியாகச் சொல்லிவிட்டுக் கண்மறைவானார்.

மிக மோசமான துரோகம் ஒன்றுக்கு மிக அதிகமான மன்னிப்பு ஒன்றும் இன்றியமையாததாயிருக்கிறது. நமது எதிரிகள் அத்தனை ஆக்ரோஷமாய் நமக்கு எதிராக வரும்போது, நமது அன்பின் கிரியையும் மன்னிப்பும் மறத்தலும் அவ்வளவு அதிகமாய் இருக்க வேண்டாமோ? நம்மைக் காட்டிக்கொடுக்க நமது எதிரி அவ்வளவு கீழ்த்தரமாய் இறங்குவானானால், நாம் அவனை மன்னிக்கும் உயரத்தின் உச்சாணிக்கு அவ்வளவு உயரமாய் ஏற வேண்டாமோ? காட்டிக் கொடுத்தலின் ஆழமான வடுக்கள், மன்னிப்புக்கு நமது இருதயத்தை இறுக மூடிவிடுகின்றன. மன்னித்தலின் பகுதியில் நீங்கள் கடுமையாய் இருப்பீர்களானால், உங்கள் சொந்தப் பாவங்களிலிருந்து விடுபடுவது உங்களுக்கு அவ்வளவு எளிதாய் இராது. காட்டிக்கொடுக்கப்படுதல் என்பது மிக மோசமானது. ஆனால் அதைவிடத் தாங்க முடியாத தோல்வி என்பது கசப்பை உள்வைத்துக்கொண்டே வாழ்வதென்பது. இன்றைக்கு யாருக்கு நீங்கள் மன்னிப்பை வாரி வழங்க விரும்புகிறீர்கள் ?

இப்படியும் ஒரு பரிசா ?

09

ரஷ்யா : கேப்டன் மார்க்கோ



'என்னடா இது ? உனக்கு என்னடா வேணும்?' என்று அந்த சிறுவனைப் பார்த்து உறுமினான் அந்த சோவியத் கேப்டன் மார்க்கோ.

அந்தக் கம்யூனிஸ்ட் ஆபீஸருக்கு முன்னால் எச்சில் விழுங்கிக்கொண்டு பயத்தோடு நின்றுகொண்டிருந்தான், அந்தப் பன்னிரண்டே வயது நிரம்பிய சிறுவன். 'கேப்டன், நீங்க தான் எங்க அம்மா, அப்பாவை ஜெயில்ல போட்டீங்க, இன்னிக்கு எங்க அம்மாவுக்குப் பிறந்த நாள், எப்பவும் பிறந்தநாள்ல நான் எங்க அம்மாவுக்கு ஒரு பூங்கொத்து கொடுப்பது என்னோட வழக்கம். என்னைப் பகைக்கிறவங்களையும் நேசிக்கணும்.. தீமைக்கு நன்மையைத்தான் பதிலா செய்யணும்னு எங்க அம்மா எனக்குச் சொல்லிக் குடுத்ததுனால, இந்தப் பூங்கொத்தை உங்க பிள்ளைகளின் அம்மாவுக்கு, எங்க அம்மா நினைவா கொண்டு வந்தேன். சார், தயவுசெய்து இதைக் கொண்டுபோய் இன்னிக்கு நைட், ஆன்ட்டிகிட்ட கொடுத்து, என்னோட அன்பையும், இயேசு அவங்கள நேசிக்கிறார் என்பதையும் உங்க ஒயிஃப் கிட்ட, சொல்லுவீங்களா ப்ளீஸ் ?'

அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்..'

கொலோ 2:2

தான், ஈவு இரக்கமின்றி அடித்து சித்ரவதைப்படுத்தும்போது, அவைகள் ஒன்றினாலும் அசைக்கப்படாத கிறிஸ்தவர்களை இதுவரை கண்டிருந்த கேப்டன் மார்க்கோ, இந்தச் சிறுபையனின் அன்பைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்துபோனான். கண்களிலிருந்து கண்ணீர் கொட்ட, அப்படியே தன் மேஜையைப் பிடித்தவனாக, மெதுவாய் எழுந்து சென்று, அந்த சிறுவனை ஒரு தகப்பனைப் போல இறுகப்பற்றிக்கொண்டான். கிறிஸ்துவின் அன்பினால் மார்க்கோவின் இறுகிய இருதயம் இளகி ஓடியது. அதற்குப்பின் அவன் கிறிஸ்தவர்களை கைது செய்யவோ துன்புறுத்தவோ இல்லை. அவனுக்குள் நிகழ்ந்த மாற்றத்தினால் சீக்கிரமே அவனும் கைது செய்யப்பட்டான்.

அந்தச் சிறுவன் அவனைச் சந்தித்த சில மாதங்களுக்குள்ளாகவே, முன்பு யாரைக் கைது செய்து கொடுமைப்படுத்தினானோ, அதே நாற்றமெடுத்த சிறை செல்லில் அவர்களோடே கூட அடைக்கப்பட்டான் மார்க்கோ. அந்தச் சிறு பையனைப்பற்றியும் அவன் கொண்டு தந்த பூங்கொத்தைப் பற்றியும் கண்ணீரோடு அவர்களுக்கு விவரித்தான் அவன். தான் ஒரு காலத்தில் யார் யாரையெல்லாம் தேடித்தேடி வேட்டையாடிக் கைது செய்தானோ, அவர்களோடேயே அந்த சிறையறையில் தானும் அடைக்கப்பட்டதை மிகுந்த கனத்துக்குரியதாய்க் கண்டான் அவன்.

தாராள மனப்பான்மை ஒரு விசுவாசியின் இரண்டாவது குணலட்சணம். தங்கள் அன்பைக் கிரியைகளினால் வெளிப்படுத்துவதைக்கண்டு, உண்மை விசுவாசிகளை மற்றவர்கள் இனம் கண்டுகொள்வார்கள் என்று இயேசு கற்பித்தார். இது, நம்மை நேசிப்பவர்களையே நேசித்துக்கொண்டிருக்கும் அன்பு அல்ல. அடிக்கடி, முன்பின் அறியாத, அந்நியருக்கும், ஏன் விரோதிகளிடம் கூட தாராளமான அன்பின் மனப்பான்மையை வெளிப்படுத்துவதே, இயேசுவின் போதனைகளை மிகச் சிறந்த விதத்தில் நடைமுறைப்படுத்துவதாம். நாம் யாருக்கு இப்படிப்பட்டவைகளைத் தாராளமாய் வெளிப்படுத்துகிறோமோ, அவர்கள் மட்டுமல்லாது, மற்றவர்களும் இவைகளைப் பார்த்துக் குழம்பித்தான் போகிறார்கள்.

நியாயமின்றித் தன் மேலதிகாரியால் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டு இருதயத்தில் காயப்பட்ட விசுவாசி ஒருவர், தன்னை வெளியேற்றிய அதே அதிகாரிக்காக ஜெபிப்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள்! குடித்துவிட்டு வாகனம் ஓட்டி அதினால் தன் பிள்ளையைக் கொன்றுபோட்ட அந்த டிரைவருக்குக் கோர்ட்டில் மனதார மன்னிப்பு வழங்கிய, மனமுடைந்த அந்தப் பெற்றோர், தங்களைச் சுற்றியிருந்தவர்களிடம் ஏற்படுத்திய அந்தத் தாக்கத்தைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட தாராள மனதை உலகம் புரிந்துகொள்ள முடிவதில்லை.

ஆனாலும் இதைப் போன்ற செயல்கள் எப்போதுமே உலகத்தைப் பாதிப்பது என்னவோ உண்மையே!

மற்றவர்களுக்குத் தாராளமாய் அன்பை அள்ளி வழங்கும்போதும், மனப்பூர்வமாய் மன்னிக்கும்போதும், நாம் நம்மையே, தேவனைப் போலிருக்கிறோம் என்று நிச்சயமாய் எண்ணிக்கொள்வதில்லை. தேவன் தமது ஒரே குமாரனையே இந்த உலகத்துக்குக் கொடுத்து, தான் எவ்வளவாய் இவ்வுலகை நேசிக்கிறேன் என்று தமது அன்பை வெளிப்படுத்தி, நமது இரட்சிப்புக்கு தமது குமாரனின் பலியையே விலையாகத் தந்தார். தேவனின் ராஜ்யத்துக்கென்று, யாரோ ஒருவர் தனது உள்ளத்தைத் திறக்கும்படியாக, இன்று நீங்கள் எதைக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறீர்கள்?

இப்படியும் ஒரு நிர்ணயமா ?

10

சீனா - போதகர் லீ டெக்ஸியன்



பிரியமானவர்களே, கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளா னதால் சந்தோஷப்படுங்கள்.

1 பேதுரு4:13

'நான் சாகும்வரை பிரசங்கித்துக்கொண்டே இருப்பேன்..'

பாஸ்டர் லீ டெக்ஸியன் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது அந்த அந்தரங்க சபைக்குள் புயலாய் நுழைந்தது பப்ளிக் செயூரிட்டி போலீஸ். அவர்கள் அவரையும் அந்த சபையினரையும் அடித்து இழுத்துக் சென்றனர் போலீஸ் ஸ்டேஷனுக்கு.

ஸ்டேஷனில் அவர் இரத்த வாந்தி எடுக்கும் வரை அவரை அடித்து மிதித்தது போலீஸ். அவர் மூர்ச்சித்து சுயநினைவின்றி விழும்வரை அவரது பைபிளை வைத்தே அவரது முகத்தில் அடித்தனர் அவர்கள். ஆனாலும் ஏழு மணி நேரம் கழித்து வெளியில் அனுப்பப்பட்ட அந்த மனிதர் மறுபடியும் பிரசங்கிக்க ஆரம்பித்தார். அடுத்த முறை அவரைப் பிரசங்கிக் கண்ட ஊறிய ஆபீசர்கள் அவரோடு சில மேல்நாட்டு ஊழியர்களையும் கண்டு திரும்பிச் சென்று இன்னும் அதிமான போலீஸ் படையைத் தங்களுடன் அழைத்து வந்து அவரைக் கம்புகளாலும் இரும்புக் கம்பிகளாலும் அடித்துத் துவைத்தனர். ஆனாலும் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டிருந்த பைபிளை மட்டும் அவர் விடவே இல்லை.

'சீனாவில் மத சுதந்திரம் உண்டு என்று சொல்கிறீர்களே?' பின்னை ஏன் இவரை இப்படி அடிக்கிறீர்கள்?' என்று எதிர்ப்புத் தெரிவித்த அந்த மேலை நாட்டவர்களோடு வீட்டு ஒனரையும் சேர்த்து இழுத்துச் சென்றது போலீஸ். அந்த சம்பவத்துக்குப் பின் அந்தக் கிராமத்தில் பெரிய கூட்டங்கள் நிறுத்தப்பட்டுப்போனாலும் சபை கூடுதல் மட்டும் நிற்கவே இல்லை. இப்போதும் நாற்பதுக்கும் மேற்பட்ட சிறு குழுக்களாகக் கூடிவரும் அவர்களோடு புதியவர்கள் பலரும் கிறிஸ்துவைக் கண்டடைகிறார்கள்.இன்னொரு இடத்தில் இதே பாஸ்டர் லீ பிரசங்கித்துக்கொண்டிருந்தார். இப்பொழுதும் கதவுகளை உடைத்துக்கொண்டு உள் நுழைந்து அவரை இழுத்துச் செல்கிறது போலீஸ்.

'கொஞ்சம் நில்லுங்கள், என் பையை எடுத்துக்கொள்கிறேன்..' என்று தைரியமாய்ச் சொன்ன லீ டெக்ஸியனின் தைரியத்தைக் கண்ட போலீஸ், 'பையில் என்ன இருக்கிறது ?' என்று பிடுங்கி அதைத் திறந்து பார்த்தபோது ஒரு போர்வையும் ஒரு ஜோடி மாற்றுத் துணியும் மட்டும் இருந்தது. 'நான் இன்று கைது செய்யப்படுவேன் என்று அறிந்திருந்தேன். அதனால் தான் தயாராக இருந்தேன்' என்று லீ சொன்னார்.

பாஸ்டர் லீ இதற்கு முன்னாலும் பலமுறை கைது செய்யப்பட்டிருந்தார். குறிப்பிட்ட அந்த கிராமத்துக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் அவர் வந்து போவது போலீசுக்குத் தெரியவந்திருக்கிறது என்று அவர் எச்சரிக்கப்பட்டிருந்ததால், தான் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் என்று தன் பையை மாத்திரமல்ல தனது மனதையும் அவர் எப்போதும் ஆயத்தப்படுத்தியே வைத்திருந்தார். சுவிசேஷத்துக்காக எந்த விலையையும் செலுத்த அவர் ஆயத்தமாகவே இருந்தார்.

அவருக்கு நிச்சயமாகவே தெரியும் - தேவன் அவரைக் காத்துக்கொள்ள வல்லவர் என்று - ஆம் சிறையிலும் கூட !

இப்படியும் ஒரு ஜெபமா ?

11

புனித ஃபிரான்சிஸ் அசிசியின் ஜெபம்
(1181 - 1226)

'தேவனே, என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கும்..!'

எங்கே பகைமை நிறைந்துள்ளதோ அங்கே அன்பையும்..

எங்கே வெறுப்பு நிறைந்துள்ளதோ அங்கே மன்னிப்பையும்..

எங்கே சந்தேகம் நிறைந்துள்ளதோ அங்கே விசுவாசத்தையும்..

எங்கு அவநம்பிக்கை நிறைந்துள்ளதோ அங்கே
நம்பிக்கையையும்..

எங்கே இருள் சூழ்ந்துள்ளதோ அங்கே ஒளியையும்..

எங்கே மனக்கவலை நிறைந்துள்ளதோ அங்கே
மனமகிழ்வையும்.. விதைத்திட அருள்தாரும் !

என் தேவனே, நான் ஆறுதல் பெற விரும்புவதைவிட
மற்றவருக்கு ஆறுதல் அளிக்கவும்..

நான் புரிந்து கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பதை
விட பிறரைப் புரிந்து கொள்ளவும்..

எல்லோரும் என்னை அன்பு செய்ய வேண்டுமென்று
வாஞ்சிப்பதைவிட பிறரை நான் அன்பு செய்யவும்.. எனக்கு
வரம் தருவீராக !

ஏனெனில், கொடுப்பதால் அல்லவோ பெற்றுக் கொள்கிறோம்!
மன்னிப்பதால் அல்லவோ மன்னிப்புப் பெறுகிறோம் !

அனுதினமும் சுயத்துக்குச் சாவதால் அல்லவோ நித்திய
வாழ்வடைவோம் !

ஆம்.. அப்படியே ஆவதாக !
ஆமென்..

இப்படியும் ஒரு மகிழ்ச்சியின் புன்முறுவலா ? 12

சைபீரியா - பவுலோஸ்

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங் களானாலும், வருங்காரியங்களானா லும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

ரோமர் 8:36-39

பவுலோஸை எத்தனையோ மணிக்கணக்காய் அடித்துத் துவைத்து வதைத்துக்கொண்டிருந்த அந்த சோவியத் ஆபீஸர் அவரைப் பார்த்து, 'இனி உன்னை நாங்கள் இப்படி சித்ரவதைப் படுத்தப்போவதில்லை..ஆனால் பனி ஒருபோதும் உருகாத சைபீரியாவுக்கு அனுப்பப்போகிறோம் பார், அந்தத் தண்ணியில்லாப் பனிக்காட்டில் நீயும் உன் குடும்பமும் செத்து நாறுவீர்கள்' என்று எகத்தாளமாய்ச் சொன்னபோது, பவுலோஸ் அந்த மனிதனைப் பார்த்து மெலிதாய்ப் புன்முறுவல் செய்தார்..

இன்னும் உடைந்து போவதற்குப் பதிலாய்ச் சிரித்துக்கொண்டேயிருந்த பவுலோஸ், 'கேப்டன், இந்த பூமி முழுவதும் என் அப்பாவினுடையது.. நீர் என்னை எங்கே கொண்டு போட்டாலும், நான் என் அப்பாவின் பூமியிலேதான் இருப்பேன் ' என்றார். அவரை ஆழமாய் உற்றுநோக்கிய கேப்டன், 'உன்னுடையதெல்லாற்றையும் உரிந்து கொள்வோம் நாங்கள்' என்று உறுமினான்..

'அப்படியானால் உமக்கு மிக உயரமான ஒரு ஏணி வேண்டியதாயிருக்கும், ஏனென்றால் என்னுடைய பொக்கிஷங்களெல்லாம் பரலோகத்தில் அல்லவோ சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது?' என்று இன்னுமொரு அழகான புன்முறுவலோடு சொன்னார் பவுலோஸ்.

இப்போது இன்னும் கொதித்துப்போன அந்த ஆபீசர், 'உன் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியால் சுட்டுவிடுவேன்' என்று கத்த, 'சாவுக்கு அஞ்சுபவனல்ல நான், இந்த உலகத்தில் நீர் என் உயிரையும் வாழ்க்கையும் பறித்தால், என் அழகும் ஆனந்தமுமான நிஜமான வாழ்க்கையே அப்போது தான் தொடங்கும் கேப்டன்' என்று பவுலோஸ் சொன்னபோது அவரது கிழிந்த சட்டையைப் பிடித்து உலுக்கிய கேப்டன், 'இதோ பார், நாங்கள் உன்னைக் கொல்லப்போவதில்லை, இந்த தனிமை செல்லில் நீ தனியே அடைபட்டு சாகடிக்கப்படுவாய்; ஒருவரையும் உன்னைப் பார்க்க அனுமதிக்கமாட்டோம்' என்று இன்னும் கூச்சலிட்டான்.

அப்போதும் பவுலோஸ் சிரித்துக்கொண்டே சொன்னார், ‘எனக்கு ஒரு நண்பர் உண்டு, அவர் எந்தப் பூட்டிய கதவுக்குள்ளும் இரும்புத்திரைக்குள்ளும் நுழைந்து வருவார், அந்தக் கிறிஸ்துவின் அன்பிலிருந்து ஒருவரும் என்னைப் பிரிக்க முடியாது..’

எதிர்காலம் நிச்சயமற்ற எந்த சூழ்நிலையிலும் ஒரு காரியத்தைக் குறித்து நாம் நிச்சயமாய் இருக்கலாம். அந்தச் சூழலை நம்மோடு கூட கிறிஸ்துவும் எதிர்கொள்ளுவார். அது தனிப்பட்ட சோதனையோ, மற்றவர்களோடு சேர்ந்து அனுபவிக்கும் வேதனையோ, நாம் ஒருபோதும் தனிமையாய் மட்டும் இருப்பதில்லை. மாறாக, வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில் எல்லா மனித உறவுகளும் நம்மைக் கைவிடலாம். வாழ்க்கைப் பாதையில், அவர்களும் நம்மோடு நடந்துவர இயலாத வேதனையின் தண்ணீரும் கண்ணீரும் ஆழமான அப்படிப்பட்ட இடங்களும் உண்டு..

நமது நொந்து நொடிந்த இருதயத்தின் இரும்புக் கதவுகளினூடே கடந்து வந்து நமது பாடுகளை, நம்முடன் தானும் பகிர்ந்துகொள்ளும் வல்லமை இயேசு ஒருவருக்கே உண்டு. அவருடைய சர்வ ஞானத்திலே நமது சூழ்நிலைகளிலிருந்து நம்மைத் தப்புவிக்க அவர் சித்தமாயில்லாமல் போனாலும், அந்தச் சூழ்நிலைகளுக்குள்ளே நாம் கடந்துபோகும்போது, அவரது நிச்சயமான பிரசன்னமும் சமூகமும் மாத்திரம் நம்மைவிட்டு நீங்காதபடி பார்த்து, அதிலிருந்து கடந்து போக உதவி செய்வார் அவர். உங்களை விட்டுப் பிரியாத நண்பர் ஒருவர் உங்களுக்கு உண்டு என்று அறிந்து ஆனந்தமாய் மகிழுங்கள்..

இப்படியும் ஒரு தியாகமா ?

13

இந்தோனேஷியா -
பாஸ்டர் ஹென்றிக் பட்டிவெல்

வெளியிலே கொலை செய்யப்பட்டுக் குற்றுயிராய்க் கிடக்கும் தங்களைப் போன்ற சக விசுவாசிகளின் குலைநடுங்கும் அலறலைக் கேட்டு அறைக்குள்ளேயே நடுங்கிக் கிடந்தனர் அவர்கள். அந்த இந்தோனேஷிய வாலிபர் முகாமை நடத்திக் கொண்டிருந்த பாஸ்டர் ஹென்றிக் பட்டிவெலும் அவரது மனைவியும் இப்போது அந்த வாலிபர்களின் உயிருக்குத் தங்களை உத்தரவாதிகளாய் உணர்ந்து நின்றனர். ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உத்வேகமாகவும், ஆராதனையும் அழகுமாய் நிறைந்திருந்த அந்த முகாம் இப்போது தாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் ஒளிந்திருந்த அந்தக் கட்டிடத்தை முஸ்லிம் தீவிரவாதிகள் சூழ்ந்து கொண்டபோது, பாஸ்டர் பட்டிவெல் வெளியே வந்தார். இரத்தவெறி கொண்ட அந்தக் கூட்டத்தின் கவனத்தைத் தன் மனைவி மற்றும் வாலிபர்கள் மீதிருந்து அவர் திசைதிருப்பிய அந்நேரத்தில் கூட்டம் அந்தப் போதகர் மீது பாய, கண்ணிமைக்கும் நேரத்தில் கட்டிடத்திலிருந்த அனைவரும் தப்பியோடினார்கள்.

'இயேசுவே, எனக்கு உதவி செய்யும்' என்பதே அவரது வாயிலிருந்து வெளிந்த கடைசி வார்த்தையாயிருந்தது. அவரது மனைவி அதன் பின் அவரை சவப்பெட்டியில் தான் பார்க்க நேர்ந்தது. அவரது கைகளிலும் உடலெங்கும் வெட்டுக்காயங்கள் நிறைந்திருந்தது. 'இப்படி ஒன்றை நீர் ஏன் எங்களுக்கு சம்பவிக்கச் செய்தீர்? என் கணவனை நீர் காப்பாற்றாமல் போனதென்ன கர்த்தாவே ? என்று கோபத்திலும் வேதனையிலும் தேவனை நோக்கிக் கதறினார் அவரது மனைவி.

'நீ இயேசுவையும் நேசித்து, அவரை விட உன் குடும்பத்தை அதிகமாய் நேசிப்பாயானால் கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு நீ பாத்திரனல்ல' என்று கர்த்தர் அவருக்குச் சொல்லியிருந்ததையும், தான், கிறிஸ்துவின் இராஜ்யத்துக்காக மரிக்கவும் ஆயத்தமாய் இருப்பதாகவும் தன் கணவன், தான் தாக்கப்படும் சில நாட்களுக்கு முன்பாகச் சொல்லியிருந்த இந்த வார்த்தைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே அவளுக்கு ஞாபகப்படுத்தினார்.

அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்..'

கொலோ 2:2

இந்த வார்த்தைகளை நினைத்து அவள் தன் கசப்பை மறந்தாள். இப்பொழுதும் அவள் தன் சபையோடு கூட இந்தோனேஷியாவில் ஊழியம் செய்கிறாள். சுதந்திர நாடுகளிலிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு அவள் சொல்லும் ஒரே ஒரு ஆலோசனை, 'உபத்திரவங்கள் போராட்டங்கள் மத்தியில் நீங்கள் திடமாய் நிற்க வேண்டுமானால், தேவனை இன்னும் உண்மையும் உத்தமமுமாய் அதிகமாய்த் தேடுங்கள்' என்பதே!

நாம் பிரச்சனைகளைத் தேடிக் கொண்டு செல்லவேண்டிய அவசியமில்லை. அவைகள் ஏற்கனவே நம் வீட்டு வாசலில் தான் நிற்கின்றன. சோதனைகள் என்பது நமது அன்றாட வாழ்வின் பகுதியே என்று இயேசு கிறிஸ்து தமது சீஷருக்கு அடிக்கடி நினைவூட்டி வந்தார். தேவனை உண்மையும் உத்தமமும் உளமாறத் தேடுவதென்பது நம் வாழ்வில் பிரச்சனைகளைக் கூட்டிக்கொள்வது என்பதல்ல. அப்படி அல்லவே அல்ல. தேவனோடு ஆழமும் நெருக்கமுமான உறவைத் தேடுவதின் பயன், தவிர்க்க முடியாத சூழ்நிலைகளுக்காக நம்மை நன்றாக ஆயத்தப்படுத்திக் கொள்வதே.

நாம் போகும் வழியில் வரும் பிரச்சனைகளை நாம் எதிர்கொண்டே ஆகவேண்டியுள்ளது. அதைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு எதுவும் நமக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆனாலும் அந்தப் பிரச்சனைகளுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படியாக, தேவனோடு உள்ள உறவை நாம் தெரிந்துகொள்ள இயலும். சில சோதனைகள், கிறிஸ்துவுக்காக நமது ஜீவனையே இழக்கவேண்டிய விலைக்கிரயம் கேட்பவை. ஆனாலும் உண்மையான தியாகமென்பது கிறிஸ்துவுக்காக ஜீவனைக் கொடுப்பது கூட அல்ல. அதிகப்படியான, அளவுக்கதிகமான தியாகம் என்பது ஜீவனை இழக்க நேரிடும் சூழலுக்கெல்லாம் மிக முன்பாகவே வந்துவிட வேண்டிய ஒன்று. உயிரை இழக்கும் தியாகம் என்பதற்கு முன்பாகவே, தேவனோடு நெருங்கிய அந்நியோன்யத்தை வளர்த்துக்கொள்ளும் முகமாக, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சுயத்தை நாம் சிலுவையில் அறைந்து பலியிட்டே ஆக வேண்டும். கிறிஸ்துவோடு கூடிய மிக அழகான ஒரு உறவைப் பின்தொடரும்படியாக நாம் நமக்குள்ள எல்லாவற்றையும் தியாகம் செய்து விடும்போது, நமது கடினமான பகுதிகளை நாம் ஏற்கனவே கடந்து விட்டிருப்போம்..

இப்படியும் ஒரு வலியா ?

14

சூடான் : சூடானிய சிறுவர்கள்



'யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன் மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.'

2கொரி 11:24,25

'அல்லாவே கடவுள், முகம்மது அவரது நபி..'சொல்லு.. சொல்லு.. சொல்லு என்று அந்தச் சிறுவர்களைக் காலால் பந்தாடி, முகத்தையும் வயிற்றையும் முஷ்டியால் குத்திக் கத்திக் கொண்டிருந்தனர் அந்த முஸ்லீம் வீரர்கள்.

தொடர்ந்து அடியும் உதையும் வாங்கினாலும், 'அம்மாவைப் பார்க்கணும்' என்று அந்த நான்கு சூடானிய சிறுவர்கள் அழுது கொண்டிருந்தார்களே தவிர, அவர்கள் தங்கள் கிறிஸ்தவத்தை மறுதலித்து விட்டால் தாங்கள் உயிரோடு விட்டுவிடப்படுவோம் என்று அறிந்தும் கூட அவர்கள் மறுதலிக்கவே இல்லை. அவர்களின் கறுப்பான உடலின் மேல் சிவப்பு நிற இரத்தம் ஒழுகி வழிந்து கொண்டேயிருந்தாலும் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை மட்டும் அவர்கள் விடுவதாயில்லை.

அவர்களை விட மூத்த சிறுவர்கள் சிலர் பயத்தில் உறைந்து போய் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இஸ்லாமியத் தீவிரவாதிகளால் தங்கள் தென் சூடானியக் குடும்பங்கள் வாளால் வெட்டப்பட்டு செத்துக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டிருந்தனர். இப்பொழுதோ தங்கள் உறவினரும் நண்பர்களுமான அந்த நான்கு சிறுவர்களும் தங்கள் கண்களுக்கு முன்பாகவே செத்து மடிவதை நேரில் கண்டனர். அதுவும், அந்த நால்வரில் சின்னப்பையன் ஒருவன் ஐந்தே வயதாயிருந்தான்.

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த, மூத்தவர்களான அந்த சிறுவர்கள் ஏற்கனவே எரியும் நிலக்கரியின் மேல் படுக்க வைக்கப்பட்டு, நமாஸ் படிக்கும்படியாகவும் இஸ்லாமிய மதத்தைத் தழுவும்படியாகவும் வற்புறுத்தப்பட்டிருந்தனர். ஆனால் அந்தக் கொடுமையான வலியின் மத்தியிலும் அவர்களில் ஒருவராவது விட்டுக் கொடுக்கவே இல்லை.

அன்றைய நாளின் போலீஸ் ரெய்டில் மட்டும் 14 சிறுவர்களும் 13 சிறுமிகளும் கடத்தப்பட்டிருந்தனர். அந்தச் சிறுமிகளில் ஒருவராவது அதன் பின் கண்டுபிடிக்கப்படவே இல்லை. அவர்கள் வட சூடானுக்கு அடிமைகளாகவோ அல்லது அங்குள்ள செல்வந்தர்களின் பாலிய இச்சைகளைத் தீர்ப்பவர்களாகவோ விற்கப்படுவர். சிறுவர்கள் எவ்வளவு சித்ரவதைப்படுத்தப்பட்டும், அவர்களில் ஒருவராவது தங்கள் விசுவாசத்தை விட்டுவிடவேயில்லை.

அடுத்த நாள் இரவு மூத்த சிறுவர்கள் மட்டும் முந்திய இரவுகளின் வடுக்களைத் தங்கள் உடலில் இன்னும் சுமந்தவர்களாய் தப்பிச் சென்றனர். ஆனாலும் அவர்களில் ஒருவரும் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்கவேயில்லை.

இப்படியும் ஒரு எதிர்ப்பா ?

15

ருமேனியா : ரிச்சர்ட் உம்பிராண்ட்

'நான் கம்யூனிஸ்ட்டுகளை வியந்து ரசிக்கிறேன்..' -



கம்யூனிஸச் சிறைச்சாலைகளிலே 14 வருடங்கள் கழித்த ஒரு பாஸ்டர் வாயிலிருந்து வந்த இந்த வார்த்தைகள் விநோதமாகத் தோன்றினாலும் இதைச் சொன்ன பாஸ்டர் ரிச்சர்ட் உம்பிராண்ட் என்னவோ அதை உண்மையாக உணர்ந்தே சொன்னார்.

'தாங்கள் கற்பனை செய்து வந்த தங்கள் கொள்கைகளை உண்மையென்று சாதிப்பதில் நிறைய கம்யூனிஸ்ட்டுகள் அதற்காகச் சாகவும் தயாராயிருந்தனர். நான் சபைகளில் கண்டிருந்த சில கிறிஸ்தவர்களைக் காட்டிலும் கூட அவர்கள் தங்கள் கொள்கைகளில் முழு அர்ப்பணமும் தீவிரமும் கொண்டு தீயாய் நின்றார்கள். ஒவ்வொரு விரோதியிலும் ரிச்சர்ட் உம்பிராண்ட் ஒரு அருமையான சிநேகிதனையும், அருமையான கிறிஸ்தவனையுமே காணக் கிடைக்கக் கண்டார். தனது எதிரிகளை நேசிப்பதின் மூலம், அவர்களில் அநேகர் கிறிஸ்துவிடம் வருவதை மட்டுமல்ல, அவர்களுடன் சாட்சி பகர அதிகமதிகமான வாய்ப்புகள் பெருகுவதையும் கண்டார் அவர். அவர் சொல்லுகிறார், 'இந்த நாறிப்போன யூதன்' எழுதும் புத்தகங்களைப் படிக்காதீர்கள் என்று அவர்கள் எனக்கு விரோதமாய்த் தூற்றித் திரிந்தபோது, மக்கள் 'இந்த நாற்றமெடுத்த யூதன்' என்ன எழுதியிருக்கிறான் பார்ப்போம் என்று உடனடியாக ஓடிச்சென்று அவைகளை வாங்கிப் படித்தார்கள். 'எனக்கு விரோதமாய்ப் பேசும் எவரையும் நான் வரவேற்கிறேன்.' ஒரு வேளை அநேகர் நீங்கள் சொல்வதைக் கேட்க விருப்பமின்றி இருக்கலாம்.. ஆனால் நீங்கள் நம்பும் உங்கள் சத்தியத்தை நீங்கள் அவர்கள் முன் வைக்கும் முன்பாக நீங்கள் அவர்களைச் சவாலிட வேண்டும், அவர்களை உங்கள் கேள்விகளால் சிந்திக்க வைக்க வேண்டும். ஆனால் அதற்கு முன் அவர்கள் எப்படிப்பட்ட சூழலிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்கு புரிந்துகொண்டு அவர்களோடு மிகவும் புத்திசாலித்தனமாய்ப் பேசவேண்டும். அதே நேரம், மிகவும் அன்பாகவே அவர்களிடம் பேசவேண்டும் என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்..'

உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

மத்தேயு 5:43,44

பாஸ்டர் உம்பிராண்டின் இந்த அறிவுபூர்வமான வார்த்தைகளில் அவர் மிகவும் தேறியவராகவே இருந்தார். அவரது மனைவி சபீனாவின் உறவினர்கள் யாவரும் கொல்லப்பட்ட அந்த வதை முகாமில் பணிபுரிந்த கம்யூனிஸ்ட் நாஜி அதிகாரி ஒருவரையே அவர்கள் இருவரும் தங்கள் வீட்டுக்கு வரவேற்றிருந்தார்கள். அவர்களது உளமார்ந்த மன்னிப்பையும் மனமார்ந்த அன்பையும் கண்ட அந்த அதிகாரி கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கென்று ஆதாயம் செய்யப்பட்டார்.

குறிப்பு: மேற்கண்டவைகள் 2001 பெப்ரவரியில் பாஸ்டர் உம்பிராண்ட், தனது மரணத்துக்கு சில நாட்கள் முன்பு கொடுத்த அவரது இறுதி நேர்காணலில் பகிர்ந்து கொள்ளப்பட்டவை.

நமது அன்பின் மூலமாகவே, முக்கியமாக எதிர்ப்புகளை நாம் எதிர்கொள்ளும்போது, மற்றவர்கள் நமது விசுவாசத்தைக் கண்டுகொள்வார்கள் என்றே இயேசு நமக்குக் கற்பித்தார். நமது கிறிஸ்தவக் குடும்பத்திலுள்ளவர்களை நாம் எப்படி நடத்துகிறோமோ, அப்படியே நமது சத்துருக்களையும் நாம் நடத்துவது முக்கியம். சொல்லப்போனால், நம் மேல் தொடுக்கப்படும் விமர்சனங்களுக்கு நாம் கொடுக்கும் மாறுத்தரமும் நடந்து கொள்ளும் விதமுமே, மற்ற எல்லா முன்மாதிரிகைகளைக் காட்டிலும் கிறிஸ்தவத்தில் மிகப்பெரிய பேரொலியாய் எதிரொலிக்கிறது. இந்த வலிமையான தத்துவத்தை விசுவாசிகள் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவார்களானால், உலகத்திலிலுள்ள மற்றவர்களிலிருந்து அவர்கள் தங்களைத் தாங்களே வேறு பிரித்துக்காட்டுவார்கள். எதிர்ப்புக்கு, இயற்கையான பதில் மறுப்புத் தெரிவிப்பதேயானாலும், அதற்குப் பட்சமாகவும் பாசமாகவும் சுபாவ அன்பினால் பதிலளிப்பதும் கூட சாத்தியமே. மாறாக, விசுவாசிகள் தங்கள் விரோதிகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டுமே தவிர, அவர்களைக் கீழாக மதிப்பிடக்கூடாது. எதிர்ப்பும் பகைமையும் இந்தக் கோணத்தில் பார்க்கப்படும்போது, விசுவாசத்தைப் பயிற்சித்துப் பார்க்க அது ஒரு வாய்ப்பாக வரவேற்கப்படுவதுடன், கிறிஸ்துவின் கட்டளைகளை அப்படியே நாம் பின்பற்றுவதற்கும் அது ஏதுவாயிருக்கும்.

இப்படியும் ஒரு பயணமா ?

16

டைட்டானிக்: Dr. ராபர்ட் பேட்மேன்

‘பதட்டப்படாதே, ஆனி, இது நமது விசுவாசம் சோதிக்கப்படும் நேரம், நான் மற்றவர்களுக்கும் உதவிசெய்ய வேண்டியிருப்பதால் இங்கேயே இருக்க வேண்டும்.. ஒரு வேளை இந்த பூமியில் நாம் ஒருவரையொருவர் திரும்பச் சந்திக்கக்கூடாமல் போனாலும் கவலைப்படாதே, நாம் பரலோகத்தில் சந்திப்போம்’ என்று தன் சகோதரியின் கைகளை மெதுவாய்ப் பற்றி அந்த life boat ல் இறங்க உதவி செய்தார் Dr. ராபர்ட் பேட்மேன். இருண்ட பனி நீரின் ஆழத்தின் மேல் அந்த life boat மெதுவாக இறக்கப்பட்டபோது தன் கைக்குட்டையையும் அவளிடம் கொடுத்து, ‘இதைக் கழுத்தில் கட்டிக்கொள் ஆனி, குளிர் பிடித்துக்கொள்ளப்போகிறது’ என்று அவளுக்குப் பிரியாவிடை கொடுத்தார் அவர்.

மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்.

நீதி 19:21

டைட்டானிக் மூழ்கிக் கொண்டிருந்த அந்தப் பயங்கரமான கடைசி நேரத்தில் ம்ஷெ. பேட்மேன் 50 பேரைத் தன்னிடம் கூட்டிச் சேர்த்து, அவர்களைத் தங்கள் மரணத்துக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அதே நாளின் ஆரம்பத்தில் அந்தப் பிரம்மாண்டக் கப்பலில் அவர் நடத்திய ஒரே ஆராதனை, ‘உம்மண்டை தேவனே, நான் சேரட்டும்’ என்ற பாடலுடன் தான் நிறைவுபெற்றிருந்தது.

ராபர்ட் பேட்மேன் ஃப்ளோரிடாவிலுள்ள ஜேக்ஸன்வில்லிலே ஸ்தாபித்திருந்த சென்ட்ரல் சிட்டி மிஷன், அந்த நகரத்துக்கு ஒரு ஆவிக்குரிய கலங்கரைவிளக்காகவே திகழ்ந்தது. அங்கு அடிக்கடி வந்து இரட்சிக்கப்பட்டவர்களெல்லாம் பொதுவாகவே கடல் தொழிலுக்குச் செல்லும் குடிகாரர்களாகவே இருந்தனர்.

‘ஜேக்ஸன்வில்லிலே மனிதர்கள் மத்தியில் அவரை விட வெளிச்சம் வீசுபவர் வேறு எவருமில்லை’ என்றே அழைக்கப்பட்டார் அவர். இங்கிலாந்துக்குச் சென்று கிறிஸ்தவ சமூகப் பணிக் கல்வியைக் கற்றுக்கொண்டு அதைத் தமது ஊழியத்தில் நடைமுறைப்படுத்த இப்போது இந்த டைட்டானிக்கில் அமெரிக்கா செல்லக் கப்பலேறியிருந்தார் அவர்.

ஆனால் அந்த ஏப்ரல் 14, 1912 அன்று இராத்திரியில் பேட்மனின் கப்பல் பனிமலையில் மோதி மூழ்கிக்கொண்டிருந்தது. அப்போது தான் அந்த மரணக் காரிருளின் வேளையிலே கர்த்தர் கற்பித்த ஜெபத்தைச் சொல்லி, தன்னிடம் கூடி வந்தவர்களை ஜெபத்தில் நடத்திக்கொண்டிருந்தார் அவர். அங்கே பாடல் குழுவினர் 'உம்மண்டை தேவனே நான் சேரட்டும்' என்று பாடிக்கொண்டிருக்கும்போதே, அந்தப் பிரம்மாண்ட டைட்டானிக் இருண்டு சில்லிட்ட பனி அலைகளுக்கு நடுவே ஒரு போதும் திரும்பி மேலெழுந்து வரக்கூடாத அட்லாண்ட்டிக் அடியாழத்தில் இறங்கி மூழ்கியது.

நாம் தேவனைச் சிரிக்க வைக்க நிச்சயமான ஒரு வழி உண்டானால், அது 'நாம் தீட்டிய நமது திட்டங்களை அவருக்குச் சொல்வதே' என்று சொல்லப்படுகிறது. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, நமது வாழ்வின் மிகப் பெரிய துணிவும் சாகசமும் நிறைந்த ஒரு பாதையில் நாம் கால் பதிக்கிறோம். அந்தப் பாதையும் பயணமும் அர்த்தமுள்ளதாய் இருக்க வேண்டுமானால் கப்பலின் மாலுமியாகிய அவரது கட்டளைகளுக்கு நம்மை முற்றும் முழுவதுமாய் அர்ப்பணித்தே ஆகவேண்டும். அப்பொழுது நமது வாழ்வின் ஏற்றத்தாழ்வுகள், சீற்றங்கள் புயல்களுக்கு மத்தியிலும் தாம் நாடின துறைமுகத்துக்கு நம்மைப் பத்திரமாய்க் கொண்டு சேர்ப்பார் அவர்.

சில நேரங்களில், நமது வாழ்வின் மிக மோசமான தருணங்கள், அவரது வரைபடமும் திசைக்கருவியுமே பாதை மாறிக் காட்டுகிறதோ என்றும், நாம் வழிதப்பிப்போனோமோ என்றும் சிந்திக்க நம்மை நெருக்குகிறது. நமது வாழ்வுக்கு நாமே வரைந்து கொண்ட திட்டங்களான வரைபடங்களில் அநேக நேரம் இருண்ட ஆழங்களில் ஆங்காங்கே ஓங்கி நிற்கும் கூரிய செங்குத்துப் பாறைகளும் நிலவற்று நீண்ட இருள் மூடும் இரவுகளும் ஏகமாகவே காணப்படுகின்றன.

இந்த யாத்திரை சாதனை நிறைந்த ஒன்றாய் இருக்க நாம் விரும்பினாலும், அது என்னவோ எதிர்காலமறியா விசுவாசத்தில் கால்பதித்து நடக்கும் ஆகாச சாகசம் என்ற ஒன்றேயல்லாமல் வேறெதுவுமில்லை. நமது வாழ்வில் தேவ திட்டங்கள் என்பது எப்போதுமே நமக்கு நாமே தெரிந்துகொள்ளும் திட்டங்களுக்கு முற்றும் முரணான எதிர்முனையில் நம்மை நடத்திச் செல்பவைகளே ! ஆனாலும் நமக்கு மிகச்சிறந்தது எதுவென்று அவர் நன்றாகவே அறிவார்!

இப்படியும் ஒரு சொல்லாடலா ?

17

ஈக்வடார் - நாத்தே செயின்ட்

'சென்ற யுத்த காலத்திலே, நமது இலட்சியத்தை அடைய நாம் நமக்குள்ள யாவற்றையும் மட்டுல்ல, நம்மையே ஊற்றிப் போடவேண்டுமென்று கற்றுத்தரப்பட்டோம். விடுதலையின் விலைக்கிரயத்திலே பங்குகொள்ள நமது தேசம் நம்மை அறைகூவி அழைக்கும்போது அதற்குத் தலைவணங்குவது மட்டுமே நம்மிடம் மீந்திருக்கும் ஒரே ஒரு பதில் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்..

ஆனாலும் உலகளாவிய சுவிசேஷத்துக்கு விலைக்கிரயம் செலுத்த நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை அழைக்கும்போது 'ஐயையோ, அதெல்லாம் ரொம்ப கஷ்டம், எங்களால் முடியாது' என்று அடுத்த யோசனையே இல்லாமல் முகத்தில் அடித்தாற்போல் சொல்லிவிடுகிறோம். செலவு பண்ணுவதும் செலவு பண்ணப்படுவதும், தங்களையே ஊற்றி விடுவதுமே மிஷினரிகளின் அன்றாட வாழ்க்கையாகிப் போகிறது..'

- ஈகுவடார் காடுகளில் 1956 ல் இரத்தசாட்சியாய்க் கொல்லப்பட்ட மிஷினரி நாத்தே செயின்ட்.



இப்படியும் ஒரு அரசாணையா ?

18

லாவோஸ் : கிறிஸ்தவர்கள்



அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ் தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படி கிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயி ருக்கிறது.

அப் 5:29

அந்தப் பதிவுப் படிவத்தின் கீழே லாவோஸின் குறிப்பிட்ட ஒரு பகுதியிலுள்ள மாவட்ட கம்யூனிஸ்ட் அலுவலகத்தின் குலைநடுங்க வைக்கும் சிவப்பு முத்திரையும் கையெழுத்தும் வைக்கப்பட்டிருந்தது. அதில் எழுதப்பட்டவைகளோ உள்ளூர்க் கிறிஸ்தவர்களை இன்னும் கலங்கடிப்பதாக இருந்தது. 'எந்த ஒரு நபராவது, இனமாவது, குடும்பமாவது வேற்று மதங்களான கிறிஸ்தவத்தையோ அல்லது வேறொரு மதத்தையோ ஏற்றுக்கொள்ளும்படியாக ஆசைகாட்டி வஞ்சிக்கப்பட்டிருந்தால், அவர்கள் தங்கள் தாய் மதத்துக்குத் திரும்ப வேண்டும்..வேற்று மதத்தைப் பரப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் ஏதாவது ஓரிடத்தில் மதம் மாறியவர்கள் குழுவாகவோ குடும்பமாகவோ வாழ்ந்தால், அவர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயரச் செய்யப்பட்டு, குடியமர்த்தப்படுவார்கள். வேறு மதத்தைத் தழுவிய குடும்பங்கள், குழுக்கள் மற்றும் கிராமங்களின் பெயர் மற்றும் தனிப்பட்ட நுணுக்கமான புள்ளிவிபரங்கள் கட்சி உறுப்பினர்களால் சேகரிக்கப்பட்டு உடனடியாக மாவட்ட அலுவலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும்; முக்கியமாக, இந்த மாவட்டத்தில் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்களின் முழுத்தகவலும் ஆளுங்கட்சித் தலைமையகத்துக்கு உடனடியாக வந்து சேரவேண்டும்' என்று 1996, ஜூலை 18 தேதியிட்ட அந்தக் கடிதம் கையொப்பமிடப்பட்டு சிவப்பு முத்திரையிடப்பட்டிருந்தது.

சமீபத்தில்தான் லாவோஸிலுள்ள கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவத்தை விட்டுவிட்டு வெளியேறும்படியாய் எழுத்துபூர்வமாய்க் கையெழுத்திட்டுக் கொடுக்க துப்பாக்கி முனையில் பலவந்தம் பண்ணப்பட்டார்கள். அந்த நாஸ்திக அரசாங்கத்துக்கோ, இயேசு கிறிஸ்துவை வணங்கும் கிறிஸ்தவம் ஒன்று தவிர வேறு எம்மதமும் சம்மதம் என்றே இருந்தது. கிறிஸ்தவர்கள் தைரியமாய் தங்கள் விசுவாசத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதால், அரசாங்கத்தின் அராஜகங்களையும் தாண்டி லாவோஸின் சபைகள் விருத்தியடைந்து கொண்டே போகின்றன.

மனித அதிகாரம் தேவனின் கட்டளைகளுக்கு விரோதமாய் முரண்படும்போது அங்கே ஒரு எல்லைக்கோடு கிழிக்கப்பட்டே ஆக வேண்டியுள்ளது.. ஒரு தெரிந்தெடுக்கப்படுதல் அங்கே செய்யப்பட்டே ஆக வேண்டியுள்ளது. ஒன்று மனித அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு நாம் அடங்கவேண்டும் அல்லது தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அதனால் வரும் விளைவுகளைத் துணிந்து எதிர்கொள்ள வேண்டும். சமாதானமே நமது முடிவான நோக்கமாய் இருந்தாலும், மனித அராஜகங்களுக்கு முன்னால் நம்முடைய விருப்புவெறுப்புகள் ஒன்றும் அங்கே செல்லுபடியாகப் போவதில்லை.

உதாரணமாக, பள்ளி வளாகங்களில் பொது ஜெபம் என்பது சட்டத்துக்குப் புறம்பானது என்று அமெரிக்க அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ளது. ஆனால் தங்கள் தேவனோடு தனிப்பட்ட முறையில் அன்பும் ஐக்கியமும் கொள்ள விரும்பும் எந்த மாணவர், ஆசிரியருக்குள்ளுமிருந்தும் ஜெபத்தை எடுத்துப்போட அவர்களால் முடியாது. மற்ற நாடுகளிலோ, இதைப் போலவோ அல்லது இதை விட கடுமையாகவோ சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் மனித மனங்களில் தேவன் ஒருவரே ராஜாதி ராஜாவாய் ஆளுகை செய்கிறவராய் இருக்கிறபடியால், மற்ற எல்லா அதிகாரங்களையும் தன் ஆளுகையின் கீழே அவர் அடக்கிவைக்கிறார். ஆகவே மனித அதிகாரத்தை விட தேவனுக்குக் கீழ்ப்படிவதையே நாம் நம்பிக்கையோடும் முழுமனதோடும் தாராளமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இப்படியும் ஒரு கடத்தல்காரனா?

19

சீனா: வாட்ச்மன் நீ

சீன சபைத் தலைவராகிய வாட்ச்மன் நீயிடம் இருந்ததோ ஆறே ஆறு மணி நேரங்கள் தான். தனது சிறை அறையின் கதவுகளுக்கு வெளியே நின்று கொண்டிருந்த அந்தக் கம்யூனிஸ்ட் செக்யூரிட்டி காவலனுக்கு சுவிசேஷம் சொல்லி அவனைக் கிறிஸ்துவுக்குள் நடத்தினாலொழிய அங்கே சிறைக்கு வெளியே இருக்கும் கிறிஸ்தவர்களைத் திடப்படுத்தி பெலப்படுத்தும்படி, தான் எழுதி வைத்திருக்கும் கடிதத்தை அவன் மூலமாகவே அவர்களுக்குக் கொண்டு சேர்ப்பது கூடாத காரியம். வாட்ச்மன் நீ, அதை அவன் மூலமாகவே செய்ய வேண்டியிருந்தது ..

அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.

கொலோ 1: 29

சீனாவில் பரவிக் கொண்டிருந்த கிறிஸ்தவத்தின் வேகத்தைக் கண்டு கொதித்துப் போயிருந்தது சேர்மன் மாவோ அரசாங்கம். இந்த வெளிநாட்டுப் போதனையைத் தடுத்து நிறுத்த அவர்கள் பல வெளிநாட்டு மிஷனரிகளையும் பலவந்தமாய் வெளியேற்றியதோடு, மீதியிருந்த அனைவரையும் கொன்றனர். அதோடு, ஆயிரக்கணக்கான சீன சபைத் தலைவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டு அவர்களில் அநேகருக்குப் பாடம் புகட்டப்படும்படிக்கும் கம்யூனிச சித்தாந்தங்களில் மூளைச்சலவை செய்யப்படும்படிக்கும் அவர்கள் கான்ஸ்ட்ரேஷன் கேம்ப் அல்லது டிட்டென்ஷன் கேம்ப் என்று சொல்லப்படும் திரும்பி வராத லேபர் கேம்ப்புகளுக்கு அனுப்பப்பட்டனர். ஆயினும் சபையோ வளர்ந்துகொண்டே சென்றது. வாட்சமன் நீயின் மிக அழகான, ஆவியில் நிறைந்த, உற்சாகமும் தெம்பூமூட்டும் வல்லமையான வார்த்தைகள் கொண்ட கடிதங்கள் எப்படியோ சிறைக்கு வெளியே கடத்தப்பட்டு விசுவாசிகளின் கைகளில் சென்றடைவதைக் கண்ட சிறைக்காவலர்கள், அவரைக் காவல் செய்யும் செயூரிட்டிகளின் எண்ணிக்கையை இருமடங்காக ஆக்கியதுடன், எந்த ஒரு செக்யூரிட்டி காவலனையும் ஒரு தடவைக்கு மேல் அவரது அறைக்கு வெளியே நிறுத்துவதில்லை.

அப்படியும் நிறுத்தப்படும் செக்யூரிட்டியையும் அவர் மனமாற்றி விடுவாரோ என்று எண்ணி அவர்களது ஷிப்டும் ஆறு மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.

இப்போது வாட்ச்மன் நீயிடம் இருந்தது ஆறு மணி நேரம் மட்டுமே! அங்கே தனக்குக் காவலுக்கு நின்று கொண்டிருந்த போலீஸுக்கு பிதாவின் அன்பைச் சொல்லி, அவன் தன் மாம்சப் பிரகாரமான காரியங்களை விட்டுவிட்டால் நித்திய நித்தியமாய்ப் பரலோகத்தில் வாழலாம் என்று சுவிசேஷத்தைச் சொல்லிவிட்டு, 'கம்யூனிஸம் உன்னைப் பரலோகம் கொண்டு போய் சேர்க்கப்போவதில்லை.. இயேசு கிறிஸ்து மாத்திரமே அதைச் செய்ய வல்லவர்' என்று முடிக்கிறார், வாட்ச்மன் நீ..

ஐந்து மணி நேரம் நீயின் சுவிசேஷத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த செக்யூரிட்டி, கண்ணீரோடு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறான். இப்போது இன்னும் ஒரு ஆத்துமா ராஜ்யத்துக்கென்று ஆதாயம் செய்யப்பட்டு, வாட்ச்மன் நீயின் இன்னுமொரு அழகான கடிதமொன்று கடத்தப்பட்டுக் கைமாறிப் பத்திரமாய் இரகசிய சபை விசுவாசிகள் கைகளில் சென்று சேர்கிறது.

கிறிஸ்தவ இரத்தசாட்சிகள் நமக்கு எதைக் கற்றுத் தந்தாலும், அதிலிருந்து ஒரு உந்துசக்தியைப் பெற்றுக்கொண்டு அதை சுவிசேஷத்தின் வளர்ச்சிக்காக நாம் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களது புத்திக்கூர்மையும், தைரியமும், ஏன், அவர்கள் அவ்வப்போது காட்டும் புத்திசாலித்தனமான காரியசாமர்த்தியங்களும் கூட நமது ஆவியை உந்தியெழுப்பி சுவிசேஷத்தைப் பரப்புவதில் நம்மைத் தட்டியெழுப்ப வேண்டும்.

ஒரு வேளை தடை செய்யப்பட பகுதிகளுக்குள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து வேத பகுதிகளைக் கடத்திச் செல்லும் வாய்ப்பு எல்லாருக்கும் கிடைப்பதில்லை என்றாலும், நாம் எல்லாருமே தேவ ராஜ்யத்திற்காக முனைப்புடன் உழைக்கும் ஊழியர்களாய் இருக்கலாமே? ஒரு வேளை அது ஹைவேயில் பயணிக்கும் பயணிகள் இளைப்பாறும்

ஒரு சிறிய ஹோட்டல் ஒன்றை நடத்தி அதின் மூலம் அவர்களைச் சந்திக்கும் வழி ஒன்றாய் இருக்கலாம். அல்லது, அவிசுவாசிகளை சந்திக்க நீங்கள் நடத்தும் ஒரு ட்யூஷன் வகுப்பாக இருக்கலாம். எப்போதுமே கிறிஸ்துவைப் பற்றின சாட்சி சொல்லப் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் வழிகளும் உத்திகளும் விளைவுகளை எதிர்கொள்ளும் சவால்களே! நடுநிலையில் இருந்துவிடுவதைக் காட்டிலும் நாம் எப்போதுமே ஆபத்தை எதிர்கொள்ளவே ஆயத்தமாயிருக்க வேண்டும். உங்களது இன்றைய நற்செய்திப்பணி வாழ்க்கை எப்படி இருக்கிறது ? அது மந்தமும் சமரசமும் கொண்ட வாழ்க்கையாய்த் தூங்கி வழிகிறதா? அல்லது கிறிஸ்துவுக்காகப் புது உத்வேகத்தாலும், சுவிசேஷம் அறிவிப்பதில் புதிய முயற்சிகளாலும் நிறைந்த ஒன்றாக இருக்கிறதா?

இப்படியும் ஒரு குற்றத்தீர்ப்பா ?

20

மடகாஸ்கர் - குற்றம் குற்றமே !

மடகாஸ்கரின் ராணி முதலாம் ரனவலோனா, தன் ராஜ்யத்தின் கிறிஸ்தவர்களை மனதார வெறுத்தாள். அவர்கள் அவளது விக்கிரகங்களை மதிப்பதில்லையென்றும், அவர்கள் எப்போதும் ஜெபம் பண்ணிக்கொண்டே இருப்பவர்கள் என்றும், எப்போதும் கோவிலே கதியாய்க் கிடக்கிறார்களென்றும், அவர்கள் பெண்கள் களங்கப்படுவதே இல்லை என்றும் அவர்களுக்கு விரோதமான குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போனாள் அவள். கிறிஸ்தவர்களென்று சந்தேகிக்கப்படும் எவரையும் கைது செய்யும்படி தன் அதிகாரிகளை அனுப்பினாள்.

'இவர்கள் குற்றவாளிகள்' என்று அவர்கள் மேல் அந்தத் தீர்க்கமான தீர்ப்பு வாசிக்கப்பட்டபோது, அவர்கள் மொத்தம் 1600 பேர் இருந்தனர். அந்தத் தீர்ப்பை மறுப்பது, கிறிஸ்துவை மறுதலிப்பதற்குக்குச் சமம் என்று அவர்கள் அதை தங்கள் மேல் ஏற்றுக்கொண்டனர். தனது விக்கிரகங்களுக்கு முன் வணங்கி தங்களைத் தப்புவித்துக்கொள்ளும்படி இரண்டாவது ஒரு வாய்ப்பை அந்த இராணி அவர்களுக்குக் கொடுத்தபோது அதை மறுத்துவிட்டனர் அவர்கள். அவர்களில் அநேகர் கொல்லப்பட, மற்றவர்களோ இருண்டதும் ஈர சதுப்புமான டஞ்சன் சிறைகளில் தள்ளப்பட்டனர். தான் ஒரு கிறிஸ்தவனை வெட்டினால், 20 பேர், வெட்ட வெட்ட எழும்புகிறதைக் கண்டு இன்னும் கொதித்துப்போனாள் அரக்கியான அந்த அரசி.

கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.

1 பேதுரு 3:15

அதன் பின் அவர்களில் 15 பேர், 150 அடி உயரமான மலையுச்சியிலிருந்து தள்ளிவிடப்பட்டு கொல்லப்படத் தீர்ப்பானது. அரசியின் உத்தரவின் பேரில் மலையுச்சிக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்களோடு ராணியின் விக்கிரகங்களும் கொண்டு செல்லப்பட்டன. அங்கே கயிறுகளால் கட்டப்பட்ட அவர்கள், மலையுச்சியிலிருந்து சற்றுத் தாழ இறக்கப்பட்டு, 'இப்போதாவது தெய்வங்களை வணங்குங்கள்.. விடுவிக்கப்படுவீர்கள்' என்று கடைசி

வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட, மிகச் சாவதானமாகக் 'கிறிஸ்துவே' என்று ஒன்று போல அந்தப் 15 பேரும் சொல்ல, கயிறுகள் அறுக்கப்பட்டு, அவர்கள் யாவரும் கெடுபள்ளத்தாக்கில் தள்ளிவிடப்பட்டு மாண்டனர். அவர்களில் சிலர் தலைகுப்புறத் தள்ளப்படும்போது பாடிக்கொண்டே விழுந்தனர். அவர்களில் ஒரே ஒரு வாலிபப்பெண் மட்டும் பைத்தியம் என்று சொல்லப்பட்டு விடுவிக்கப்பட்டாள். அவளே பின்னாட்களில் பெரிய சபை ஒன்றை ஸ்தாபித்தது குறிப்பிடத்தக்கது.

இப்படியும் ஒரு உடைமையா ?

21

பெரு : பாஸ்டர் ஸப்பாட்டா

'ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும், அது அவனுக்கு ஜீவன் அல்ல..'

லூக்கா 12:15

மலைக்கிராமத்துக்கு வெளியே தன்னைச் சந்திக்க வந்திருந்தவர்களுக்கு, அங்கே வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த, கைகளால் செய்யப்பட்ட வெள்ளைச் சிலுவைகளைக் காட்டி, 'இவைகள் ஒவ்வொன்றும் கம்யூனிசத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட ஒவ்வொரு விசுவாசியையும் குறிக்கிறது..இங்கே எங்கள் 'பெரு' நாட்டில் இயேசுவுக்கு ஊழியம் செய்வதற்காக விசுவாசிகள் ஏதோ ஒன்றை எதிர்பார்ப்பதில்லை.மாறாக அவருக்காக எதைக் கொடுக்கலாம் என்பதிலேயே கண்ணுங்கருத்துயிருப்பார்கள்' என்றார் பாஸ்டர். ஸப்பாட்டா.

அந்தச் சிறிய கிராம வீட்டில் முந்தின நாள் இரவில் கொரில்லாக்களால் கொல்லப்பட்ட இன்னொரு பாஸ்டரின் உடல் பாஸ்டர் ஸப்பாட்டாவின் முன் கிடத்தப்பட்டிருக்கிறது. போர்வையால் சுற்றப்பட்ட அந்த உடலைச் சுற்றி மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருக்க, அங்கே அவரது குடும்பத்தினர் கண்ணீரோடு நிற்கின்றனர்.

அந்த வீட்டுக்கு வெளியே, மழையில் நனைந்தபடி, கொலை செய்யப்பட்ட போதகரின் சபையார், பாடல்களைப் பாடியவாறு நிற்கின்றனர். அவர்களது காலணிகளும் சப்பாத்துகளும் சேறும் சகதியுமாய்த் தெரிகிறது. கொரில்லாக்கள் அவர்களது சபையை இடித்து நாசமாக்கி, அவர்களில் அநேகரது வீடுகளையும் எரித்து சாம்பலாக்கிவிட்டிருந்தனர். ஆனாலும் சபையோ அங்கே தேவனைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்தது.

கொரில்லாக்கள் எப்போது வேண்டுமானாலும் திரும்பிவந்து மீண்டும் தாக்கக்கூடும் என்பதால் அந்த விசுவாசிகள் இன்னும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதானிருந்தனர். மார்க்ஸிஸ்ட் ஊடுருவலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும்படியாகவும் விசுவாசத்தில் துணிந்து நிற்கும்படியாகவும் முழுக்கிராமத்தையுமே திடப்படுத்தி வைத்திருந்தது போதகர்கள் மட்டுமே என்பதால் கொரில்லாக்கள் பாஸ்டர்களையே தங்கள் குறியாய் வைத்திருந்தனர்.

'தேவனுடைய கரங்களிலிருந்து வரும் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை அல்ல, மாறாக அந்த ஆசீர்வாதங்களை அள்ளித்தரும் தேவனை மட்டுமே தேட வேண்டும் என்று வேதம் நம்மை அழைக்கிறது' என்பதைத் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வந்தனர் அங்குள்ள போதகர்கள்.

ஒரு போதகர் தன் சபையைப் பார்த்துக் கேட்டார்,'நீங்கள் ஏன் கடைக்குச் சென்று ஒரு சட்டையை வாங்குகிறீர்கள்?' 'உபயோகிக்க..' 'இயேசு ஏன் உங்களை மீட்டு, தன் சொந்த இரத்தத்தால் விலை கொடுத்து வாங்கினார்?' தமது இராஜ்யத்துக்காக உங்களை உபயோகப்படுத்தவே.' அந்த ஏழை வறிய விசுவாசிகள், தேவன் தங்களை எப்படி வேண்டுமானாலும் உபயோகப்படுத்தும்படி தங்களையே தர ஆயத்தமாயிருந்தனர்.

நாம் நமது விசுவாசத்துக்காக உபத்திரவப்படுத்தப்படும்போது, நமது இழப்புகளையும் நஷ்டங்களையும் நோக்கியே நமது கவனம் அதிகமாய்த் திரும்புவது இயல்பு. நமது விசுவாசத்தினிமித்தம் நம்மைக் கைவிட்டவர்களையும், காட்டிக் கொடுத்த நமக்கு நெருங்கினவர்களையுமே நினைத்து நினைத்து நாம் விக்கித்துப் போகலாம். நமது விசுவாசத்தினிமித்தம் இலாபம் தரும் நல்ல வியாபாரங்களை நாம் இழந்து நிற்கலாம். ஊரை விட்டும் சமுதாயத்தை விட்டும் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாக நம்மை நாமே காணும்போது, நமக்கு நம் மேலேயே பரிதாபமும் வேதனையும் எழலாம். ஆனால் உலகப் பிரகாரமான தங்கள் உடைமைகளையும் உறவுகளையும் விட அதற்கும் மேலான பல இழப்புகளை சந்தித்த இன்னும் அநேக பல விசுவாசிகளும் உண்டு. அப்படிப்பட்ட ஆவியில் முதிர்ந்தவர்கள், தாங்கள் இழந்தது என்னென்னவென்று கணக்குப்பாராமல், தங்களிடம் மீந்திருப்பதையும் தேவனுடைய ஊழியத்தில் எப்படி ஊற்றிவிடலாம் என்பதிலேயே நோக்கமாய் இருப்பார்கள். அவர்களில் அநேகர் தங்கள் ஆலயங்களையும், வீடு வாசல்களையும், வேலைகளையும், குடும்பங்களையுமே தேவனுக்கான இந்த உபத்திரவத்தில் இழந்திருப்பார்கள். ஆயினும் கிறிஸ்துவுக்காக இன்னும் எவற்றையெல்லாம் தியாகம் செய்யலாம் என்று தங்களையே தர அவர்கள் ஆயத்தமாயிருந்தனர். தங்களது உலகப் பிரகாரமான இழப்புகள் என்பது, வேறொருவரது இரட்சிப்புக்கு ஏதுவான வாய்ப்புகளே என்பதை அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தனர்.

இப்படியும் ஒரு பயமா?

22

லாவோஸ் : லூ

‘போலீஸால் எழுதப்படாத விதி ஒன்று அங்கே தெளிவாய்த் தெரிந்தது : குமு பழங்குடியினரோ அல்லது வேறு பழங்குடி இனத்தவரோ கிறிஸ்தவத்துக்கு மாறுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் கையும் களவுமாகப் பிடியுங்கள். பழங்குடியினருக்கு யாராவது சுவிசேஷம் அறிவிப்பதாகக் கண்டுபிடித்தால் உடனே சுட்டுத் தள்ளுங்கள்.’



கம்யூனிஸ்ட் போலீஸ், பழங்குடி இன விசுவாசியான ‘லூ’ வை கால்களிலும் கைகளிலும் விலங்கு போட்டு மிகவும் கீழ்த்தரமாய் நடத்தி கிராமம் முழுவதும் இழுத்துச் சென்று கடைசியில், ’உன் கிராமத்தின் 100 கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு விடுவார்களானால், நாங்கள் உன்னை விடுதலை செய்வோம்’ என்று சொல்லி அவரை ஒரு குழியில் தள்ளி விட்டனர். ஆனாலும் கிராமத்தின் ஒரு கிறிஸ்தவராவது தங்கள் விசுவாசத்தை மறுதலிக்கவில்லை. அதன் பின் அந்தப் போலீஸ் மேல் அடுத்தடுத்து வந்தன ஆபத்துகள். ஒரு போலீஸ் ஆபீஸரின் ஒரு மகன் விபத்தில் சிக்கி அவனது இரு கால் எலும்புகளும் முறிந்தன. அதே ஆபீஸரது இன்னொரு மகன் சாகும் தருவாயிலிருந்தான். எந்த போலீஸ் ஆபீஸர் புது விசுவாசிகளை அடித்துச் சித்ரவதை செய்தானோ, அவன் மாரடைப்பினால் செத்தான். மற்ற அதிகாரிகள் ‘லூவை’ குழியிலிருந்து வெளியிலெடுத்து அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். தங்கள் மூத்த அதிகாரிக்கு நடந்ததைக் கண்ட மற்றவர்கள் யாரும் மேற்கொண்டு கிறிஸ்தவர்கள் மேல் கைபோடத் துணியவில்லை.

தேவன் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர். யாருக்கு நான் பயப்படுவேன்?

சங்கீதம் 27:1

தேவனின் வல்லமையைக் கண்ட குமு பழங்குடியினர் இன்னும் பலர் விசுவாசிகளானார்கள். 100 கிறிஸ்தவர்கள் இருந்த இடத்தில் இப்போது 700 பேர் விசுவாசிகளானார்கள். அவர்கள் தங்களுக்குள்ளிருந்த மூத்த விசுவாசிகளை மற்ற கிராமங்களுக்கும் அனுப்பி இயேசுவின் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளச் செய்தனர்.

லாவோவின் அதிகாரிகள் பயத்தால் உறைந்து நின்றபோது, அந்தத் தென்கிழக்கு ஆசியக் கிறிஸ்தவர்களோ, தங்கள் பயத்தை மேற்கொண்டு முன்னேறிச் சென்று கொண்டேயிருந்தனர்.,

பயம் என்பது மனிதனை முன்னுக்குத் தள்ளும் உந்து சக்திகளில் அடிப்படையான ஒன்று. அதுவே ஸ்டாக் மார்க்கெட்களை பாதாளத்துக்குத் தள்ளி, யுத்தங்களுக்கு அடிகோலுகிறது. அதின் காட்டுத்தனமான சக்தி, மிகப்பெரிய தீமைகளுக்கோ, மாபெரும் நன்மைகளுக்கோ வழிகாட்டியாய் அமைகிறது. 'பயமே உங்கள் நண்பன்' என்று குத்துச்சண்டை வீரர்களுக்குச் சொல்லித்தரப்பட்டு, பயமே அவர்களைக் களத்தில் வீரதீரங்களைச் செய்ய வைக்கிறது. அதுவே அவர்களை மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாகவும் ஆக்குகிறது. அதைப் போலவே, தேவனும் நமது பயமென்னும் பெலவீனத்தையே தமது காரியத்துக்காக நமது பெலமாய் மாற்றி நம்மை மிகச்சிறந்த ஆவிக்குரிய போராளிகளாய் யுத்தத்தில் நிறுத்துகிறார். நாம் பயப்படும் போதெல்லாம், நம்மால் முடியாதவைகளையும் செய்து முடிக்கும் அனாயாசமான பெலன் ஒன்று நமக்குள் உருவாகிறது. ஏன்? ஏனென்றால், நாம் நமது பெலனால் செய்ய இயலாதவைகளை, தேவனையே சார்ந்து கொண்டு, அவரது பெலனால் செய்து முடிக்க நாம் பெலமடைகிறோம். பயம் என்பது, நாம் நமது சொந்த பெலனிலும், ஏதுக்களிலும் சார்ந்து நிற்பதை விட்டுவிட்டு தேவனையே சார்ந்திருக்கச் செய்கிறது. இப்படியாக அதீத பயம் அதீத விசுவாசத்துக்கு வழிவகுக்கிறது.

இப்படியும் ஒரு அணிகலனா?

23

சூடான் : பீட்டர்

இடைவிடாமல் ஜெபியுங்கள்

1 தெச 5:17

அரபிக் மொழியிலே வெண்கல விலங்குக்கு Bacle என்று சொல்வார்கள். தன் கையிலே அந்த வெண்கல விலங்கைப் பிடித்துக்கொண்டிருந்த பீட்டர், அதை ஏதோ ஒரு தெய்வீகப் பொருளைப் போல பார்த்துக் கொண்டிருந்தான். அது அவனது குடும்பத்தின் கடந்த கால நினைவுப்பொருள் மட்டுமல்லாது, அவனது இன்றைய மிகப்பெரிய ஆசீர்வாதமும் கூட..

அவனுடைய தாத்தா இந்த வெண்கல விலங்கு செய்பவராயிருந்தும், அவரது முஸ்லிம் முதலாளிகள் அவருக்கும் கட்டாயமாய் விலங்கு ஒன்றை மாட்டிவிட்டிருந்தனர். தென் சூடானிலே கைது செய்யப்பட்ட பீட்டரின் தாத்தா, வட சூடானுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே அடிமையாக விற்கப்பட்டார்.

அங்கே அவரது முஸ்லிம் முதலாளிகள் அவரை எவ்வளவு தான் கொடுமைப்படுத்தினாலும், அவரோ அவர்களது மதத்துக்கு மாறிவிடவில்லை. கிறிஸ்துவின் மேலிருந்த விசுவாசத்தில் உறுதியாய் இருந்ததற்கு சாட்சியாக அவரது சரீரம் காயத்தின் தழும்புகளை அச்சடையாளமாய்த் தாங்கி நின்றது. அவர் ஒரு இஸ்லாமியராக அல்லாத, அல்லது ஆகாத ஒரே காரணத்தினாலேயே அவர் ஒரு மிருகமாகவே நடத்தப்பட்டார்.

தான் மரிப்பதற்கு முன், பீட்டரின் தாத்தா, அடிமையின் அடையாளமான அந்த விலங்கைக் கழற்றி பீட்டரின் தகப்பனாரும் தன் மகனுமானவரிடத்தில் கொடுத்து, 'நம் குடும்பம் என்றென்றைக்குமாக அடிமைகளாகவே இருந்துவிடப்போவதில்லை..ஆனாலும் நாம் இதை மறந்துவிடக் கூடாது!' என்று சொல்லிவிட்டு மரித்தார்.

பிறகு பீட்டரின் தகப்பனார் அதைப் பீட்டரிடம் கொடுக்க, அவனோ, தனது முஸ்லிம் ஜமீன்தாரிடமிருந்து தப்பிப் பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்துவிட்டாலும் அந்த வெண்கல விலங்கை மட்டும் பத்திரமாகத் தன்னுடன் கொண்டு வந்தான். இன்று அது யாரோ ஒருவரது முதலாளித்துவ அடையாளமாக அல்ல, மாறாக, அது தேவனின் மேற்கொள்ளும் அதிகாரத்தின் அடையாளமாகவே அவன் கையில் காணப்பட்டது. அது, ஒரு குடும்பத்தின் மேல் மூன்று தலைமுறைகளாய்க் கிரியை செய்து அவர்களை விடுதலை செய்யும் தேவனுடைய கரத்தின் அடையாளமாகவே இருந்தது.

அதைக் கையில் பிடித்தவனாய், 'என் ஜனங்களை மறந்துவிடாதிருங்கள்..சூடானின் நசுக்கப்படும் கிறிஸ்தவர்களுக்காக ஜெபிப்பதை நிறுத்தி விடாதிருங்கள்' என்று சொன்னான் பீட்டர்.

ஜெபித்தலின் முதல் எதிரி மறந்து விடுதலே. ஏதோ ஒன்றுக்காக சுருக்கமாக ஜெபித்து விட்டுக் கடந்து போய்விடுகிறோம் நாம். நமது நல்ல நோக்கங்கள் கூட தேவையுள்ளவர்களுக்காக மிகவும் பாரப்பட்டு ஜெபிக்கப் போதுமானவைகளாக இருப்பதில்லை. உலகம் முழுவதுமுள்ள ஒடுக்கப்பட்டு, நசுக்கப்படும் சபைக்காக உங்களை மீண்டும் மீண்டும் ஜெபிக்க ஞாபகமூட்டக்கூடியது எது? ஒரு வேளை அடிக்கடி மணி பார்க்கும் உங்கள் கைக்கடிகாரத்தின் டயலில் ஒட்டப்பட்ட ஒரு சின்ன ஸ்டிக்கர் உங்களை ஞாபகப்படுத்தக் கூடுமா? நாள் முழுவதும் உங்கள் வாட்ச்சை நீங்கள் பார்க்கும்போதெல்லாம் உலகின் ஏதோ ஒரு மூலையில் உபத்திரவப்படுத்தப்படும் ஒரு மக்களினத்துக்காக ஜெபிக்க அது உங்களைத் தூண்டலாமே? இப்படி ஜெபிக்கக்கூடிய ஏதோ ஒருவழியை உங்களுக்காக நீங்கள் தெரிந்தெடுத்துக்கொண்டு ஜெபித்துக்கொண்டேயிருங்கள். 'இப்படியும் விசுவாசிகளா?' என்னும் இந்த அனுதின தியானத்தை நீங்கள் வாசிப்பதினால் கூட எந்த ஒரு பெரிதான மாற்றமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலுள்ள விசுவாசிகளுக்காகக் கண்ணீரோடு ஏறெடுக்கப்படும் ஜெபம் மட்டுமே சகலத்தையும் மாற்ற வல்லமையுள்ளது. ஒரு வேளை இன்றே கூட அது நடக்கலாம்.

இப்படியும் ஒரு தைரியமா?

24

ருமேனியா : ஒரு இளம்பெண்

அந்தக் கம்யூனிஸ்ட் காவலர்கள் அந்தச் சிறை அறையை நோக்கி வருவதை அங்கிருந்த பெண் கைதிகள் கேட்டபோது ஏறக்குறைய நடுஇரவு நேரமிருக்கும். உடனே அவர்கள், கிறிஸ்துவின் மேலிருந்த விசுவாசத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட அங்கிருந்த 20 வயது நிரம்பிய அந்த வாலிபப் பெண்ணருகே கூடி வந்தனர். அவசர அவசரமாகக் கண்ணீரோடு அவளுக்குப் பிரியாவிடை கொடுத்தனர் அவர்கள். ஆனால் அந்த வாலிப ருமேனியப் பெண்ணின் கண்களிலிருந்து கண்ணீரோ, தன்னை விட்டுவிடும்படியான இரக்கத்துக்கான எந்தக் கெஞ்சலோ கூக்குரலோ வெளிப்படவேயில்லை.

இதற்கு முன் அன்று மாலையில் அவளது முகம் அன்பினால் ஜொலித்துக் கொண்டிருக்க, அவளைச் சுற்றி உட்கார்ந்து அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனர் அவர்கள். அவள் சொன்னாள்...

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.

கொலோ 2:2

என்னைப் பொறுத்தவரை இங்குள்ள கல்லறை, பரலோகப் பட்டணத்தின் நுழைவாயிலே அன்றி வேறொன்றுமில்லை. ஓ! அந்த நகரின் அழகையும் வனப்பையும் யார் விவரிப்பது? அங்கே ஆனந்தமும் துதியும் மகிழ்ச்சியும் பாடலுமே அன்றி துக்கமென்ற வார்த்தையே இல்லை. அங்குள்ள ஒவ்வொருவரும் பரிசுத்தத்தின் வெண்ணாடையுடன் காணப்படுவார்கள். அங்கே நாம் தேவனையே முகமுகமாய்ப் பார்ப்போம். மனித வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஆனந்தமும் இன்பமுமான பரம கானான் அது. அப்படியிருக்க, நான் ஏன் அழ வேண்டும்? நான் ஏன் துக்கத்தோடிருக்க வேண்டும்?'.

அவள் திருமணத்திற்காக நிச்சயிக்கப்பட்டிருந்தாள். ஆனால் அன்று இரவோ, தான் இந்த உலகத்தில் நிச்சயிக்கப்பட்ட வாலிபனோடு அல்ல, தன் பரலோக மணவாளனையே முகமுகமாய் சந்திக்கப்போவதாக அவள் தன்னோடிருந்த கைதிகளுக்குச் சொல்லியிருந்தாள்.

இதற்குள்ளாக, ஈவு இரக்கமற்ற காவலர்கள் அவளது அறைக்குள் நுழைய, அந்த வாலிபப் பெண் அவர்களோடு செல்ல ஆயத்தமாய் அவர்களை நோக்கி எழுந்து வந்தாள். காவலர்கள் சூழ, அறையை விட்டு வெளியே வந்த அவள் அப்போஸ்தலர்களின் விசுவாசப்பிரமாணத்தைச் சொல்ல ஆரம்பித்தாள். தங்கள் முகங்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோட, சில நிமிடங்களிலேயே துப்பாக்கிக் குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டனர் அவளோடிருந்த மற்ற கைதிகள். அவளது கொலையாளிகள் அந்தப் பெண்ணின் வாழ்க்கையை முடித்து விட்டதாக நினைத்துக்கொண்டிருக்க, உண்மையில் அவர்கள் செய்ததோ, இன்னும் மிக மேன்மையான ஒரு இடத்தில் என்றென்றைக்குமாக வாழ அவளை அனுப்பிவைத்தது தான்.

இந்த பூமியில் சாதாரணமாய் வாழும் ஒரு வாழ்விலிருந்து விவரிக்க முடியாத பரலோக எதிர்காலத்தின் வாஞ்சைக்கு நம்மை இட்டுச் செல்லும் பாலம் தைரியமே! பரலோகம் என்ற ஒன்று நிச்சயமாகவே இருக்கிறது என்று முழுவதும் நம்புபவர்கள், இந்தக் கூடார வாழ்க்கையைத் தங்கள் பரலோகத்தின் நித்திய குடியுரிமைக்காக மிக எளிதாக மாற்றிக்கொள்வார்கள். பூமியில் நாம் பற்றிக் கொண்டிருக்கும் எல்லாவற்றையும், இங்கேயே நீண்ட நெடுங்காலமாய் இருக்க வேண்டும் என்று நம்மை இருத்தி வைத்திருக்கும் எல்லாவற்றையும் உதறிப்போட்டு விட நமக்கு உதவி செய்வது இந்தத் தைரியமே!

மரணத்துக்குப் பின் ஒரு வாழ்வு உண்டு என்று நம்மை நம்ப வைப்பதற்குத் தைரியம் தேவை. மரிக்கும் தருவாய் மட்டும் நாம் இங்கே அறிந்து வைத்திருப்பதெல்லாம் இந்த உலக வாழ்க்கை ஒன்று மட்டுமே! கிறிஸ்துவை விசுவாசித்து, விசுவாச வாழ்வில் அடியெடுத்து வைத்து நாம் இறங்குவதே அவரோடு நித்தியத்துக்குள் பிரவேசிக்க நம்மால் முடியும் என்ற நமது தைரியம் ஒன்றினாலேயே. அப்படி ஒரு திடமான தீர்மானத்தை நாம் எடுத்து விட்டோமென்றால், இங்கே ஒரு நோக்கத்தோடு நமது வாழ்வை நாம் வாழ்வதோடு, மரணத்தையும் தைரியமாகவே நாம் எதிர்கொள்ளுவோம்.

இப்படியும் ஒரு மிஷினரியா ?

25

பாகிஸ்தான்: சலீமா, ரஹீலா

‘முஸ்லீம்கள் நிறைந்த பாகிஸ்தானிலே சலீமா, கிறிஸ்துவின் மேலுள்ள தனது விசுவாசத்தைத் தனது வகுப்புத் தோழியான ரஹீலாவுடன் பகிர்ந்து கொள்ள, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறாள் ரஹீலா. அந்தப் பதின்வயது பாகிஸ்தானி டீனேஜர் சலீமா உறுதியான குரலில் ரஹீலாவைப் பார்த்து, ‘நீ உன் சிலுவையைச் சுமப்பதாக வாக்குக் கொடுத்தால், அது வாழ்க்கை முழுவதும் கல்லும் முள்ளும், கரடுமுரடான மலையும், கடினமுமான பாதையுமாகவே இருக்கும்..’ என்று சொன்னாள்.

ரஹீலாவின் மனமாற்றத்தினால் வெகுண்ட குடும்பம், பாகிஸ்தானில் மரண தண்டனைக் குற்றமாகிய ’ஒரு முஸ்லீமை மதமாற்றிய’ குற்றச்சாட்டை சலீமாவின் மீது சாட்டியது. சலீமாவும் அவளது போதகரும் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட, அவளது பெற்றோரோ போலீஸால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். போலீஸ் கஸ்டடியில் இருந்த சலீமா பலவகையில் துன்புறுத்தப்பட்டாலும், தன் விசுவாசத்தை மறுதலிக்கவே இல்லை. சொல்லப்போனால், ஜெயிலில் தன்னோடிருந்தவர்களையும் கிறிஸ்துவின் பக்கம் திருப்பும் நோக்கில், கிறிஸ்தவப் பாடல்களை மென்மையாய்ப் பாடிக் கொண்டிருந்தாள் அவள்.

‘உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்..’

பிலேமோன் 6

இதற்கிடையில் தன் வீட்டைவிட்டு ஓடிய ரஹீலாவைத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வந்த அவளது குடும்பத்தார், தனது விசுவாசத்தை விட்டு விட்டு முகம்மதுவிடம் திரும்பிவிடும்படி கடைசியாக அவளுக்கு ஒரு வாய்ப்புக்கொடுக்க, அதையும் நிராகரித்தாள் அவள். அவளது அந்தக் ‘குற்றத்துக்காக’ அவளது சொந்தக் குடும்பமே அவளைக் கொலை செய்தது.

இதற்காக நீண்ட கோர்ட் கேஸ்களை எதிர்கொண்டாள் சலீமா. தங்கள் மகள் ரஹீலாவின் மரணத்துக்கு சலீமாவே காரணமென்று குற்றஞ்சாட்டி நின்றது அவளது குடும்பம். கடைசியாக சலீமாவின் மீதிருந்த கேஸ்கள் வாபஸ் பெறப்பட்டாலும் அவளது உயிரோ ஆபத்திலேயே இருந்தது. தீவிர முஸ்லீம்களால் கொல்லப்படும் ஆபத்து இருந்ததால், அவள் பாகிஸ்தானின் இன்னொரு பகுதிக்கு இடமாறிச்செல்லும் நிர்ப்பந்தத்துக்கு ஆளானாள். ஆனாலும் கல்லும் முள்ளும் கரடுமுரடான மலையும் கடினமுமான இந்தப் பாதை அவளது விசுவாசத்தை சற்றேனும் குறைப்பதாக இல்லை. மாறாக, தான் ஒரு மிஷினரியாகச் செல்லத் தன்னை ஒப்புக்கொடுத்து தன்னை ஆயத்தப்படுத்தத் தொடங்கின அவள், ‘மலைகள் எவ்வளவு தான் பெரிதாயிருந்தாலும், அவைகளையும் தாண்ட இயேசு உங்களுக்கு உதவி செய்வார்’ என்கிறாள்.

வியட்நாம் விசுவாசிகளின் ஜெபம்

‘எங்கள் தேசத்து எல்லைகள் சுவிசேஷத்துக்குத் திறக்கப்பட வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கவில்லை..’

‘மாறாக, பரலோகம் எங்களுக்குத் திறக்கப்பட வேண்டுமென்றே ஜெபிக்கிறோம்..’

(வியட்நாமில் ஒடுக்கப்படும் சபை ஒன்றின் ஜெபம்)

"WE ARE NOT PRAYING THAT OUR BORDERS BE OPENED..

"WE ARE PRAYING THAT HEAVEN BE OPENED.."

[The Prayer of a Church Under Persecution In Vietnam]

27

பூட்டான் - பாஸ்டர் நார்பு ப்ரோமிலா

பூட்டானின் அந்த மலைக் கிராமத்திலே ஆதிவாசிகள் மத்தியில் அன்று நடந்த ஆராதனையில் பாஸ்டர் நார்பு ப்ரோமிலா மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். அங்கே கூடி வந்திருந்தவர்களும் மிகக்கவனமாய் சுவிசேஷத்துக்கு செவிகொடுத்தனர். அப்போது தான் அது நடந்தது.. பிரசங்கத்தின் நடுவிலே ஒவ்வொரு வாசல் வழியாகவும் நுழைந்த போலீஸ், பிரசங்க பீடத்தில் ஏறி வலுக்கட்டாயமாய் நார்புவை இழுத்துச் சென்றனர்.

சிறையில் தள்ளப்பட்டு சித்ரவதைப்படுத்தப்பட்ட பாஸ்டர் ப்ரோமிலாவை அதிகாரிகள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கூடாதென்று மிரட்டினர். தலையில் பலத்த காயத்துடன் அவரைக் கடைசியாக அவர்கள் வெளியே அனுப்பிவிட்டாலும், அவரது உடலெங்கும் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் மோசமாயிருந்தது. வீடு திரும்பிய அவரை இரத்தம் தோய்ந்த முகத்துடனும் பயங்கரக் காயங்களுடனும் கண்ட அவரது மனைவியும் பிள்ளைகளும் அதிர்ச்சியடைந்தனர். தன் அகோரக் காயங்களினால் பத்தே நாட்களில் மரித்துப்போனார் நார்பு.

'உங்களில் நற்கிரியைகளைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்புகிறேன்'.

பிலிப்பியர் 1:5

இந்துத் தீவிரவாத தேசமான பூட்டானிலிருந்த பாஸ்டர் ப்ரோமிலாவின் சபையோ, நடந்த சம்பவத்தால் பயந்து அவரது பணியை விட்டுவிடுவதாயில்லை. அவரது மரணத்துக்குப் பின் சில நாட்களுக்குள்ளாகவே சபை கூடி, 'நார்புவின் ஊழியத்தை ஆதிவாசிகளின் மத்தியில் தொடர்ந்து செய்ய முன்வந்து தங்களை ஒப்புக்கொடுப்பவர்கள் யார் ?' என்ற சவாலை முன் வைத்தபோது, ஐந்து கரங்கள் மேலெழும்ப, அதில் ஒன்று பாஸ்டரின் மனைவியினுடையதாயிருந்தது. தன் ஐந்து குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்போடு, ஊழியத்தில் தேவனின் அழைப்புக்கும் கீழ்ப்படிந்தார் அவர்.

தேவனுடைய ஊழியத்தை உண்மையாய் மேற்கொண்ட அவரும் உடனிருந்தவர்களும் சேர்ந்து அநேக ஆதிவாசி ஜனங்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினர். தேவன் அவரையும் அவரது பிள்ளைகளையும் போஷித்தார். தனது கணவனை ஒரு நாள், தான் காண்பேன் என்றும், கிறிஸ்துவுக்காகத் தான் காட்டிய உண்மைக்கு அவர் ஒரு நாள் பலனளிப்பார் என்ற நம்பிக்கையை மட்டும் இறுதிவரை பற்றிக்கொண்டார் பாஸ்டர் நார்பு ப்ரோமிலாவின் மனைவி.

தேவனுக்காக நாம் செய்வது வெறும் ஒரு வேலையோ, தொழிலோ அல்ல - அது ஒரு அருட்பணி. அருட்பணி என்பது ஒரு போதும் ஒரு தனிமனிதனின் பொறுப்போடு மட்டுமே சார்ந்தது அல்ல. அது கிறிஸ்து மற்றும் அவரது இராஜ்யத்தை மட்டுமே மையமாகக் கொண்டது. ஆகவே ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடக்கும் ஊழியத்தின் அந்தப் பகுதியிலிருந்து ஒருவர் மரிக்க நேரிடலாம் அல்லது வெளியேறலாம். ஆனால் ஊழியம் தன்னில் தானே ஒரு போதும் மரித்துப்போவதுமில்லை அது நிறைவேற்றப்படாமல் நின்று போவதுமில்லை. அது நிறைவேறி முடியும்வரை தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கும்.

தங்கள் விசுவாசத்துக்காக எப்படிப்பட்ட உபத்திரவத்தையும் தாங்க தங்களை ஒப்புக்கொடுத்தவர்களே நமக்கு அருட்பணியின் அர்த்தத்தைக் கற்றுத் தருபவர்கள். நித்திய நித்தியமாய் நிலைப்பது இரண்டே காரியங்கள் தான் என்று அவர்கள் அடையாளம் கண்டிருக்கிறார்கள் - ஒன்று தேவனின் ஊழியம், இரண்டாவது மனித ஆத்துமாக்கள். நாம் நமது வாழ்க்கையை இவைகளுக்காக மாத்திரமே முதலீடு செய்ய ஆயத்தமாயிருப்போமானால், நித்திய நித்தியமான, மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணியில் நாம் நம்மையே ஈடுபடுத்தினவர்களாய் இருப்போம்!

இப்படியும் ஒரு கொலையாளியா?

28

பங்களாதேஷ் - ஆண்ட்ரூ

‘இவன் ஏன் இன்னும் என்னைச் சுடவில்லை?’ என்று தனக்கு முன் நீட்டப்பட்ட துப்பாக்கியையே விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் ஆண்ட்ரூ என்ற அந்த சுவிசேஷகர். எரிச்சலடைந்த அந்தக் கொலையாளி, பிறகு பயந்து நடுங்கிப் போய் அந்த அறையிலிருந்தே ஓடிவிட்டான். சற்று நேரத்தில் போன் பெல் அடிக்க, எதிர்முனையிலிருந்து பேசியதோ, சில நிமிடங்களுக்கு முன் தன்னைச் சுட வந்த அதே கொலையாளி தான் என்று அறிந்து கொண்டார் ஆண்ட்ரூ.

தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்று அறிந்திருக்கிறேன்.

பிலிப்பியர் 1:5

‘என் முஸ்லீம் தலைவர்கள் உங்களைக் கொல்ல எனக்கு மிகப்பெரிய தொகை ஒன்றைக் கொடுத்தார்கள், பங்களாதேஷின் ஒரு மூலையிலிருந்து இங்கே உங்கள் ஆபீஸ் மட்டும் பயணப்பட்டு வந்தேன் நான்.. மிகப்பெரிய பரிசு ஒன்று எனக்குக் காத்திருந்தது. நான் உங்களைச் சுடத் தயாரானபோதோ என் கைகளையே என்னால் அசைக்க முடியவில்லை. துப்பாக்கியின் விசையை அழுத்த முடியாமல் என் விரல்கள் செயலற்றுப்போனது...’ என்று அவன் போனின் அடுத்த முனையில் பேசப்பேச, தன்னைப் பாதுகாத்த ஆண்டவரின் பாதுகாவலுக்காகத் தனக்குள் துதித்துக் கொண்டிருந்தார் ஆண்ட்ரூ.

ஒரு வகையில் சிரிப்பு மேலிட, ‘சரி..நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்’ என்று கேட்டார் அவர்.

‘சார், இன்னும் நான் என் கைகளை அசைக்கவே முடியவில்லை. இது உங்களால் தான் என்று எனக்குத் தெரியும். நீங்கள் ஏதாவது எனக்கு உதவி செய்வீர்களா ?’ என்று கெஞ்சாத குறையாய்க் கேட்டான் அவன்.

உடனே போனிலேயே ஆண்ட்ரூ அவனுக்காக ஜெபிக்க, அந்த மனிதனுடையை கை உடனடியாக முன்பு போல சுகமானது. இந்த அற்புதத்தினாலே ஆச்சரியமும் பிரம்மையும் அடைந்தவனாக அந்த சுவிசேஷகரின் அலுவலகத்துக்கு வந்த அவன், முஸ்லிம் தலைவர்கள் பயந்து நடுங்கும் 'இந்த இயேசுவைப்' பற்றிச் சொல்லுங்கள் என்று கேள்வி மேல் கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

அவனது கேள்விகளுக்கெல்லாம் பொறுமையோடு பதில் சொன்னதோடு, இயேசுவின் அன்பின் சுவிசேஷத்தையும் அன்புடன் அவனோடு பகிர்ந்துகொண்ட சுவிசேஷகர், தன்னைக் கொலை செய்ய வந்தவனுக்கு டீ கொடுத்து உபசரித்தார். நாற்பத்தைந்து நிமிடங்களுக்குப் பின் அந்த மனிதன் தன் இருதயத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டான். ஒரு காலத்தில் மனிதரை அழிக்கும் அவனது வேலை இப்போது பிசாசின் கிரியைகளை அழிப்பதாக மாறியது. இன்றுவரை பங்களாதேஷில் அவன் ஒரு உடன் ஊழியனாய், மிஷினரியாய்ப் பணிபுரிகிறான்.

கொலையாளியின் கொலை முயற்சி தவறிப்போய் வேடிக்கையாகக் காணப்பட்டது. இது ஒரு வேளை ஒரு சினிமா படமாக இருந்திருந்தால், தப்பித்து வந்த ஆண்ட்ரூவைக் காணும் ரசிகர் கூட்டம் கைதட்டி விசிலடித்திருக்கும். எந்த சினிமா ஹீரோவும் செய்வது போலவே, ஆண்ட்ரூ தன் எதிரியின் திட்டங்களைச் சிதறடித்தது மட்டுமல்ல, இங்கேயோ அவர் உண்மையில் தன்னைக் கொல்ல வந்து, இப்போது மனம்மாறிவிட்ட ஒருவனோடு தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறார். சத்துருவின் திட்டம் இங்கே தவிடுபொடியாக்கப்பட்டாலும், பிசாசோ, திரும்பத்திரும்ப நம்மை அழிக்கும் தன் திட்டத்தை மாற்றியமைத்துக்கொண்டே தான் இருக்கிறான். திடீரென்று ஒரு சூழ்நிலையில் மாட்டிக் கொண்டவர் அல்ல ஆண்ட்ரூ ..அதே போல் தான் நீங்களும். அவரோ நீங்களோ ஒரு வேளை இப்படிப்பட்ட ஒரு சூழலில் சுடப்பட்டிருப்பீர்களேயானால், அந்த மரணம் இரத்த சாட்சி மரணமாயிருக்கும்.நம்மை அழிக்கும் பிசாசின் திட்டங்கள் தடைபட்டுத் தகர்க்கப்படப்பட்டுப் போவது போல, நமது வாழ்க்கையைக் குறித்து தேவன் நினைத்து வைத்திருக்கும் அவருடைய திட்டங்கள் தடைபட்டுப் போவதேயில்லை.

இப்படியும் ஒரு தைரியமா?

29

ருமேனியா - சபீனா உம்பிராண்ட்

‘ருமேனியா நாட்டை கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் பிடிக்குள் கொண்டு வந்திருந்த நாட்கள் அவை..

பாஸ்டர் ரிச்சர்ட் உம்பிராண்டும் அவரது மனைவி சபீனாவும் கம்யூனிஸ்ட்டுகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அந்தக் கிறிஸ்தவ மாநாட்டில் கலந்து கொள்ள அவர்களது அழைப்பின் பேரில் சென்றிருந்தனர்.. அங்கே குழுமியிருந்த பல்வேறு சபையைச் சேர்ந்த போதகர்களும், குருக்களும் ஒவ்வொருவராக எழுந்து நின்று ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களை சிறையிலடைத்த அந்தப் புதிய கம்யூனிஸ்ட் அரசையும், அதின் தலைவரான ஜோசப் ஸ்டாலினையும் புகழ்ந்து தள்ளினர்.

‘கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்தி ருக்கிறேன்..’

கொலோ 2:2

அப்போது சபீனா, தன் கணவனின் கையைக் கிள்ளிச் சொன்னார்.. ‘ரிச்சர்ட்..அவர்கள் கிறிஸ்துவின் முகத்தில் காறித் துப்புகிறார்கள்..நீர் எழுந்து நின்று கிறிஸ்துவுக்காக வைராக்கியம் பாராட்டி அவர் மேலுள்ள அந்த வெட்கத்தைத் துடைக்க மாட்டீரோ?’

‘அப்படியானால் நீ உன் கணவனை இழக்க நேரிடும்..என்று ரிச்சர்ட் சொல்ல,’ ‘ஒரு கோழையை என் கணவனாகப் பெற்றிருப்பதை நான் விரும்பவில்லை..’ என்று சொன்னார் சபீனா.

அப்போது பேச எழுந்து நின்ற அந்தப் பேர்பெற்ற போதகரும் தாங்கள் சொன்னதையே வழிமொழிவார் என்று எல்லாருடைய பார்வையும் அவர் மேல் பதிந்திருக்க, அவரோ, கம்யூனிஸ்ட்களின் புகழ்பாடுவதற்குப் பதிலாக இயேசு கிறிஸ்துவுவே இரட்சிப்படைய ஒரே வழி என்றும், நாம் முதலாவது உண்மையாய் இருக்க வேண்டியது தேவனுக்கே அல்லாமல் கம்யூனிஸத் தலைவர்களுக்கு அல்ல’ என்றும் தெள்ளத் தெளிவாக அங்கிருந்த கூட்டத்தை நோக்கித் தைரியமாய்ச் சொன்னார். ருமேனியா முழுவதும் நேரடியாய் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்த அவரது அந்த சவாலை ஆயிரக்கணக்கானவர்கள் அன்று கேட்டுக் கொண்டிருந்தனர்.

தங்கள் கொள்கைகளுக்கு அதனால் ஏற்படப்போகும் பாதிப்பை உணர்ந்த கம்யூனிஸ்ட் அதிகாரிகள் அவரிடமிருந்து மைக்கைப் பிடுங்க மேடைக்கு நேரே ஓட, ரிச்சர்டோ பின்வாசல் வழியாகத் தப்பிச் சென்றார். அன்று முதல் அவரது தலைக்கு விலை குறிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து.. கர்த்தருக்காக தைரியமாய் நின்ற ஒரே காரணத்துக்காக 14 வருட சிறைவாசமும் சித்ரவதையும் அனுபவித்தார் ரிச்சர்ட் உம்பிராண்ட்..

தேசம் முழுமைக்கும் முன்பாக கிறிஸ்துவின் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசத்துக்காக சவாலைச் சந்திக்கும் வாய்ப்பு நம்மில் அநேகருக்குக் கிட்டாமல் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு நாளும் நாம் இருக்குமிடத்தில் அவருக்காக நமது விசுவாசத்தைப் பறைசாற்றி நிற்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். எத்தனை பேருக்கு முன்பாக நின்று சாட்சி சொல்கிறோம் என்பது பெரிதல்ல, ஆனால், நாம் அவருக்காகத் திடமாய் நிற்க நாம் எடுக்கும் உறுதியே காரியம்! நமது வாழ்க்கை நாம் சொல்லும் சாட்சியை சார்ந்திருப்பதில்லை. ஆனால் நமது வேலையும் பணியும் நமது விசுவாசத்துக்காக நாம் தைரியமாய்க் குரல் கொடுக்கும் நமது தீர்மானத்தைப் பொறுத்தே இருக்கிறது. ஒரு வேளை அந்தத் தீர்மானத்தால் நாம் ஒரு உறவை இழக்க நேரிடலாம். ஒரு வேளை நமது குடும்பத்திலிருந்து வெளியேற்றப்படலாம். நமது விசுவாசத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைத்து வைப்பதைக் காட்டிலும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அந்த விசுவாசத்தினிமித்தம் ஏற்க வேண்டிய பலாபலன்களைத் தாங்கிக்கொள்வதே சிறந்தது. கிறிஸ்துவுக்காகத் தைரியமாய் நிற்க எங்கே, எப்போது ஒரு வாய்ப்பை இன்று நீ பயன்படுத்திக்கொள்ளப்போகிறாய்?

இப்படியும் ஒரு விலைக்கிரயமா ?

30

இந்தியா : பாஸ்டர் காந்த்தேஷ்வர் டிகல்

‘கிறிஸ்து வின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கி றேன்..’

கொலோ 2:2

தன்னைச் சுற்றிவளைத்துக்கொண்ட அந்தப் பதினெட்டு பேரைப் பார்த்து, ‘நான் கிறிஸ்துவில் ஆழமான ஒரு விசுவாசி, நீங்கள் என்னைக் கொன்று போட்டாலும் நான் ஒரு போதும் இந்துவாக மாறமாட்டேன்’ என்று உறுதியாய்ச் சொன்னார் பாஸ்டர் டிகல்.

அந்த செப்டம்பர் 20, 2008 அன்று இந்தியாவின் ஒரிசாவிலுள்ள, தான் பிறந்த கிராமத்துக்கு பஸ்ஸில் வந்து கொண்டிருந்தார் பாஸ்டர் டிகல். இதற்கு ஒரு மாதம் முன்பு, கம்புகளோடும், கத்திகளோடும், அரிவாள்களோடும் ஒரிசாவின் பல கிறிஸ்தவக் கிராமங்களில் மட்டுமல்லாது, இந்தியாவின் இன்னும் ஐந்து மாநிலங்களில் புகுந்த இந்துத்துவத் தீவிரவாதிகள், சபைகளையும் வீடுகளையும் நொறுக்கி, கிறிஸ்தவர்களை அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தனர். ஒரு மாதம் முழுவதும் நடந்த இந்த மஹாமயம், நூற்றுக்கும் மேலான ஒரிய கிறிஸ்தவர்களை உயிரோடு விழுங்கி, ஏறக்குறைய எழுபதாயிரம் கிறிஸ்தவர்களைத் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தி, அவர்களை அகதிகளாக்கிற்று. அதில் போதகர் டிகலும் ஒருவர்..

கலவரம் ஓய்ந்துவிட்டது என்று நினைத்து, தன் குடும்பத்தின் உடைமைகளையும் ஆடுமாடுகளையும் தேடும்படியாகத் தன் கிராமத்துக்குத் திரும்பிவந்தார் போதகர் டிகல். அவர் தனது கிராமத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது 18 பேர் கொண்ட கும்பலொன்று அவரைத் தடுத்து நிறுத்தியது. அந்த நெரிசலான தூசி நிறைந்த பஸ்ஸிலிருந்து வெளியே இழுத்துப் போடப்பட்டார் பாஸ்டர் டிகல். அவரது கால் எலும்புகள் நொறுங்கும் சத்தத்தையும் சட்டை செய்யாத அந்தக் கும்பல் அவரை இந்து மதத்துக்குத் திரும்பும்படிக் கூச்சலிட்டது. அதை அடியோடு மறுத்த அவரது கைகளையும் கால்களையும் கட்டி, அவரது ஆடைகளை முழுவதும் உரிந்து அவரைக் கண்மூடித்தனமாய் நொறுக்க ஆரம்பித்தனர் அவர்கள்.

அவரது முகத்தை நெருப்பினால் சுட்டெரித்து அவர்கள் செய்த சித்ரவதைகளை எழுதக் கைகள் நடுங்கும். அவரது ஊசலாடிக் கொண்டிருந்த உடலை அங்கிருந்த ஓடை ஒன்றில் வீசிச்சென்றது அந்தக் கும்பல். அதிலே பல நாட்கள் ஊறி மிதந்துகொண்டிருந்தது அவரது சடலம்.

என் தகப்பனார் கிறிஸ்துவை அறியாத தனது கிராம மக்களுக்காகத் தனது வாழ்வைத் தத்தம் செய்தார். கொல்லப்பட்ட என் தகப்பனாரையும் அவரது கிராமத்தையும் நினைக்கும்போது, தியாகம் செய்யப்பட்ட அவரது வாழ்க்கையின் மூலம் அவர்கள் கிறிஸ்துவை அறிந்து, அவரையே தங்கள் ஆண்டவரும் சொந்த இரட்சகருமாய் ஏற்றுக் கொள்வார்களாக!' என்கிறார் பாஸ்டர் டிகலின் மகன் ராஜேந்திரா.

இப்படியும் ஒரு முதிர்ச்சியா?

31

ஜப்பான்: இபாராகி குன்

என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

1 தீமோ 4:12

அந்த 26 கிறிஸ்தவர்களும் பொய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு சிலுவை மரம் போன்ற மரக்கட்டைகள் அடிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த இடம் நோக்கி வரிசையாக நடத்திச் செல்லப்பட்டனர். ஏறக்குறைய 3 மாதங்களுக்கு முன்னர் ஜப்பானிலுள்ள க்யோட்டோ என்ற இடத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றியதற்காகக் கைது செய்யப்பட்டிருந்தனர் அவர்கள். அவர்களில் ஒரு குற்றவாளிதான் 12 வயதே நிரம்பிய இபாராகி குன்.

மிகவும் சிறு பையனாகிய குனைக் கண்ட அதிகாரி, அவனைத் தனியாக அழைத்துச் சென்று உயிர் தப்பும்படியாய், தன் விசுவாசத்தை விட்டுவிடச் சொன்னான். அந்த அதிகாரியை நேருக்கு நேர் பார்த்து, 'சார், நீங்களே ஒரு கிறிஸ்தவராகி விட்டால் உங்களுக்கு எவ்வளவு நல்லது, என்னோடு கூட நீங்களும் பரலோகம் செல்லலாமே' என்று தைரியமாகச் சொன்னான் குன்.

அங்கே நடப்பட்டிருந்த 26 சிலுவைகளிலேயே மிகச்சிறியதைக் காட்டினான் அந்த அதிகாரி. சிலுவையை நோக்கி ஓடிச்சென்ற சிறுவன் குன், அதற்கு முன் முழங்கால்படியிட்டு அதை அப்படியே மார்போடு அணைத்துக் கொண்டான். போர் வீரர்கள் அவனது கைகளையும் கால்களையும் ஆணிகளால் அறைந்த போது, வலியினால் அவன் துடிக்கவில்லை. தேவன் அவனுக்கென்று வகுத்திருந்த பாதையை தைரியத்தோடு ஏற்றுக் கொண்டான் அவன். 26 கிறிஸ்தவர்களும் சிலுவையில் அறையப்பட்ட அந்த நவம்பர் 23, 1596 தான் ஜப்பானில் கிறிஸ்தவர்களின் கொடும் உபத்திரவத்தின் துவக்கம். அடுத்து வந்த 70 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 10 இலட்சம் ஜப்பானியக் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாத்துக்காகக் கொல்லப்பட்டனர். 12 வயதிலேயே மிகவும் முதிர்ச்சியான இபாராகி குன்னின் மாதிரியைப் பின்பற்றி அதன் பின் அநேகர் தங்கள் தங்கள் சிலுவையை அணைத்து முத்தமிடத் தொடங்கினர்.

ஆவிக்குரிய முதிர்ச்சி என்பது பிறப்பு சான்றிதழை வைத்து அளவிடப்படுவதல்ல. வம்சாவளிக்கும் பாவமன்னிப்புக்கும் சம்பந்தமில்லை.மாறாக, ஆவிக்குரிய முதிர்ச்சி என்பது ஒவ்வொரு நாளும் அளவிடப்படுகிறது. நாம் அன்றாடம் நமது விசுவாசத்தை எப்படி அப்பியாசிக்கிறோம் என்பதை வைத்தே முதிர்ச்சியும் அளவிடப்படும். பரவலான நம்பிக்கையின்படி நாம் வேதத்தை எவ்வளவு அறிந்திருக்கிறோம் என்பதும் அல்ல ஆவிக்குரிய முதிர்ச்சி. அநேகர் வேதத்தை நன்கு அறிந்திருந்தாலும், ஆவிக்குரிய முதிர்ச்சி என்பதெல்லாம் அவர்களுக்கு எட்டாத ஒன்றே! வேதத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே முதிர்ச்சியின் அடையாளம். நாம் எவ்வளவு தூரம் ஆவிக்குரிய வகையில் வளருகிறோம் என்பதற்கு ஒரே ஒரு கேள்வி மாத்திரமே போதும். நேற்றை விட இன்று நாம் எவ்வளவு தூரம் இயேசுவைப் போலக் காணப்படுகிறோம்' என்று நம்மை நாமே ஒவ்வொரு நாளும் கேட்டுக் கொள்ள வேண்டும். அதற்கான நமது பதிலே நமது வளர்ச்சியின் பிரதிபலிப்பு.

இப்படியும் ஒரு விருப்பமா? 32

பிலிப்பைன்ஸ் - ஒரு சிறு பெண்

'என் ஒயிட் ட்ரெஸ்ஸை எனக்குக் குடுங்க..' அந்த சிறு பெண்ணின் வீங்கிய உதடுகளிலிருந்து வார்த்தைகள் தட்டுத் தடுமாறி முணுமுணுப்பாய் வெளிவந்தது ..

அந்தப் பிள்ளையின் படுக்கையைச் சுற்றி நின்று கொண்டிருந்த விசுவாசிகளின் முகத்தில் சோகம் அப்பியிருந்தது. அவளது அளவுக்கதிகமான உள் காயங்களினால் மருத்துவர்களும் அவளுக்கு ஒன்றும் செய்ய இயலாத நிலையிலிருந்தனர். சில வாரங்கள் முன்பு தான் கிறிஸ்து இயேசுவுக்குள் அவளது புதுப் பிறப்பையும் பரிசுத்தமான உள்ளத்தையும் கொண்டாடும் விதமாக அந்த சபையின் விசுவாசிகள், அவளுக்கு ஒயிட் கவுன் (White Gown) ஒன்றைப் பரிசாக அளித்திருந்தனர்.

'இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப் படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்'

மாற்கு 14:9

ஆனால் அவளது தகப்பனோ, கிறிஸ்துவுக்குப் பின் செல்லத் தீர்மானித்துவிட்ட தனது மகளின் தீர்மானத்தை சற்றும் விரும்பவில்லை. ஒரு நாள் இரவு பயங்கர குடி போதையில் வந்த அவன், தன் மகளை அடித்து உதைத்து 'செத்துப்போ' என்று சாக்கடையில் தூக்கியெறிந்துவிட்டுப் போய் விட்டான்.

சபைக்கு அவள் வராததைக் கண்ட அவளது கிறிஸ்தவ நண்பர்கள், அவளைத் தேடிச்சென்றபோது, ஒரு சேற்றுக் குவியலுக்குள்ளே, அவளது அழகான வெள்ளை உடை, சேறும் சகதியுமாய் இரத்தத்தில் கசங்கிக் கிடக்க, அவளோ அங்கே குற்றுயிரும் குலையுயிருமாய் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தாள்.. மருத்துவரிடம் அவளைக் கொண்டு வந்த போது அவளது காயங்கள் மிகவும் பயங்கரமாயிருந்தது.

அவளோ இப்போது 'என் ஒயிட் ட்ரெஸ்ஸைக் குடுங்க..என் ஒயிட் ட்ரெஸ்ஸைக் குடுங்க..' என்றே அரற்றிக் கொண்டிருந்தாள். 'ட்ரெஸ் ரொம்ப நாசமாயிடுச்சும்மா' என்று அவளது சிநேகிதிகள் சிலர் சொன்னார்கள். அழுக்கும் கந்தலுமாகிப் போன

உடுப்பையே பற்றி சொல்லிக் கொண்டிருந்தால் அவள் சோர்ந்து விடுவாள் என்று நினைத்து சிலர் அவளது கவனத்தை மாற்றும் எண்ணத்துடன் பேச்சைத் திசை திருப்ப முயன்றனர்.

'என் ட்ரெஸ்ஸை மட்டும் எனக்குக் குடுங்க..என் இயேசப்பா கிட்ட காட்டணும்..அவர் எனக்காக இரத்தம் சிந்தினாரே! நானும் கூட அவருக்காக இரத்தம் சிந்தத் தயாரா இருக்கேன்னு மட்டும் அவருக்குச் சொல்லணும். கொஞ்சம் குடுங்களேன்..' என்று பத்தே வயது நிரம்பிய ஒரு சிறுபிள்ளையின் விசுவாசத்தோடு திரும்பத் திரும்ப விசும்பிக் கொண்டேயிருந்த அந்தச் சிறுமியிடமிருந்து சிறிது நேரத்தில் அவளது உயிர் பிரிந்தது.

தேவன் நமது திறமைகள் மேல் விருப்பங்கொண்டவர் அல்லர். நாம் திறமைகள் பல கொண்டவர்களாகவோ, அறிவில் சிறந்தவர்களாகவோ, பணம் படைத்தவர்களாகவோ தொழில் முனைவர்களாகவோ, பேர் புகழ் பெற்று முன்னணி வகுப்பவர்களாகவோ கூட இருக்கலாம். தேவனது ஊழியத்தில் நமது பல்வேறு திறமைகளை அவருக்குக் காணிக்கையாகப் படைப்பதைக் காட்டிலும் நம்மை நாமே அவருக்குக் காணிக்கையாகத் தருவதைப் போன்ற அர்ப்பணிப்பு வேறு எதுவுமல்லை..

நமது தாலந்துகளும் திறமைகளும் நம்மைப் பற்றியதே - தேவனுக்காக ஏதேதோ செய்வதில் நம்மை நாமே பார்த்து ரசித்துக்கொள்கிறோம். ஆனால் அதற்கு மாறாக, நாம் அவரது கரத்தில் அவருக்கென்றே அவருக்குக் கிடைத்து விடும்போது, அவர் தமது ஊழியத்தில் எங்காவது நம்மை உபயோகிப்பாரா என்ற ஏக்கத்தில், அங்கே நாம் நாமாக அல்ல..அவரே அங்கு எல்லாமாகத் தெரிகிறார்.

தேவனுக்கு நம்மைத் தத்தம் செய்துவிடுவது என்பது, எப்படிப்பட்ட விலைக்கிரயமானாலும் அவருக்குக் கீழ்ப்படிந்துவிட நம்மை சமூலமாய்ப் படைத்துவிடுவது என்பதே. நாம் எப்பேர்ப்பட்ட திறமைகள் உள்ளவர்களாயிருந்தாலும் அவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் நமது முழு அர்ப்பணிப்பையே அவர் விரும்புகிறார். அப்படி ஒரு அர்ப்பணிப்புக்கு நாம் முன் வருவது எப்படி ? அதுவும் கூட தேவனது ஈவே அல்லாமல் வேறல்ல. காரணம், நம்மை நாமே சமூலமாய் அர்ப்பணித்துவிடும் 'விருப்பத்தை' நமக்குள் தருபவரும் அவரே!

இப்படியும் ஒரு ஞாபகார்த்தமா ?'

33

சூடான் : ஜேம்ஸ் ஜேடா

இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்

வெளி 7:14

'ஏய்! போய் விறகு பொறுக்குடா..' - அந்த இராணுவத்தினர் உறுமினர். அவர்கள் இரவு உணவு சமைக்கப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டான் சிறுவன் ஜேம்ஸ் ஜேடா. தெற்கு சூடானில் அன்று காலையில்தான் அவனது பெற்றோரையும் நான்கு சகோதர சகோதரிகளையும் அவன் கண்ணெதிரே கதறக் கதறக் கொன்றனர் அந்த இஸ்லாமிய அடிப்படைவாதிகள். அவனை வைத்து வேலை வாங்குவதற்காக அவனை மட்டும் உயிரோடு வைத்திருந்தனர்.

நெருப்பு மூட்டப்பட்டவுடனே, அவர்கள் திடீரென்று அவனைப் பிடித்து இழுக்க, பயந்து அலறிய ஜேம்ஸ், தப்பித்து ஓடப் பார்த்தான். ஆனால் பயங்கர பெலசாலிகளாயிருந்த அவர்கள் அவன் கைகளையும் கால்களையும் கட்டினர்.

ஒருவன் சொன்னான்.. 'டேய் சின்னப்பயலே, உனக்கு ஒரு நல்ல செய்திடா..பேசாம முஸ்லிமா மாறி எங்களோட சேர்ந்திரு.. உன்னை உயிரோட விட்டுர்றோம்..' 'நான் ஒரு கிறிஸ்டியன்..நான் முஸ்லிமாக முடியாது.' என்று தெளிவாய்ச் சொன்னான் ஜேம்ஸ்.

சிறுவனின் விசுவாசத்தையும் வார்த்தையையும் கண்டு கொதித்துப் போன அந்த இராணுவ வீரர்கள், அவனைப் பிடித்து தீக்குள் எறிந்தனர். ஜேம்ஸ் எரிந்து சாம்பலாய்ப் போய்விடுவான் என்று நினைத்துக் கொண்டு தங்கள் சாமான்களைக் கட்டிக் கொண்டு அங்கிருந்து வெளியேறினர் அவர்கள். ஆனால் ஜேம்ஸ் மரித்துப் போகவில்லை. எப்படியோ நெருப்புக்குள்ளிருந்து உருண்டு உருண்டு வெளியே வந்த அவனுக்கு யாரோ உதவி செய்து அவனைக் காப்பாற்றிவிட்டனர். டாக்டர்கள் அவனது உயிரைக் காப்பாற்றி விட்டாலும், அன்று நடந்த சம்பவங்களின் 'நினைவுகளை மட்டும் அவன் தன் வாழ்நாள் முழுவதும் சுமந்து திரியவேண்டும். அவனது தோலின் கருகின பகுதிகளோடும், தழும்புகளோடும் தீக்காயத்தினால் கை ஒன்றும் பாதி பழுதடைந்திருந்தது.

பரலோகத்தில் இந்தத் தழும்புகளெல்லாம் மிகவும் கனத்துக்குரிய அடையாளங்களாய், ஜேம்ஸ் ஜேடா கிறிஸ்துவை விட்டுப் பின்வாங்காத அந்த நாளின் ஞாபகார்த்த நினைவுகளாகவே பார்க்கப்படும்.

ஞாபகார்த்தப் பொருட்கள் மேல் எப்போதுமே ஜனங்களுக்கு ஒரு கண் உண்டு. தங்கள் பயணத்தின் போது விமான நிலையத்திலோ, ரயில் நிலையத்திலோ பரிசுப் பொருட்கள் கடைகளில் ஞாபகார்த்தமாக ஏதாவது வாங்கவேண்டும் என்ற சோதனை எல்லாருக்குள்ளுமே எழுவதுண்டு. ஆனால் நமது வாழ்க்கையின் அனுபவத்தில் மிக முக்கியமான ஒன்றாக எப்போதும் நமது நினைவில் நிற்பது எது? கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக் கொடுத்த அந்த நாளோ?

தங்கள் ஒழுக்க நடத்தைகளோடு சமரசம் செய்து கொள்ளாததால் தாங்கள் புறக்கணிக்கப்பட்டு கீழே தள்ளப்பட்ட சந்தர்ப்பங்களை சிலர் நினைத்துப் பார்ப்பதுண்டு. மற்றவர்களோ, கிறிஸ்தவ வாழ்வின் , வகுப்பறையிலே உபத்திரவப் பாதையின் பால பாடத்தைப் படித்த அந்த நாளை ஞாபகம் வைத்திருப்பதுண்டு. இன்னும் சிலரோ விசுவாசி ஒருவரின் கல்லறைக் கல்வெட்டைக் காணும்போது 'அர்ப்பணிப்பின் அர்த்தம்' இதுதான் என்று நினைவுகூறுவதுண்டு. இந்த ஞாபகார்த்தங்கள் யாவுமே கிறிஸ்து இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தின் விலைக்கிரயத்தை நினைப்பூட்டும் விலையேறப்பெற்ற நித்தியமான நினைவுத்தூண்களே!

34

இரத்தசாட்சிக் கிரீடம்

அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு..
நெருக்கப்பட்டு
கழுமரம் ஏறினர்
அந்நாள் பரிசுத்தர்..

நெருப்பின் நாவுகள்
பாதங்களைப் பதம்பார்த்தன..
ஆயினும் விடுதலை பெறச்
சம்மதியாத இவர்..
தம் சாட்சியோடு
தம்மையும் இரத்தசாட்சியாக்கினர்..

சாட்டையடியோ
காய்ச்சிய கம்பியோ..
முறுமுறுப்பின்றி
முதுகைத் தந்தனர்..நம் முன்னோர்..

ஜீவன் ஒரு பொருட்டல்ல..
மனைவி மக்களும் ஒரு தடையல்ல..
எதற்கும் சமரசம் செய்யா
நம் சான்றோர் இவர்..

வெந்தீயில் வறுத்தெடுக்கப்பட்ட நேரம்..
தூதர் எழுதினார்..
அவரவர் பெயரை..
கர்த்தரின் டைரியில்
ஒரு நாள் சிங்காசனம் முன் திறந்து வாசிக்கப்பட..

முடிசூடும் நாளில் பெறுவர் இவர்..
தம் விலையில்லா இரத்தசாட்சிக் கிரீடம்..
கூடவே நாம் காண்போம்
அவர்களோடே கூடச் சென்ற
அவர்கள் அன்பின் கிரியைதனை..

நசுக்கப்பட்ட நொறுக்கப்பட்ட
பிளக்கப்பட்ட.. இவர்களின்
தலைகளில் சூடுவார் தேவன்..
தம் சொந்தக் கைகளால் பொற்கிரீடம்..
பெருமையோடும்
பெருமிதத்தோடும் சொல்வார்..

'நல்லது..
உண்மையும்
உத்தமமுமானவனே !
நல்ல போராட்டத்தைப் போராடினாய்!
ஜெயமாய் ஓட்டத்தை முடித்தாய்!

உலக ஓட்டத்தில்..
மனிதப் பார்வையில்
நீ ஒரு பைத்தியம் தான்..
உலகத்தால் துடைத்துப் போடப்பட்ட குப்பை தான்!
ஆனால் நீ என் பார்வைக்கு அருமையானபடியால்
கனம் பெற்றாய் !
நானும் உன்னை சிநேகித்தேன்!

எனக்கு உரியவனே!
என்னுடையவளே!
உலகத் தோற்றமுதல்
உனக்காகவே ஆயத்தம்
பண்ணப்பட்ட என்
உன்னத வீட்டில்
உன் ஆத்தும நேசரோடு
நித்திய நித்தியமாய்
வாழ்ந்து சுகிக்க
வரவேற்க வந்தேன்..

வா என் மகனே !!
வா என் மகளே !!

- Leonard Ravenhill

இப்படியும் ஒரு அநியாயமா?

35

ருமேனியா - பாஸ்டர் ஃப்ளாரெஸ்கு

‘அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப் படுத்து மட்டும் இளக்கரிப் பதுமில்லை, பதறுவதுமில்லை..

கொலோ 2:2

கம்யூனிச அதிகாரிகளால் தன் மகன் தன் கண்களுக்கு முன்னாலேயே அடித்து சித்ரவதை செய்யப்படுவதைக் காணச் சகிக்காதவராய் நொறுங்கிப் போனார் பாஸ்டர் ஃப்ளாரெஸ்கு. அவர், தானும் கொடுமையாய் அடிக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு நாளும் அந்தக் கம்யூனிஸ்ட்டுகள், பட்டினி போடப்பட்ட பெருச்சாளிகளைச் சிறை அறைக்குள் நீண்ட குழாய்கள் மூலம் செலுத்திக் கைதிகளை கடித்துக் குதற வைத்து ரசிக்கும் அந்தக் கொடுமையின் பயத்தால் ஏற்கனவே இரண்டு வாரமாய்த் தூங்காமலே இருந்தார் அவர். பாஸ்டர் ஃப்ளாரெஸ்குவின் இரகசிய சபை அங்கத்தினர்களின் விபரங்களை அவரிடமிருந்து பெற்று அவர்களையும் கைது செய்வதிலேயே குறியாயிருந்தது கம்யூனிஸப் போலீஸ்.

கொடுமையான அடிகளாலும் சித்ரவதைகளாலும் கூடத் தாங்கள் நினைத்ததைச் சாதிக்க முடியவில்லை என்று கண்டபோது, ஃப்ளாரெஸ்குவின் பதினான்கே வயது நிரம்பிய மகன் அலெக்ஸாண்டரை அவருக்கு முன் கொண்டு வந்து நிறுத்தி அடிக்க ஆரம்பித்தனர் அவர்கள். சபை விசுவாசிகளின் வீடு விபரங்களைத் தராவிட்டால் உன் மகனை அடித்தே கொன்று விடுவோம் என்று சொல்லி அவர் கண்களுக்கு முன்னாலேயே அவனை ஈவு இரக்கமின்றி நொறுக்க ஆரம்பித்தனர் அந்தக் கம்யூனிஸ்ட்டுகள்.

கடைசியாக, பாதிப் பைத்தியமான நிலையில் ‘நிறுத்துங்க’ என்று கத்தினார் அவர்.

‘அலெக்ஸ்..இதுக்கு மேல அவங்க உன்னை அடிக்கிறத என்னால தாங்கமுடியாது. அவங்க கேக்கிறதை நான் சொல்லப்போறேன்..’

உடம்பு முழுவதும் இரத்தக் களறியாய், மூக்கிலும் வாயிலுமிருந்து இரத்தம் ஊற்றிக் கொண்டிருக்க, தன் தகப்பனாரின் கண்களை நேருக்கு நேர் பார்த்து, 'டாடி! துரோகி என்று பெயரெடுத்த ஒரு மனிதனைத் தகப்பனாராய்ப் பெற்றேன் என்ற அநீதியை மட்டும் எனக்குச் செய்துறாதீங்க..அவுங்க என்னைக் கொன்னாலும் என் வாயிலே இயேசு என்ற வார்த்தையோட தான் சாவேன்..தைரியமா நில்லுங்கப்பா..' என்றான் அலெக்ஸாண்டர்.

பையனின் தைரியத்தால் இன்னும் மூர்க்கமடைந்த கம்யூனிஸ்ட் காவலர்கள் அவனது தகப்பனாரின் கண்முன்னாலேயே அவனை அடித்துக் கொன்றனர். தான் தனது விசுவாசத்தைக் காத்துக் கொண்டதுடன், தன் அப்பாவும் தமது விசுவாசத்தைக் காத்துக்கொள்ள உதவி செய்தான் அவன்.

இந்த உலகத்தில் நீதி நியாயமில்லையோ? குற்றமற்றவர்கள் மேல் இழைக்கப்படும் அநீதிகளைக் காணும் போதும் அவர்கள் மேல் நிகழ்த்தப்படும் கொடுமைகளைக் குறித்துப் படிக்கும் போதும் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நிற்கிறோம் நாம். கொடும் பாதகர்கள் கையில் குரூரமாய் வதைபடும் சாட்சிகளைக் கேட்கும் போதே நமது விசுவாசம் விழுந்து போக வாய்ப்பு உண்டாகிவிடுகிறது. இரக்கம் கிடைக்க நீண்ட நெடுங்காலமாகும் போது, நாம் சோர்ந்து இளைத்துப் போகிறோம். நமது கூக்குரலுக்குப் பதில் தரும் விதமாக வேதம் சொல்வது இதுவே..'ஆம்! நீதி சரிக்கட்டப்படும்..ஆனாலும் இப்போதைக்கு அல்ல..'

சில கொடுங்கோலர்கள் தங்கள் கிரியைகளுக்கான சரிக்கட்டுதலை உடனுக்குடன் இங்கேயே அடைந்து விடுகின்றனர். ஆனாலும் தேவனின் வல்லமையான கரங்களின் நித்திய நித்தியமான நீதி பூமியின் மேல் வந்திறங்க இன்னும் அதற்கென்று ஒரு காலம் உண்டு. நாம் காத்திருந்து காத்திருந்து கலங்கிக் கசங்கிப் போகலாம்..ஆனால் அவரோ பூமியின் மேல் நியாயம் செய்வதற்கு இன்னும் நீடிய பொறுமையுள்ளவராகவே இருக்கிறார்..

‘ஜெபத்துக்கு இப்படியும்’ ஒரு பதிலா?

36

க்யூபா - Tom White



உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

வெளி 3:8

தலை முதல் கழுத்து வரை முழுவதும் மறைக்கும் அந்தக் கறுப்பு முகமூடி கொண்டு டாம் ஒயிட்டின் (Tom White) தலையிலிருந்து முகம் முழுவதும் இழுத்து மூடப்பட்டபோது, தான் திரும்பவும் தன் கண் கொண்டு வெளிச்சத்தைப் பார்ப்பேனா என்று நினைத்தார் டாம் ஒயிட். அந்தக் கியூபக் காவலர்களிடம், ‘என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்? என்று கேட்க, அவர்கள் பதில் ஏதும் பேசவில்லை.

கடந்த ஏழு வருடங்களாக கியூபாவுக்குள் கிறிஸ்தவ இலக்கியங்களையும் பிரசுரங்களையும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகளையும் இரகசியமாகக் கடத்திக்கொண்டிருந்தார் டாம். அவரும் அவருடனிருந்தவர்களும் அந்தக் கம்யூனிஸ்ட் தீவைச் சுற்றியுள்ள கடலில் மேலிருந்து ஏரோப்ளேனின் பாராச்சூட் மூலம் சுவிசேஷக் கைப்பிரதிகளை போட்டு வந்தனர். ஆனால் ஒரு நாளும் க்யூபாவிலுள்ள ஒரு கிறிஸ்தவர் மூலமாவாவது தங்களது கிறிஸ்தவப் பிரதிகள் வந்து சேர்ந்தன என்று அவர் ஒரு போதும் கேள்விப்பட்டதேயில்லை.

‘தேவனே, எங்கள் பிரயாசங்கள் நிச்சயமாகவே கிரியை செய்கிறதென்கிற உறுதியைத் தயவு செய்து எங்களுக்குத் தாரும்’ என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தார் டாம்.

இப்போது ஆறு வாரங்களுக்குப் பிறகு கேப்டன் ஸேன்ட்டோாஸ் என்ற இன்டெலிஜன்ஸ் ஆபீசருக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தப்படக் கொண்டு போகப்படுகிறார் டாம். இப்போது நடந்தது இது தான். க்யூபாவிலே இவர்கள் சென்ற ப்ளேன் விபத்துக்குள்ளாக, டாமும், பைலட் மெல் பெய்லியும் பிடிக்கப்பட்டு, நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டனர் இருவரும்.

'பல வருடங்களுக்கு முன் ஃப்ளைட்டிலிருந்து கியூபாவின் எல்லைகளுக்குள் போடப்பட்ட சுவிசேஷப் பாக்கெட்டுகளில் ஒன்றைத் தன் கையில் பிடித்தவனாக, 'இதைப்போன்று ஆயிரக்கணக்கான பாக்கெட்டுகள் எங்கள் கடற்கரைகளிலும் வெளி நிலங்களிலும் எங்கள் ஜனங்கள் கைகளில் கிடைத்தது. யார் இதைப் போட்டது?' என்று கத்தினான் கேப்டன் ஸேண்ட்டோஸ். Tom சிரிப்பை அடக்கிக்கொண்டார். 'நன்றி, ஆண்டவரே! என் ஜெபத்தைக் கேட்டீரே! எங்கள் பிரயாசங்கள் வீணாய்ப்போக நீர் விடவில்லையே..' என்று உள்ளூரத் துதித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் டாமின் ஜெபத்துக்கான பதிலுக்கு அவர் செலுத்திய விலை, கியூபாவின் சிறைச்சாலைகளில் அவர் செலவழித்த 21 மாதங்கள். ஆனால் அங்கே ஃபிடல் காஸ்ட்ரோவின் சிறைகளில் இரகசிய சபையின் அநேக விசுவாசிகளை அவர் சந்தித்தபோது, கேஸ்ட்ரோவின் இரும்புக்கரத்தின் கீழும் கூட கிறிஸ்துவின் சரீரமாகிய சபை வளர்ந்து பெருகிக்கொண்டிருந்ததைக் கண்டார் அவர். தேவன் அவரது ஜெபங்களுக்கு பதிலைத் தந்ததோடு அதை அவரது சொந்தக் கண்களாலும் காணும்படி செய்தார்.

ஜெபத்துக்குக் கிடைக்கும் பதிலின் விலை என்னவென்றோ, விலையேறப்பெற்ற பதில் என்பதின் அர்த்தம் என்னவென்றோ இன்றைய விசுவாசிகள் அறிவார்களோ? தேவன் நமது ஜெபங்களுக்குப் பதில் தரவேண்டுமென்று நாம் விரும்பினால், எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் அவரது பதிலைப் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். ஜெபத்திற்குப் பதிலாகப் பெற்றுக் கொள்ளும் விலையேறப்பெற்ற பதில் என்பது, ஜெபித்த நம்மையும் அதற்குள் உள்ளடக்குவது. நாம் நமது ஜெபங்களை தேவனுக்கு சமர்ப்பணம் செய்கிறோம். ஆனால் அவசியப்பட்டால் ஜெபத்தோடு கூட, நமது வாழ்க்கையையும் சேர்த்து சமர்ப்பணம் செய்கிறோமா? உபத்திரவத்துக்கு மத்தியில் ஒடுக்கப்படுகிறவர்களுக்காக நாம் அடிக்கடி ஜெபிக்கிறோம். ஆனால் அப்படி ஒடுக்கப்படுபவர்களுக்கு ஆகாரமும் நிவாரணமும் அளிக்க நமது சபைகள் மூலம் ஒழுங்கு செய்யப்படும் மிஷன் வாய்ப்புகளின்போது உதவி செய்யும்படி நமக்கு அழைப்பு விடுக்கப்படும்போது நமது பதில் என்ன?

தேவைகள் மற்றும் இக்கட்டுகள் மத்தியில் நமக்கு உதவும்படி தேவனை நாம் அழைக்கிறோம் என்றால், அதற்கு தீர்வுகாணும் நேரங்களில், அந்தத் தீர்வின் ஒரு பகுதியாக நாமே இருக்கும்படி அவர் நம்மை அழைக்கும் போது, நாமும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏதோ ஒரு பிரச்சனைக்காக நீ ஜெபித்து, இன்னும் அதற்கான தெளிவான பதிலை நீ பெற்றுக் கொள்ளாமலிருக்கிறாயா? ஒரு வேளை அந்தப் பிரச்சனையின் தீர்வுக்குள் உன்னையும் ஒரு பகுதியாக்கும்படி, உனது சம்மதத்திற்காகக் கர்த்தர் காத்துக்கொண்டிருக்கிறாரோ?

37

அம்மோரியா - ஏழு கைதிகள்

ஏழு வருடங்களாக அந்தத் தீவிரவாத முஸ்லிம் இமாம்கள் சிறையிலிருந்த வேற்று மதத்தினரை இஸ்லாத்திற்கு மாறும்படி அவர்கள் மனதை மாற்றத் தீவிரமாய் முயற்சி செய்துகொண்டிருந்தனர். ஆனல் அந்த இருண்ட டஞ்சன் பாதாளச் சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ விசுவாசிகள் மட்டும் மாறவேயில்லை.

'தீர்க்கதரிசிகளுக்கெல்லாம் மேலான தீர்க்கதரிசி முகம்மது நபியே..கிறிஸ்துவைக் காட்டிலும் மிகச் சமீப காலத்தில் வாழ்ந்தவர் அல்லாவின் இந்தக் கடைசி நபியே' என்று அந்த விசுவாசிகளுக்கு விளக்க அவர்கள் படாதபாடுபட்டனர்.

நீங்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

அப்போஸ்தலர் 1:8

மிகக்கவனமாகக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த அந்தக் கிறிஸ்தவர்கள், 'உங்கள் இஸ்லாத் மறைச்சட்டத்தின்படி ஒரு காரியத்தின் சட்டபூர்வமான தன்மையும் உறுதியும் அதின் சாட்சிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே அமைகிறது அல்லவா? அப்டியிருக்க இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் வருகையும் மோசே முதல் யோவான் ஸ்நானகன் வரையுள்ள தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருக்க, முகம்மதுவோ தன்னைப்பற்றித் தானே சொல்லிக் கொண்ட சாட்சியைத் தவிர வேறொரு சாட்சியும் அவருக்கு இல்லையே?' என்றனர்.

குழம்பிப்போன இமாம்கள் இன்னொரு வித்தியாசமான தாக்குதலைத் தொடுத்தனர்.

'நிச்சயமாகவே இஸ்லாம் ஒன்று தான் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மதம், ஏனெனில் கிறிஸ்தவத்தைக் காட்டிலும் பூகோள ரீதியில் அதிகமாய் பரம்பியிருப்பது இஸ்லாம் மட்டுமே!' என்றார்கள் ஒரு விஷமச் சிரிப்புடன்..

அது உண்மையானால் ஒரு காலத்தில் உலகமெங்கும் பரந்து விரிந்திருந்த பேரரசுகளான எகிப்து, கிரீஸ் மற்றும் ரோமாபுரியின் விக்கிரக ஆராதனை மதங்கள் அல்லவோ உண்மையான மதங்களாக இருந்திருக்க வேண்டும் !

உங்கள் விசுவாசம் உங்கள் வெற்றியினாலும் வலிமையினாலும் செல்வத்தினாலும் நிரூபிக்கப்படுவதல்ல..சில நேரங்களில் கிறிஸ்தவர்களுக்கு வெற்றியை அளிக்கும் தேவன் சில நேரங்களில் அவர்களை உபத்திரவம் மற்றும் சித்ரவதையின் பாதையிலேயே நடத்துகிறார்.

கடைசியாக கிபி 845ல் மத்திய கிழக்கு நகரான அம்மோரியாவிலிருந்த முஸ்லிம்கள் அந்தக் கிறிஸ்தவர்களை முஸ்லிம்களாய் மாற்றும் முயற்சியில் தோல்வியடையவே, அந்த ஏழு பேருடைய தலைகளும் சீவப்பட்டு அவர்கள் உடல்கள் யூப்ரட்டீஸ் நதியில் தூக்கி வீசப்பட்டது.

இயேசு நம்மைத் தமது சாட்சிகளாயிருக்கும்படி கட்டளையிட்டாரே தவிர, நமது எல்லா சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் பதில் பெற்றுக்கொள்ளும்படியாக அல்ல. ஒரு அவிசுவாசிக்கு நீங்கள் சொல்லும் வல்லமையான இரண்டே வார்த்தைகள் உண்டானால், அவை: 'எனக்குத் தெரியாது' என்பதே! ஒரு அவிசுவாசியின் அநேக சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் நிச்சயமாகவே உங்களிடம் பதில் இருந்தாலும், உங்கள் தகவல் நிறைந்த பதில் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதண்டாவாத பதிலை அவர்கள் வைத்திருப்பார்கள் என்பதை நீங்கள் அனுபவத்தில் அறிந்து கொள்வீர்கள். உங்களுக்குப் பதில் தெரியாத சூழ்நிலையில், உங்களுக்கு சாட்சி சொல்லும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால், 'எனக்குத் தெரியாது' என்று மட்டும் சொல்லிவிட்டு சாட்சி பகரும் சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடாமல் அதிலேயே கவனமாயிருங்கள். இயேசு கிறிஸ்துவோடு உங்களுக்குள்ள அனுபவமும் அவர் உங்கள் வாழ்வில் செய்தவைகளும் மறுக்கவே முடியாதவைகள் மாத்திரமல்ல, அதுவே உங்கள் பெலனுமல்லவோ ? உங்களுக்கு நேர்ந்ததை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதே மிக வலுமையான சாட்சி!

இப்படியும் ஒரு நம்பிக்கையா ?

38

இந்தோனேஷியா - பத்ரஸ்

எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத் திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத் தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள்நிமித்தம் எப்படிப்பட்டவர்களா யிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே

1 தெச 1:5

சமீபத்திய நேர்காணல் ஒன்றில் இந்தோனேஷிய கிறிஸ்தவரான பத்ரஸ் இப்படி ஒரு அறிக்கையைச் சொன்னார், 'எதிர்ப்புகள் எவ்வளவு தான் இருந்தாலும், இயேசு எங்களுக்கு இருக்கிறபடியால், ஒரு விசுவாசியாய் இருப்பது எங்களுக்கு ஒன்றும் கடினமானதல்ல..' நமக்கு இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்று காணப்பட்டாலும், இஸ்லாமிய ஆதிக்கத்திலிருக்கும் இந்தோனேஷியாவில் பத்ரஸ் போன்றவர்கள் மிகப்பெரிய தியாகமொன்றைச் செய்தே இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

உக்கிர கோபம் கொண்ட முஸ்லிம் தீவிரவாதக் கும்பலொன்று அவரது சபையைச் சுற்றி வளைத்து, ஜன்னல்களை உடைத்து, கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் வெறுப்பை உமிழ்ந்து கூச்சலிட்டுக்கொண்டிருந்தது. அந்நேரம் சபையின் போதகராகிய பத்ரஸின் தகப்பனார், பத்ரஸின் தாயார், சகோதரி, உறவினர் மற்றும் சக ஊழியர் ஒருவருடன் உள்ளேயிருந்தனர். வந்திருந்த கூட்டத்தை அவர் அமைதிப்படுத்த முயற்சித்தாலும், அவர்களோ அங்கிருந்து நகர்வதாக இல்லை. தேவனின் பாதுகாப்புக்காகவும் ஒத்தாசைக்காகவும் ஜெபிக்கும்படியாய் அவர் உள்ளே சென்றார்.

இரத்த வெறியேறியிருந்த அந்தக் கும்பல் சபைக் கட்டிடத்துக்குத் தீவைத்ததோடு, தப்பியோட வெளியே வரும் ஒருவரையும் உயிரோடு விடுவதில்லையென்று காத்திருந்தது. இந்தோனேஷிய போலீஸும் பயந்து நடுங்கி அவர்களுக்கு விரோதமாய் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. இராணுவமும் அங்கே இல்லை. கடந்த 10 ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட ஆலயங்கள் கொளுத்தப்பட்ட அந்த நாட்டில், அடுத்து கொளுத்தப்பட்ட இன்னொரு ஆலயம் இது.

சில மணி நேரங்களில் பத்ரஸ் அங்கு வந்து சேர்ந்தபோது அவர் கண்டதெல்லாம் எரிந்து சாம்பலாய்ப் போன ஆலயத்தையும் வீட்டையுமே. தான் நேசித்த அவரது குடும்பத்தினர் ஒவ்வொருவரும் அங்கே எரிந்து கரிக்கட்டையாய்க் கிடந்தனர்.

பின்னர் வந்த அரசு அதிகாரி ஒருவர், நடந்த சம்பவத்துக்காக பத்ரஸிடம் மன்னிப்புக் கேட்டதோடு, நடந்ததற்குப் பழிவாங்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். பழிவாங்குதல் பத்ரஸின் விருப்பமல்ல, அன்பு செய்வதே அவரது மனதாயிருந்தது. தன் நாட்டின் இஸ்லாமியர்களைக் கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடையவர்களாகவே அவர் பார்க்க விரும்புகிறார்.

இப்படியும் ஒரு சத்தியமா?

39

ருமேனியா : பாஸ்டர் கோச்சங்கா

'நாங்க உனக்குச் செய்யப் போறத நினைச்சு உனக்குப் பயமா இல்லையாடா?' கொக்கரிப்பும் சவாலும் கலந்த சத்தத்துடன் கிறீச்சிட்டான் அந்தக் கொலோனல்...

தன் ஊழியத்தில் இதுவரை ஒரே ஒரு பிரசங்கம் மாத்திரமே செய்திருந்த அந்த வாலிபப் போதகர் கோச்சங்கா, தன்னைப் பார்த்துக் கத்தும் அந்த மனிதனின் கைகளில் தான் தன் வாழ்வோ மரணமோ இப்போதைக்கு இருக்கிறது என்று அறிந்தவராய், அவனுக்கு முன் நின்று கொண்டிருந்தார்..

மரியாதைக்குரிய, ஆனால் மிகத் தெளிவும் திடமுமான குரலில் அவர் சொன்னார்,

'ஐயா, சத்தியம் ஒரு போதும் எதைக் கண்டும் அஞ்சாது. உங்கள் அரசாங்கம் இந்த நாட்டிலுள்ள கணித மேதைகள் எல்லாரையும் ஒரு சேர தூக்கிலிடப்போகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.. அப்போதும் கணிதத்தின் இரண்டும் இரண்டு என்னவாக இருக்கும் ? நான்காகத் தானே இருக்கும்..?

'கணித சூத்திரம் எவ்வளவு உண்மையோ, அதைப் போலவே எங்கள் சத்தியமும் உண்மையிலும் உண்மையே! ஒரு தேவன் இருக்கிறார் என்பதும் அவரே எங்கள் அன்பின் பிதாவாய் இருக்கிறார் என்பதுமே நாங்கள் கொண்டிருக்கும் சத்தியம்..இயேசு கிறிஸ்துவே உலக இரட்சகர் என்றும், அவர் ஒவ்வொருவரையும், ஏன் உங்களையும் கூட இரட்சிக்க ஆயத்தமாயிருக்கிறார் என்பதுமே நாங்கள் கொண்டுள்ளதும் அசையாமல் நம்புகிறதுமான சத்தியம். பரிசுத்த ஆவியானவர் என்ற ஒருவர் உண்டு என்றும் அவரே மனிதருக்கு வெளிச்சம் தந்து அவர்களை வல்லமையால் நிரப்புகிறவர் என்றும், மிக அழகான, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததுமான பரலோகம் என்ற ஒன்று உண்மையாகவே இருக்கிறது என்பதுமே எங்கள் சத்தியம்...'

'மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்தி லிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.'

மத்தேயு 10:32

‘நீங்கள் எங்களை வதைத்து சித்ரவதை செய்ய எப்படிப்பட்ட வகைகளையும் உபகரணங்களையும் கையாண்டாலும் எங்கள் சத்தியம் ஒரு போதும் மாறப் போவதில்லை. அது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் சத்தியம். இரண்டும் இரண்டும் நான்கைத் தவிர ஒரு போதும் ஐந்தாகப் போவதேயில்லை!’

இந்த சத்தியப் பிரகடனத்தைத் தொடர்ந்து கோச்சங்கா அடையாளமே தெரியாத அளவு அடித்து நொறுக்கப்பட்டு, அதன் பின் வெளியுலகுக்குக் காணப்படாமலே போனார். அடித்து நொறுக்கப்பட்ட இரத்தக் கோரமான அவரது முகம் சக கைதிகளால் அடையாளம் காணப்பட முடியாத அளவு அகோரமாய் இருந்தாலும், அவர் பரலோகத்திலே உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு ஆரவாரமாய் அன்று வரவேற்கப்பட்டார்.

இப்படியும் ஒரு உண்மையா ?

40

வில்லியம் பார்க்லே



ஒரு மனிதன் தன் விசுவாசத்துக்காகப் பகைக்கப்பட்டுத் தாக்கப்படும்வரை, அவன் தன் விசுவாசத்தின் விளைவுகளைப்பற்றி யோசிக்கத் தொடங்குவதே இல்லை. சபையானது தனக்கு விரோதமான மிகவும் ஆபத்தான மதவாதக் கொள்கைகளை எதிர்கொள்ளும்வரை, அது தனது வளமையான வளங்களையும் வல்லமையையும் கண்டு உணர்வதே இல்லை. அள்ள அள்ளக் குறையாத வளங்களைத் தன்னகத்தே கொண்டதும், தனது எப்படிப்பட்ட சூழ்நிலைக்கும் ஏற்ப புதிய வளங்களைத் தானே உருவாக்கிக் கொள்ளக்கூடியதுமான பண்பை உடையதுவே கிறிஸ்தவம்.

It is not until a man finds his faith opposed and attacked that he really begins to think about the implications of that faith. It is not until the church is confronted with some dangerous heresy that she begins to realize the riches and wonder of orthodoxy. It is characteristic of Christianity that it has inexhaustible riches, and that it can always produce new riches to meet any situation.

- William Barclay - The Daily Study Bible

இப்படியும் மிஷினரிகளா?

41

ருமேனியா - ரிச்சர்ட் உம்பிராண்ட்

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.

2 தீமோ 4:1

அந்த ரயில்வே ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்த ரயில் மெதுவாக நகர ஆரம்பித்தது தான் தாமதம், அங்கே ப்ளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த விசுவாசிகள் தங்கள் கோட் பாக்கெட்டுகளில் தாங்கள் மறைத்து வைத்திருந்த நூற்றுக்கணக்கான சுவிசேஷப் பிரசுரங்களை ரயில் பெட்டிகளின் ஜன்னல்கள் வழியே உள்ளேயிருந்த அந்த ரஷ்ய ராணுவ வீரர்களை நோக்கி வேகமாய் வீசினர்.

அந்த ரஷ்ய வீரர்கள், அவர்களில் சிலர் 16 வயது கூட தாண்டாதவர்கள், தங்களை நோக்கி இவற்றை வீசுபவர்களை, முக்கியமாக அவர்களில் அந்த அழகான இளம் பெண்களை நோக்கி விசிலடித்துச் சிரித்தனர். தங்கள் இராணுவ வண்டிக்குள் தூக்கியெறிப்பட்ட கைப்பிரதிகளை ஆச்சரியத்தோடு அள்ளிக்கொண்டனர் அவர்கள். சிறிது நேரத்தில் தங்கள் அதிகாரிகளின் தலை தெரிந்ததும், அவற்றை அவரவர் தங்கள் கோட் பாக்கெட்டுகளில் அவசர அவசரமாய்த் திணிக்க ஆரம்பித்தனர். சீக்கிரமே அந்த விநோதமான சிறு புத்தகப்பிரதியை அவர்கள் படித்துப் பார்த்து 'ராஜாவைப்' பற்றி இன்னும் அதிகமாய்த் தெரிந்து கொள்வார்கள் அவர்கள்.

வண்டி நகர்ந்ததும், பிளாட்பாரத்தில் நின்றிருந்த விசுவாசிகள் ஒருவரையொருவர் பார்த்து சற்று பயத்தோடு சிரித்துக்கொண்டனர். அவர்களில் ஒருவரைத் தனியே ஒரு பக்கமாய் அழைத்துச் சென்ற அங்கிருந்த போலீஸ், அவர்கள் செய்தது என்னவென்று விசாரிக்க, தன் காலி கோட் பாக்கெட்டைத் தானாகவே திறந்து காட்டினார் அவர். அவர்கள் அந்த ருமேனிய ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டுபோயிருந்த கைப்பிரதிகள் யாவும் இப்பொழுது ரஷ்யாவின் உட்பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலுக்குள் பத்திரமாய் சென்று சேர்ந்து விட்டிருந்தன..

ரஷ்யர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும்படி சுவிசேஷம் அறிவிக்க ரிச்சர்ட் உம்பிராண்ட், தன் சபை வாலிபர்களுக்குக் கற்றுத் தந்திருந்த நூற்றுக்கணக்கான முறைகளில் இந்த இரயில் பெட்டி சுவிசேஷ முறையும் ஒன்று. முதலில் ருமேனியர்களின் பட்சம் சார்ந்தது போலிருந்த ரஷ்ய இராணுவம், கொஞ்சங்கொஞ்சமாய் அந்த நாட்டின் செல்வங்களைக் கொள்ளையாடி, நாட்டிலுள்ள அநேகரைக் கொலை செய்து ஆடின வெறியாட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் ரிச்சர்ட் அந்த இராணுவ வீரர்களை வரவேற்கவே செய்தார். அந்த இராணுவ வீரர்கள் ஒவ்வொருவரிலும் அவர் ஒரு பணிக்களம் ஒன்றினையும், அவர்கள் ஒவ்வொருவரையும் ஆதாயப்படுத்த அது தனக்குக் கிடைத்த ஒரு ஆத்தும அறுவடையின் வாய்ப்புமாகவுமே கண்டார் அவர்..

அருட்பணி என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட ஊழியம் என்பதல்ல, அது மனித வாழ்க்கையைக் குறித்ததான ஒருவரின் கண்ணோட்டம். இப்படிப்பட்ட தீர்மானத்தைத் தனக்குள் சுமந்து கொண்டு, ஒரே நோக்கமும் பார்வையும் உடையவராய் அதனைத் தன் அனுதின வாழ்க்கையில் அப்பியாசித்து வெளிப்படுத்துபவரே ஒரு மிஷினரி.

ரிச்சர்ட் உம் பிராண்ட் இப்படிப்பட்ட அருட்பணிக்கென்றே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு மனிதர், அவருக்குள்ளிருந்த அந்த சுவிசேஷ அக்கினியையும் பாரத்தையும் நோக்கத்தையும் மிக நன்றாகவே அடையாளம் கண்டுகொண்ட அவரது சபை வாலிபர்கள் அவற்றைத் தங்களுக்குள்ளும் ஏற்றிக்கொண்டனர். அப்படிப்பட்ட வகையில், நாம் எல்லாருமே மிஷினரிகள்தான் - கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் - நாம் எங்கேயிருந்து எப்படிப்பட்ட பணி செய்பவர்களாயிருந்தாலும்..

அருட்பணியில் உங்களை இணைத்துக் கொள்ளும் நீங்கள், தேவ ராஜ்யத்தின் விரிவாக்கத்துக்கென்று எப்போதும் ஏதாவது ஒரு புதிய வாய்ப்புகளைக் கண்டுபிடிக்கக் கண்ணுங்கருத்துமாய் இருப்பது அவசியம். அது இரயில்வே ஸ்டேஷனோ, பஸ் ஸ்டாண்டோ, மளிகைக் கடையோ, பள்ளிக்கூடமோ, சைபர் கஃபேயோ, நீங்கள் தேவ ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக உங்களையே ஒப்புக் கொடுத்துவிட்டீர்களேயானால், ஒவ்வொரு நாளின் உலகமும் உங்கள் பணிக்களம்தான்..

இப்படியும் ஒரு மூடி மறைப்பா?

42

சவுதி அரேபியா -
ஒரு கணவனும் மனைவியும்

வெளியரங்கமாகாத இரகசியமுமில்லை, அறியப்பட்டு வெளிக்கு வராத மறைபொருளில்லை.

லூக் 8:17

வேறொரு நாட்டிலிருந்து எண்ணெய் வளமிக்க சவுதி அரேபியாவுக்கு வந்திருந்தனர் ஒரு கணவனும் மனைவியும்..

தங்கள் புதிய வீடு என்று தாங்களே அழைத்துக்கொண்ட இந்த முஸ்லிம் தேசத்தில் வேலை செய்து வாழ்ந்து வந்தனர் இவர்கள். போகப்போக மற்ற வெளிநாடுகளிலிருந்து வந்து பணிபுரிந்து கொண்டிருந்த கிறிஸ்தவ விசுவாசிகளோடு இணைந்துகொண்டு, தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொண்ட அவர்களோடு இவர்களும் தேவனை ஆராதிக்கத் தொடங்கினர். முகம்மது நபியின் மதத்தலைநகரில் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுவதும், பறைசாற்றுவதும் விரும்பத்தகாதது மட்டுமல்ல, சட்டத்துக்கு எதிரானதும் கூட.. ஜீவனுள்ள தேவனைத் தொழுதுகொள்வதில் தங்கள் விசுவாசத்தில் உண்மையாய் நிலைத்திருக்க, எவ்வித சிறைவாசத்தையும், நாடுகடத்தலையும், ஒரு வேளை மரண தண்டனை அளிக்கப்பட்டால் அதற்காகவும் கூடத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டனர் அந்தத் தம்பதியினர்.

இப்படிப் பல வருடங்கள் அமைதியாய்க் கடந்தன. திடீரென ஒரு நாள் சவுதி போலீஸ் அவர்கள் வீட்டைச் சுற்றி வளைத்தது. போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள், தங்கள் மத நம்பிக்கையைப் பற்றி விசாரிக்கப்பட்டனர். இதற்குள் பறிமுதல் செய்யப்பட்டிருந்த அவர்களது கம்ப்யூட்டரில் அவர்களுக்குத் தெரிந்த, தொடர்புள்ள உள்ளூர் கிறிஸ்தவர்களின் முகவரிகள் அடங்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தங்களைப் போலவே மற்றவர்களும் கைது செய்யபடலாம் எனப் பயந்தனர் அவர்கள்.

கணவன் மனைவி இருவரில், மனைவி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபட்டு, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், கணவனோ இன்னும் சிறையிலேயே இருந்தார். அவளோ தன் கணவனை விடுவிக்கும்படி வெளியிலுள்ள பல அரசாங்கங்களுக்கு பல முறை விண்ணப்பித்தும் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. மனித உரிமைக்காகப் போராடுபவர்கள் உதவி செய்வார்கள் என்று நம்பியிருந்தாள் அவள். ஆனாலும் பல நாடுகள் அவளது விஷயத்தில் தலையிடத் தயாராயில்லை. தன் மனைவியைத் திரும்பக் காணவும் முடியுமா என்ற தவிப்பில் இருந்தார் சிறையிலிருந்த கணவர். முஸ்லிம் தேசமான சவுதி அரேபியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பல்வேறு உபத்திரவ இரகசிய வழக்குகளில் இதுவும் ஒன்று. ஆனாலும் உண்மை ஒரு நாள் வெளிச்சத்துக்கு வரும்.

உலகத்திலேயே மிக அதிக அளவிலான தண்டனைகள் நிறைவேற்றப்படும் நாடு சவுதி அரேபியா. 1999ல் மட்டும் தனது நாட்டின் மனித உரிமை மீறலை மூடி மறைக்க ஒரு கோடி டாலர் அது செலவிட்டது. ஆனாலும் தங்கள் இரகசியத்தை என்றென்றைக்குமாக அவர்களால் மூடி மறைக்க முடியவில்லை. சவுதி சிறைகளிலே வாழும் கிறிஸ்தவர்களின் குரல் கேட்கப்பட்டு, அவர்கள் ஜெபங்களுக்கு நமது வாழ்நாட்களுக்குள்ளேயே பதில் கிடைத்து விட வேண்டுமென்று நாம் அவர்களுக்காக ஜெபிப்பது அவசியமாயிருக்கிறது. கிறிஸ்து திரும்பி வரும்போது, இந்த உலகின் எந்தப் பொது நல நிறுவனங்களும் இவ்வுலகின் யாரையும் அவரிடமிருந்து வழக்காடி விடுவிக்கப்போவதில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம்..ஆனாலும் இன்று நாம் செய்ய வேண்டியது என்ன? ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்க, நாம் எடுத்து வைக்கும் முதல் அடி ஜெபம் மட்டுமே! சத்துருவும் சளைத்தவன் அல்ல என்பதில் இரகசியம் ஒன்றுமில்லை. ஆனாலும் தேவன் அவனிலும் வல்லவர் அல்லவா? சிறையிலே வாடுபவர்கள் சார்பிலே தேவனின் வல்லமையை நீங்கள் எப்படி உபயோகிக்கப் போகிறீர்கள்?

இப்படியும் ஒரு தலைவணங்காமையா ?

43

ரோம சாம்ராஜ்யம் - தீபன் படைப்பிரிவு

கிபி 286 ல் ரோம இராணுவத்தின் தீபன் படைப்பிரிவின் 6666 படைவீரர்கள், ஃகோல் என்ற இடத்துக்குச் சென்று பர்கண்டியின் எதிர்ப்பாளர்களை அடக்கும்படி மேக்ஸிமஸ் மன்னனால் கட்டளையிடப்பட்டனர். இந்தப் படைப்பிரிவின் ஒவ்வொரு வீரரும் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட ஆழமான கிறிஸ்தவ விசுவாசியாய் இருந்தனர்.

ஆல்ப்ஸ் மலையின் கடுமையான பனிச்சரிவுகளுக்குள்ளே நெடுந்தூரம் கடந்து சென்ற அவர்கள் யுத்தத்தைத் துவங்குமுன் பெரிய பலி ஒன்றைச் செலுத்த வேண்டுமென்றுமென்று மேக்ஸிமஸ் ஆணையிட்டான். தேவனை கனவீனப்படுத்த மாட்டோமென்று தீபன் படைப்பிரிவின் வீரர்கள் யாவரும் மறுத்து விட்டனர். அவர்களது தலைவணங்காத்தனத்தைக் கண்டு கடுங்கோபம் கொண்ட மாமன்னன், அவர்களில் பத்து பேரில் ஒருவரைக் பட்டயத்தால் கொல்ல உத்தரவிட்டான். ஆயினும் படைவீரரில் ஒருவரும் தங்கள் தீர்மானத்தை மாற்றிக்கொள்வதாயில்லை. இப்படிப் பத்தில் ஒருவர் கொல்லப்பட்டபின், மீண்டும் படையின் வரிசையை மாற்றி, இரண்டாவது முறையும் பத்தில் ஒருவரைக் கொலை செய்ய உத்தரவிட்டான் மேக்ஸிமஸ். தன் ஆணையில் உறுதியாயிருந்த மன்னனால் அவர்கள் கொல்லப்படும்போது, தாங்கள் போர்க்களத்தில் கொல்லப்படும் கனத்தோடும் கௌரவத்தோடும் மரிப்பது போலவே மரித்தனர் அவர்கள்.

பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: 'தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்..' என்றார்கள்.

அப்போஸ்தலர் 4:19

தங்கள் சக தோழர்கள் தங்கள் கண்முன்னே கொல்லப்பட்டாலும், மீதியானவர்களோ தங்கள் தீர்மானத்தை விட்டுக் கொடுக்காமல் முன்பைக் காட்டிலும் தீவிரமாய் மறுத்து நின்றனர். தங்கள் அதிகாரிகளின் ஆலோசனையின்படி மன்னர் மேல் தாங்கள் வைத்திருக்கும் பெருமதிப்பையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தும் கடிதம் ஒன்றை மன்னருக்கு எழுதிய அவர்கள், தேவன் மேல் தாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும்,

அர்ப்பணிப்பும் மன்னருக்குத் தாங்கள் காட்டும் உண்மையேயன்றி வேறல்ல என்பதாயிருந்தது. இது மன்னரை சமாதானப்படுத்தும் முயற்சியாய் நினைத்தார்கள். ஆனால் நடந்ததோ அதற்கு முற்றும் எதிராகவே ! மன்னனின் கடுங்கோபம் தீபப் படைப்பிரிவு முழுவதையும் பட்டயக்கருக்குக்கு இரையாக்கியது.

தலைமைக்குக் கீழ்ப்படியாமை என்பது மிகப்பெரிய இராணுவக் குற்றம். ஆனாலும் தேவனுக்குக் கீழ்ப்படியாதது அதை விட மிகப்பெரிய குற்றம் என்பதால், தீபன் படைப்பிரிவினர் தேவனுக்கே கீழ்ப்படியத் தீர்மானித்தனர். மனிதர்கள் அதிகாரத்தோடு ஆளுகின்றனர். ஆனாலும் அதிகாரத்தைக் கொடுப்பவர் தேவனே! மனித சட்டம் தேவ கட்டளைக்கு முரண்பட்டதாயிருக்கும்போது, தேவ ஜனங்கள் மனித அதிகாரத்தை எப்படிப் புறக்கணிக்கிறார்கள் என்று வேதம் நமக்கு உதாரணங்கள் பல தருகிறது. பார்வோனின் கட்டளையைத் தள்ளின எபிரேய மருத்துவச்சிப் பெண்களையும், மோசேயின் பெற்றோர்களையும் கவனித்துப் பாருங்கள்! அந்நிய தேவர்கள் முன் மண்டியிட மறுத்த தானியேலையும், அவனது நண்பர்களையும் பாருங்கள்! வேத தாசர்களும், தீபன் படைவீரர்களும், மனித அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு ஒன்று நமக்கு உண்டு என்று நமக்கு நினைவூட்டினாலும், கூடவே அவர்கள் நிலைநின்ற தீர்மானங்கள், மனித அதிகாரத்தைக் காட்டிலும், தேவ ஆளுகைக்கே நாம் கனமும் மதிப்பும் முதலிடமும் கொடுத்தாக வேண்டும் என்பதைக் காட்டுகிறது. மனித சட்டதிட்டங்கள் தேவனின் கட்டளைகளுக்கு முற்றிலும் எதிரிடையாய் இருக்குமேயானால், தலையே போனாலும் தலைவணங்காமல்தான் நின்றிட வேண்டுமென்பதில் சந்தேகமே இல்லை!

இப்படியும் ஒரு பொய்யா ?

44

ரஷ்யா : ஒரு பல்கலைக்கழக மாணவன்

தேவனு டைய சத்தியத்தை அவர்கள் பொய்யாய் மாற்றினார்கள்..

ரோமர் 1 : 25

ரஷ்ய பல்கலைக்கழகம் ஒன்றில் தேவனற்ற நாஸ்திகப் பேராசிரியர் ஒருவர் வகுப்பறையின் கதவருகே தொங்கிக் கொண்டிருந்த லெனினின் போட்டோவைப் பார்த்து ஒரு புன்முறுவலோடு மேசை மேலிருந்த தண்ணீர் நிறைந்த பாத்திரத்தைத் தன் அருகே இழுத்துவைத்துக் கொண்டவராய், ஒரு பவுடர் பாக்கெட்டை மெதுவாக அந்தத் தண்ணீரில் கலக்க, அந்தத் தண்ணீர் சிவப்பு நிறமாய் மாறியது.

'இது தான் அற்புதம்' என்று தனது அன்றைய பாடத்தைத் தொடங்கினார் பேராசிரியர். இயேசு கிறிஸ்து இப்படித்தான் ஒரு பொடியை தனது அங்கிக்குள் மறைத்து வைத்திருந்து தண்ணீரில் போட்டு மிக அழகாக அதைத் திராட்சரசமாக்கினார். ஆனால் என்னால் இயேசுவை விட மிக அழகாய்ச் செய்ய முடியும்..இதே திராட்சரத்தை மீண்டும் தண்ணீராக்கிக் காட்டுகிறேன் பாருங்கள் என்று இன்னொரு பாக்கெட் பவுடரை அதில் போட, அது மீண்டும் தண்ணீரானது. மறுபடியும் அந்தத் தண்ணீரில் இன்னொரு பவுடரைப் போட மீண்டும் சிவப்பானது.

வகுப்பில் உட்கார்ந்திருந்த மாணவர்களில் ஒருவன் மட்டும் இந்த வித்தையினால் விந்தை அடையாமல், புரஃபசருக்கு சவாலிட்டான்.. 'காம்ரேட் புரஃபசர் அவர்களே, உங்கள் வித்தையினால் எங்களை ஆச்சரியப்படுத்தினீர்கள். நல்லது.. இன்னும் ஒரு வேலை செய்து காட்டுங்கள்-இந்தத் திராட்சரத்தை நீங்களே குடித்தும் காட்டிவிடுங்களேன்...!' இதனால் எரிச்சலடைந்த புரஃபசர், அதெல்லாம் முடியாது.. இது விஷத் தண்ணீர் இல்லையா?' என்றார்.

அப்போது அந்தக் கிறிஸ்தவப் பையன் சொன்னான்..'இது தான் உங்களுக்கும் இயேசுவுக்கும் உள்ள பெரிய வித்தியாசம்.. அவர் தமது இரட்சிப்பின் திராட்சரசத்தால் எங்களை மகிழப் பண்ணியிருக்க, நீங்களோ உங்கள் நாஸ்திகக் கொள்கைகளால் எங்கள்

சிந்தனைகளை விஷமேற்றுகிறீர்கள்..'அதைக் கேட்டுக் கோபமூண்ட பேராசிரியர், வகுப்பை விட்டு உடனே வெளியேறி, அவனைக் கைது செய்து சிறையிலடைக்கச் செய்தார். இந்தச் செய்தி காட்டுத்தீயாய்ப் பரவ, அநேகர் இந்த நிகழ்வால் தங்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டார்கள்.

மிக எளிதாய் சமரசம் செய்து தங்கள் விசுவாசத்தை விட்டுக்கொடுக்கச் சொல்லும் சத்துருவின் வாக்குறுதி ஒரு பச்சைப் பொய்யே ! அநேக டிப்பார்ட்மென்ட்டல் ஸ்டோர்கள் தங்கள் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும் வண்ணம் வாங்கின பொருட்களை மாற்றிக்கொள்ள வசதி செய்து கொடுக்கின்றன. தங்கள் திருப்திக்காகவும், தாங்கள் விரும்பும்படி பெற்றுக் கொள்வதற்காகவும், இந்தப் பண்டமாற்றுக்காகவே நீண்ட வரிசையில் நிற்பவர்கள் உண்டு. அதைப் போலவே வாழ்க்கையின் வரிசையில் தேவனது சத்தியத்தைக் கையில் வைத்துக்கொண்டு க்யூவில் நிற்கும் அநேக ஜனங்கள் இன்றும் உண்டு. தங்கள் அற்ப சந்தோஷத்துக்காக தேவனுடைய சத்தியத்தை உலகத்தின் எந்தக் காரியத்துக்காக வேண்டுமானாலும் சமரசம் செய்து மாற்றிக் கொள்ளும்படியாக அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. ஆனால் கடைசியிலோ ஏமாற்றம் மட்டுமே மிஞ்சுகிறது. சத்துருவின் பொய்களினூடே நீ ஊடுருவிப்பார்க்கும்படியாகவே தேவன் விரும்புகிறார்.

என்ன விலையானால்தான் என்ன? - தேவனுடைய சத்தியத்தை மட்டுமே பிடித்துக்கொள்!

இப்படியும் ஒரு விசுவாசமா ?

45

எகிப்து : ஒரு கிறிஸ்தவ யூத் லீடர்

அந்த வாலிபர் குழுவின் தலைவர் தன் குழுவினரைப் பார்த்து, 'இது தான் நம் திட்டம், பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சரியாய்க் காலை எட்டரை மணிக்கு மீட்டிங் அழைப்பிதழ்களைக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். இரகசியப் போலீஸ் வந்து நீங்கள் செய்கிறது என்னவென்று விசாரிக்கும் முன்பாக உடனடியாக அதை விநியோகித்து முடிக்க வேண்டும், யார் கைகளிலாவது கொடுக்க முடியாதபட்சத்தில், ஏதாவது ஒரு இடத்தில் யார் கண்ணிலாவது படும்படி வைத்துவிட்டு நகர்ந்து விடுங்கள்; சரியானவர்கள் கையில் தேவனே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவார்' என்றார்.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

எபிரெயர் 11:1

தங்கள் குழுத்தலைவரைச் சுற்றி பயத்தோடு நின்றிருந்த வாலிபர்களின் மனதில் தங்களை எகிப்திய போலீஸ் கைது செய்வது போன்று காட்சிகள் பளிச்சிட்டுச் செல்ல, 'அப்போ, நமக்குப் பெர்மிஷன் கிடைக்கிறதற்கு முன்னேயே இன்விட்டேஷனை குடுத்துறச் சொல்றீங்களா அண்ணா?' என்று கேட்டனர்..

'யெஸ்.. இங்க பாருங்க, நம்ம கொஞ்சம் விசுவாசத்தை செயல்படுத்திதான் பார்க்கணும்..முதல் அடி நாம் எடுத்து வைப்போம். மீதி கர்த்தர் கையில் இருக்கிறது..'

எகிப்தில் கிறிஸ்தவக் கூட்டங்கள் மிகக் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு அவைகள் அரசு ஒப்புதலின்றி நடத்தப்பட அனுமதிக்கப்படுவதில்லை. அன்று சரியாய் 8.30 மணிக்குப்பின் அந்த யூத் லீடர் போலீஸுக்குப் போன் பண்ணி தங்கள் கூட்டத்துக்கு அனுமதி கேட்டார்.

'நீங்கள் சரியான விண்ணப்பப் படிவங்களை நிரப்பித்தர வேண்டும், ஒரு மாதம் சென்று நாங்கள் அதற்குப் பதில் தருவோம்' என்று பதில் வந்தது.

'சாரி சார், ஆனால் நாங்கள் ஏற்கனவே மீட்டிங் நோட்டீஸ் கொடுத்துவிட்டோமே, எல்லாமே ஸ்டூடன்ட்ஸ் கையில் போய்ச் சேர்ந்துவிட்டதே?' என்று பயத்தோடு அந்த லீடர் சொல்ல, 'எங்கள் ஒப்புதலின்றி நீங்கள் ஏன் கொடுத்தீர்கள்? இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு முன் அனுமதி வேண்டுமென்று உங்களுக்குத்தான் தெரியுமே? சரி.. நீங்கள் விநியோகம் செய்து விட்டதால் இந்த முறை மட்டும் அனுமதி தருகிறேன்..' என்று முடித்தார் அந்த அதிகாரி.

இப்படியும் எழுதப்பட்ட பதிவுகளா?

46

இத்தாலி - எஸூபியஸ்



'அவர்கள் வந்து: அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப் போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்'

சங்கீதம் 22:31

ரோமச் சக்கரவர்த்தி டயக்ளீஷியனின் நாட்களிலே கிபி 303 ல் ரோம் நகரில் துவங்கியது 'மகா உபத்திரவம்.' கிறிஸ்தவ விசுவாசத்தை அடியோடு ஒழிக்க கிறிஸ்தவத்துக்கு விரோதமாய் டயோக்ளீஷியன் வெளியிட்ட அரசு ஆணையின் நாட்கள் அவை.. மிக நுணுக்கமாய் வரையறுக்கப்பட்ட அரசாணையின் பகுதியில் சில இவை ...

- *அரசு வேலைகளிலும் நியமனங்களிலும் இருக்கும் கிறிஸ்தவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள்..*

- *கிறிஸ்தவர்களுக்கு எதிரான எல்லாக் குற்றச்சாட்டுகளும் வரவேற்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன..*

- *தங்கள் நம்பிக்கைக்காகக் கிறிஸ்தவர்கள் சித்ரவதை செய்யப்படுவார்கள்..*

- *வேதபுத்தகங்களும் நூல்களும் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டுத் தீயிட்டுக் கொளுத்தப்படும்..*

- *தேவாலயங்கள் தரைமட்டமாக்கப்படும்..*

- *ஒரு கிறிஸ்தவனின் உரிமை யாவும் பறிக்கப்பட்டு, சபையின் தலைவர்களும், பிஷப்புகளும் ஆயர்களும் கைது செய்யப்பட்டு, ரோம தேவதைகளுக்கு பலியிடக் கட்டாயப்படுத்தப்படுவார்கள்..*

இப்படிப்பட்ட காலத்தில்தான், ஆதி சபைக்கு விரோதமான கொடுமைகளை எஸூபியஸ் என்ற இளம் எழுத்தாளர் ஒருவர் விலாவாரியாக எழுத ஆரம்பித்தார்.

சபைத் தலைவரும் வேத வல்லுநருமான பம்ஃபிலஸ் என்பவரே அவருக்கு முன்னோடியும் உத்வேகம் அளிப்பவருமாய் இருந்தார். கிபி 308ல் பம்ஃபிலஸ் கைது செய்யப்பட்டு சித்ரவதை செய்யப்படும் முன்பாகவே, அவர் எஸுபியஸின் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டாக்கி விட்டிருந்தார்.

'ஜெப வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதையும், பின்பற்றப்பட்ட பரிசுத்த வேதாகமங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டதையும், சபையின் போதகர்கள் ஆங்காங்கே உயிருக்குப் பயந்து வெட்கத்தால் ஓடி ஒளிவதையும் நாங்கள் கண்கூடாகக் கண்டோம் என்று தான் கண்டவைகளை எழுதிவைத்தார் எஸுபியஸ்.

கிபி 309ல் பம்ஃபிலஸ் கொல்லப்பட்டாலும், அவரது மரணம், எசுபியஸின் 'சபையின் சரித்திரம்' என்ற கையெழுத்துப்பிரதியை எழுதுவதிலிருந்து அவரைத் தடுக்க இயலவில்லை.

கிறிஸ்தவர்களின் நலனுக்கான அவரது பங்களிப்புக்காக எசுபியஸ் பின்னாட்களில் கைது செய்யப்பட்டாலும், அவர் கொலை செய்யப்படவில்லை. வருங்கால சபைக்குத் தனது செய்திகளை எழுதி வைக்கும்படியாக தேவன் அவரைப் பாதுகாத்து வைத்திருந்தார். அவரது எழுத்துக்கள், ஆதிசபை சந்தித்த உபத்திரவங்களை அடுத்தடுத்த சந்ததியினர் அறிந்து கொள்கொள்ளும்படியாய் அவர்கள் கண்களைத் திறந்தது. அவரது எழுத்துக்களிலும் பதிவுகளிலும் பொதிந்து கிடக்கும் அன்றைய கிறிஸ்தவத் தலைவர்களின் வாழ்க்கை மரபுகளும், வீர மரணங்களும் கிறிஸ்தவ விசுவாச வீரர்களின் மாபெரும் பாரம்பரியத்தை நமக்கு நினைப்பூட்டுகின்றன. இந்தப் பதிவேடுகளிலிருந்து நமது முற்பிதாக்களின் வீர விசுவாசத்தையும், அணையா அன்பையும் நாம் இன்றும் கற்றுக் கொள்வோமானால், அந்த எழுத்துக்களோ, அவர்களது பிரயாசங்களோ, பாடுகளோ விருதாவாய்ப் போவதில்லை. மிகப்பெரிய அர்ப்பணிப்புக்கு நேராக அடுத்த தலைமுறையை ஏவி எழுப்பும்படி நீங்கள் இன்று ஏதாவது செய்கிறீர்களா? என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உங்கள் அடிச்சுவடுகளை வரும் காலங்களுக்கு விட்டுச் செல்லும்படியாய் தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படியாய் ஜெபியுங்கள்..

இப்படியும் ஒரு ஜெபமா?

47

ஸ்விட்சர்லாந்து - மைக்கேல் ஸாட்லர்

தன் நாவு நறுக்கப்பட்டு அதன் பின், தான், உயிரோடு எரிக்கப்படப்போகும் அந்தத் தண்டனையினால் மைக்கேல் ஸாட்லர் ஆச்சரியத்துக்குள்ளாகவில்லை. பதினாறாம் நூற்றாண்டில், புதிய ஏற்பாட்டு சபையின் மாதிரிக்குத் திரும்ப நினைத்த ‘அனபாப்டிஸ்ட்’ குழுவின் அங்கமாய் இருந்தவர் மைக்கேல் ஸாட்லர். ஆனால் அன்றைய ஐரோப்பிய மதமும், சமுதாயமும் அந்த ‘அனபாப்டிஸ்ட்டுக்களை’ தங்களுக்கு ஆபத்தாகவே கண்டன.. குறிப்பிட்ட அந்த ஊரில் அன்று ஆங்காங்கே போய்க்கொண்டிருந்த அந்தக் கூட்டம், மார்க்கெட் வெளியிலே கூடத் தொடங்கியது. அங்கே அரங்கேறப்போகும் அந்த மரண தண்டனையைக் காணும்படிக் கூடியிருந்த அந்தக் கூட்டத்திலே, தண்டனைக் கைதிக்கு வெகு அருகிலேயே நின்று கொண்டிருந்தான் க்லாஸ் வோன் ஃக்ராஃபினெக் என்ற 25 வயது வாலிபன்.

‘எந்தச் சமயத்திலும் சகலவித மான வேண்டுதலோடும், விண்ணப்பத் தோடும் ஆவியினா லே ஜெபம் பண்ணுங்கள்..’

எபேசியர் 6:18

தனக்குப் பேச்சு வராத அந்த நிலையிலும், தன்னருகில் நின்று கொண்டிருந்த அந்த வாலிபனுக்காக, ‘ஆண்டவரே, இந்த வாலிபனின் கண்களைத் திறப்பீராக!’ என்று ஜெபித்தார் மைக்கேல்.

அதைக்கண்ட அந்த வாலிபன் அதிர்ச்சியோடு மைக்கேலைப் பார்த்தான். கொலையாளி மைக்கேலின் கைகளைக் கட்டும்போது, ‘நீங்கள் மனந்திரும்புங்கள்..’ என்று கூட்டத்தை நோக்கித் தன் உடைந்த குரலில் சொன்ன மைக்கேல், ‘சர்வ வல்ல நித்திய தேவனே, இன்றைய நாளில் நான் சத்தியத்துக்கு சாட்சியாய் நிற்பதை என் இரத்தத்தினால் முத்திரையிடுகிறேன்.’ என்றார்..

இதைச் சொல்லி முடிக்கும்போதே அந்தக் கொலையாளி, மைக்கேலை எரியும் நெருப்பில் தூக்கி எறிந்தான். அவரது கைகளில் கட்டப்பட்டிருந்த கயிறுகள் நெருப்பில்பட்டு சாம்பலானபோது, தன் கரங்களை உயர்த்தி, ‘பிதாவே என் ஆவியை உமது கரங்களில் ஒப்புவிக்கிறேன்..’ என்றார் மைக்கேல்.

தனக்காக மைக்கேல் ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு உள்ளாகத் தொடப்பட்ட க்லாஸ், மைக்கேல் ஸாட்லரின் மரணத்தை ஒரு நினைவுகூருதலாகவே பதிந்து வைத்தான். அதைப் பற்றி அவன், 'இவ்வளவு தைரியத்தோடும், பொறுமையோடும் நாமும் தேவனுக்காக சாட்சியாயிருக்க தேவன் நமக்கும் அருள்புரிவாராக !' என்று எழுதினான்.

ஜெபம் ஒரு கிறிஸ்தவனின் இரகசிய ஆயுதம். கிறிஸ்துவின் மேல் ஒருவர் வைத்திருக்கும் விசுவாசத்தை மௌன மொழியாகவோ, வெளிப்படையான வார்த்தையிலோ அது வெளிப்படுத்துகிறது. மரணத்துக்குக் குறிக்கப்பட்ட மனிதன் ஒருவன் ஜெபிப்பதைக் கண்ட க்லாஸை அது நிறுத்தி யோசிக்கத் தூண்டியது. அதைப் போலவே, ஏதோ ஒரு ஹோட்டலில் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் ஆகாரத்துக்காக நாம் ஜெபிப்பதை மற்றவர்கள் காணும்போதோ அல்லது வேறு ஏதோ ஒரு இடத்திலோ, சந்தர்ப்பத்திலோ மற்றவர்கள் முன்பாக ஜெபிப்பதை அவர்கள் காணும்போது, ஏதோ ஒன்று அவர்களைக் கடவுளை நினைக்கும்படி யோசிக்க வைக்கிறது. ஏதோ ஒரு வகையில் ஜனங்களின் சிந்தனையை கிறிஸ்துவின் பக்கம் ஒரு விநாடி திருப்பினாலும், நாம் நமது கடமையைச் செய்தோம் என்பதே உண்மை. க்லோஸுக்குள் கிரியை செய்த மைக்கேலின் ஜெபம் இதை நிரூபித்தது போலவே, ஜெபம் உண்மையிலே வாழ்க்கைகளை மாற்றி, அர்ப்பணிக்கும்படி ஏவி எழுப்புகிறது. ஆனாலும் நீங்கள் ஏறெடுக்காத ஜெபங்களை தேவன் உபயோகிக்க இயலாதே! இன்று நீங்கள் சந்திக்கும் யாரோ ஒருவரது நலனுக்காக அமைதியான ஜெபம் ஒன்றை ஏறெடுக்க சில மணித்துளிகள் தான் செலவழித்து பாருங்களேன்! அதன் விளைவு எப்படியிருக்கும் என்று உங்களுக்கே தெரியாது!

48

கிரீஸ் - அனஸ்தேசியஸ்

அனஸ்தேசியஸ் (1655)
கட்டாய மதமாற்றத்தைத் தூக்கி எறிந்த இரத்தசாட்சி

கிரீஸ் நாட்டின் நேப்லியோ நகரத்தின் கிறிஸ்தவ ஓவியர் அனஸ்தேசியஸ் மிகவும் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த போது, ஒரு முஸ்லீம் கூட்டத்தால் வலுக்கட்டாயமாக சுன்னத் செய்யப்பட்டார்.

இந்தச் சடங்கு ஒருவரை இஸ்லாமுக்கு மதமாற்றம் செய்யப்படும் வைபவமாகக் கருதப்படுவதால், வெட்கமும் வேதனையும் அடைந்த அவர், தான் சுகப்பட்டு உடல்நிலை தேறியபின் இதைக்குறித்து செய்ய வேண்டியதைச் செய்வேன் என்று உறுதிகொண்டார்.

அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவரும் நெருக்கப்பட்டார்.

ஏசாயா 63:8

சீக்கிரமே தன் கிறிஸ்தவ விசுவாசத்தை வெளிப்படையாகப் பறைசாற்றிய அனஸ்தேசியஸ் எதிர்கொண்டது இஸ்லாமியர்களின் கோபத்தையும் விரோதத்தையுமே.

விசுவாச துரோகி என்று பட்டம் கட்டப்பட்ட அவருக்கு ஷரியா விதித்தது மரண தண்டனை.

உடனடியாகக் கைது செய்யப்பட்ட அவர் தன் விசுவாசத்தை மறுதலிக்காததால், நடுத்தெருவுக்கு இழுத்துச் செல்லப்பட்டபோது, ஒரு கூட்டம் வேகமாய் அவர் மேல் பாய்ந்து தங்கள் கத்தி மற்றும் அரிவாளால் அவரைத் துண்டு துண்டாக வெட்டிப்போட்டது.

இது நடந்தது..
பிப்ரவரி 1, 1655.

ஹாலந்து - அன்ட்டோனியஸ் ஹேம்ப்ரோக்

49

அன்ட்டோனியஸ் ஹேம்ப்ரோக் (1661) கொலையுண்ட சாமாதான தூதர்

17ம் நூற்றாண்டில் ஹாலந்திலுள்ள டெஃப்டில் போதகராக இருந்தவர் அன்ட்டோனியஸ்.அவரது சபை அவரை இந்தோனேஷியாவிலுள்ள பட்டாவியாவுக்கு ஒரு சபைக்குப் போதகராக அனுப்பியது.

பின்னர் அவரது தாகத்தைக் கண்டு, முன்பு ஃபார்மோஸா என்று அழைக்கப்பட்ட தைவானுக்கு முன்னோடி மிஷினரியாக அனுப்பியது.

அங்கிருந்த ஒரு சுவிசேஷக்குழு ஒன்றுடன் இணைந்து செயல்பட்ட அவர் 1657ல் அங்கு ஒரு ஆசிரியர் கல்லூரியை நிறுவினார். அப்போது தான் அங்கு பேசப்பட்டு வந்த மொழியில் மத்தேயு மற்றும் யோவான் சுவிசேஷத்தை மொழிபெயர்த்தார்.

சில நாட்களுக்குள்ளாகவே திடீரென்று டச்சு மற்றும் சீனாவுக்கிடையில் மூண்ட யுத்தத்தால் தைவானில் அவரது ஊழியம் பாதியில் நின்று போனது.

இதற்குள் ஏற்கனவே உள்ளூரில் நன்கு பிரபலமாகியிருந்த அவர், இரண்டு நாடுகளின் படைகளுக்கும் நடுவே சமாதான தூதராக செயல்பட முயற்சித்த போது அவரது குடும்பம் கைது செய்யப்பட்டது.

சில நாட்களில் தலை வெட்டப்பட்டு தன் நேசருக்காக இரத்தசாட்சியாக மரித்தார் அன்ட்டோனியஸ்.

நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமல் போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.

2கொரி 5:9

ஜப்பானின் இரத்தசாட்சிகள்
என்னைக் கொல்லுகிறவர்களை மகிழ்ச்சியோடு மன்னிக்கிறேன்

1597ம் ஆண்டு..

அந்த நாட்களில் ஜப்பானில் ஆட்சி செய்து கொண்டிருந்த ஷோகன் அரசாங்கம், ஐரோப்பிய படையெடுப்புக்கு அஞ்சி வெளிநாட்டு கிறிஸ்தவ மிஷினரிகளையும் உள்நாட்டு கிறிஸ்தவர்களையும் கொன்று கொண்டிருந்தது.

அந்த நேரம் ஜப்பானுக்குப் புதிதாக வந்து சேர்ந்த புதிய வெளிநாட்டு மிஷினரிகள் பக்கம் அரசாங்கத்தின் கவனம் திரும்பியது.

உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்க வேண்டியதே அன்றி சபியாதிருங்கள்.

ரோமர் 12:14

1597, பிப்ரவரி மாதம் நாகசாகி நகருக்கு எதிரே இருந்த மலை ஒன்றில் மிகக் கொடுமையாக சித்ரவதை செய்யப்பட்டு சிலுவையில் அடித்துத் தொங்க விடப்பட்டனர் 26 விசுவாசிகள்.

அவர்களில் பால் மிக்கி என்ற ஜப்பானியப் போதகர் ஒருவரும் 6 வெளிநாட்டு மிஷினரிகளும் இருந்தனர். அரசாங்கம் வயதைக் கூட பார்க்காமல் 3 சிறுவர்களையும் அடித்துத் தொங்க விட்டிருந்தது.

தான் அறையப்பட்டிருந்த போது, பால் மிக்கி உரத்த சத்தத்தோடு,' சத்துருக்களை மன்னிக்கவும்,என்னைத் துன்பப்படுத்துகிறவர்களை மன்னிக்கவுமே என் மதம் எனக்குப் போதிக்கிறது.

ஆகவே இந்த நாட்டு மன்னரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் நான் மனதார மகிழ்ச்சியோடு மன்னிக்கிறேன். அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் எடுக்கவும் வேண்டிக்கொள்கிறேன்'என்று சொன்னது மட்டுமன்றி தன்னோடு சிலுவையில் அறையப்பட்டவர்களின் முகங்களில் காணப்பட்ட சந்தோஷத்தைக் கண்டு அவர்களை இன்னும் உற்சாகப்படுத்தினார் போதகர் பால் மிக்கி.

அந்த 26 பேர்களில் அநேகர், அந்த அகோரக் காட்சியைக் காண வந்தவர்களைக் கிறிஸ்துவுக்குள் நிலைத்து வாழும்படி தைரியப்படுத்தினர்.

51

சிசிலியா - தராக்கஸ், ப்ரோபஸ் மற்றும் அன்ட்ரோனிகஸ்

சோதிக்கப்பட்ட விசுவாசம்

கிபி 304..

சிசிலியாவின் ரோம அதிபதிக்கு முன் கைதிகளாய் விசாரணைக்கு நின்ற இந்த மூவரும் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவதில் பின்வாங்கவில்லை.

அவர்கள் மூவரில், முதலாவது விசாரணை செய்யப்பட்ட தராக்கஸ், ரோம தெய்வங்களுக்கு பலியிடக் கட்டளையிடப்பட்ட போது, ’ரோம மன்னர்களான நீங்கள் உங்கள் விக்கிரகங்களால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்..’ என்று தைரியமாய் சொன்னார்.

அடுத்தவர் ப்ரோபஸ்.

உன் விசுவாசத்தை விட்டுவிடுகிறாயா என்று கேட்கப்பட்ட போது, ‘நான் ஏற்கனவே பெரும் செல்வந்தனாக இருந்தவன்..இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக, இந்த உலகம் எனக்கு குப்பையாக இருக்கிறது.. என் இயேசுவை எக்காரணம் கொண்டும் இழக்க மாட்டேன்..’ என்றார். கடைசியாக நின்ற அன்ட்ரோனிக்கஸும், தன் விசுவாசத்தை விட மறுத்துவிடவே, மூவரும் மிகக் கொடுமையான வன்முறைக்கும் சித்ரவதைக்கும் உட்படுத்தப்பட்டு, கொலோசியம் என்ற கொலைக்களத்தில் காட்டு மிருகங்களுக்கு இரையாக எறிந்து விடப்பட்டனர்.

ஆனால் அற்புத விதமாக அந்த வனவிலங்குகள் அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் போகவே, அவர்கள் மூவரும் வாளால் வெட்டப்பட்டு இரத்தசாட்சிகளாயினர்.

என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்.. அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்.

மல்கியா 3:17,18

இப்படியும் ஒரு குரல்கொடுப்பவரா ?

52

இங்கிலாந்து - ஜாண் ஸ்மித்

1824.. கொத்தடிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்

குமாரன் உங்களை விடுதலை யாக்கினால் மெய்யாகவே விடுதலை யாவீர்கள்.

யோவான் 8 :37,38

இங்கிலாந்தின் நார்த்தம்ப்ட்டன்ஷயரைச் சேர்ந்த ஜாண் ஸ்மித் கயானாவிலுள்ள தெமேராராவின் அடிமைகளுக்கும் சுயாதீனருக்கும் மத்தியில் அங்குள்ள பண்ணைகளில் மிஷினரியாக ஊழியம் செய்து வந்தவர். ஏறக்குறைய 6 வருடங்கள் மிக தியாகமாக ஊழியம் செய்து வந்த அவரது நாட்களில், 1823 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அங்கே கொத்தடிமைக் கலவரம் வெடித்தது.

ஜாண் ஸ்மித் அடிமைகள் மேல் வைத்திருந்த அளவு கடந்த அன்பு மிகவும் பிரசித்தமானபடியால், அவர் தான் அடிமைகளைத் தூண்டிவிட்டு கலவரத்துக்குக் காரணமாயிருந்தவர் என்று அவர் மேல் பொய் குற்றம் சாட்டப்பட்டது. ஏற்கனவே கொத்தடிமைத்தனத்தக்கு மிகவும் எதிர்த்து நின்ற ஜாண் மேல் பண்ணை ஜமீன்தார்கள் அளவு கடந்த வெறுப்பில் இருந்ததால், கலவரத்தைக் காரணம் காட்டி கைது செய்யப்பட்டார் ஜாண்.

நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை விதித்தது.ஆனால் ஆச்சரியமாக சீக்கிரமே அவரது மரணதண்டனை ரத்தாகி விட்டாலும், அவர் சிறையில் பட்ட சித்ரவதையினால் அவரது விடுதலைக்கு முன்பாகவே 1824 பெப்ரவரியில் ஜாண் சிறையிலேயே மரித்து விட்டார். அவரது இரத்தசாட்சி மரணம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஏற்படுத்திய அசைவும் தாக்கமும், இங்கிலாந்தின் காலனி நாடுகள் முழுவதும் அன்று இருந்த கொத்தடிமைத்தனத்தையும் அடிமை வியாபாரத்தையும் நிரந்தரமாக ஒழிக்கும் சட்டத்தை 1833 ல் இயற்ற வழி வகுத்தது.

எங்கள் 'தமேராரா இரத்தசாட்சி' என்றே அவரது அடிமைகளின் சபை இன்றும் அவரை நன்றியோடு நினைவுகூருகிறது.

53

கோத் இன 'சபாஸ்'

கிபி 372.. அற்பமாய் எண்ணப்பட்ட இரத்தசாட்சி

தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளையும், பலவீனமானவைகளையும், இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தெரிந்து கொண்டார்.

1 கொரி 1:27,28

ருமேனியாவை கிபி 372ல் ஆண்டு வந்த 'கோத்' இன மன்னன் தன் ஆளுகைக்கு உட்பட்ட வட ருமேனியாவின் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்த முடிவு செய்தான். அந்த நாட்களில் அங்கு 'தர்கோவிஸ்ட்டே' என் இடத்திலுள்ள சபையின் மேற்பார்வையாளராக இருந்தவர் 'சபாஸ்.'

கைது செய்யப்பட்ட முன்பின் தெரியாத முகமறியாத 'சபாஸை'- இந்த ஆள் நல்லது கெட்டது எதற்கும் லாயக்கற்றவன் என்று கருதி விடுவித்தது அரசாங்கம். அதன்பின் மறுபடியும் கைது செய்யப்பட்டு வன்மமாய் அடிக்கப்பட்ட சபாஸ், தான் தப்பிச் செல்ல வாய்ப்பு அளிக்கப்பட்ட போதிலும், அதனை நிராகரித்துவிட்டார்.

தன்னைக் கைது செய்து துன்பப்படுத்தியவர்களின் குற்றத்தை நேரடியாக சாடிய சபாஸை உயிரோடு தண்ணீரில் மூழ்கடித்து சாகடிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீண்ட மரக்கட்டை ஒன்றில் கட்டப்பட்ட சபாஸ்,'புஸாவு' நதியில் மூழ்கடிக்கப்பட்டு உயிரோடு கொல்லப்பட்டார். அவரது மரணத்துக்குப்பின் கண்டெடுக்கப்பட்ட கடிதம் ஒன்று அவரது மரணத்தை விரிவாக விவரித்தபின் சொல்கிறது..

மரக்கட்டையாலும் தண்ணீராலும் நிகழ்த்தப்பட்ட இந்த மரணமே மனிதனின் இரட்சிப்பின் அடையாளமாய் நிற்கிறது..'

54

எகிப்து - அப்பல்லோனியா

அக்கினியின் உக்கிரத்தை அவித்த விசுவாசம்



கிபி 249..

எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியா..

கிறிஸ்தவர்களுக்கு எதிரான மிகப்பெரிய கலவரம்..அநேகரைக் கொன்று குவித்தனர் கலகக்காரர்கள். அந்தக் கூட்டத்தில் மாட்டிக் கொண்டவர் சபை ஒன்றின் பெண் மூப்பர்..

பெயர்- அப்பல்லோனியா..

அவரது முகத்தில் அவர்கள் அடித்த அடியால் அவருடைய பற்கள் உடைந்து நொறுங்கி முகம் சேதமாகியது.

'விசுவாசத்தை விட்டுவிடு.- 'முடியாது' என்றார் அப்பல்லோனியா. கலவரத்தில் எரிந்து கொண்டிருந்த தீயில் எறிந்து வீசப்பட்டு சாம்பலானார் வயதான அப்பல்லோனியா. இந்த மூன்றாம் நூற்றாண்டுக் கலவரக்காரர்கள் செய்ததெல்லாம் கிறிஸ்தவர்களைத் தோலுரித்துக் கொன்று கொள்ளையடித்தது தான். அப்பல்லோனியா இரத்தசாட்சியாகி 1800 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றும் எகிப்தின் கிறிஸ்தவ சிறுபான்மை நெருக்கப்பட்டு நொறுக்கப்படும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

நீங்கள் துன்பப்பட வேண்டியது அவசியமானதால் இப்பொழுது கொஞ்சக்காலம் துன்பப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும்.

1 பேதுரு 1: 6,7

ரஃபா தோமா அல்க்காஸ் பத்ராஸ்

இறுதிவரை போராடிய பிணைக்கைதி

2010, அக்டோபர் 31..
ஈராக்கின் தலைநகர் பாக்தாத்..

அங்குள்ள ஆலயம் ஒன்றில் ஞாயிறு மாலை ஆராதனையில் புகுந்தனர் அல்-காய்தா தீவிரவாதிகள். அந்த மாலை நடந்த படுகொலையில் ஆலயத்திலுள்ளேயே 50 கிறிஸ்தவர்கள் சுட்டுத் தள்ளப்பட்டு 100 பேர் பிணைக்கைதிகளாக்கப்பட்டனர். அந்தப் பிணைக்கைதிகளில் ஒருவர் 44 வயதான ரஃபா. இராணுவம் வந்து பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டாலும் ரஃபாவால் அந்தக் கொடூரத்தை மறக்க முடியவில்லை. காரணம் அவரது ஒன்றுவிட்ட 27 வயது சகோதரன் அந்த இடத்தில் கொல்லப்பட்டது தான். அன்றாடம் சோகம் நடந்த அந்த இடத்துக்கு வந்து சென்று கொண்டிருந்தார் ரஃபா.

அவரைச் சேர்ந்தவர்கள் அநேகர் பாக்தாத்தை விட்டு வெவ்வேறு இடங்களுக்குத் தப்பிச் சென்று விட்டாலும் ரஃபா மட்டும் பாக்தாத்தை விட்டு வெளியேற மறுத்து விட்டார் - அவரது வயதான தகப்பனார் எவ்வளவோ கேட்டுக் கொண்ட பிறகும் கூட..

சரியாக 2 மாதங்கள்.. அல்-காய்தா, கிறிஸ்தவர்கள் மீதான தன் வேட்டையை இன்னும் தீவிரமாக்கியது. கிறிஸ்தவர்களின் வீடுகளும் அலுவலகங்களும் குறிவைத்துத் தாக்கப்பட்டன. வீடு புகுந்து கிறிஸ்தவர்களை படு கொலை செய்தனர் தீவிரவாதிகள்.

2011 ஜனவரி 3ம் தேதி அதிகாலை.. மத்திய பாக்தாத்தின் குடியிருப்பு ஒன்றில் தனியே வசித்து வந்த ரஃபாவின் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. உடனே திறக்கப்படாமல் போகவே, கதவை உடைத்துக்கொண்டு புகுந்த அல்- காய்தாவினர், தூங்கிக் ரஃபாவை அவரது படுக்கையிலேயே சுட்டுக் கொன்றனர்.

‘என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது.நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன் ?

சங்கீதம் 42:2

இப்படியும் முடிவில்லா சித்ரவதைகளா ?

56

எரித்ரியாவின் கைதிகள்

எரித்ரியாவின் கைதிகள் (2007, 2010)



கட்டுண்டவனுடைய பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும். கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை உமது புயபலத்தினால் உயிரோடு காத்தருளும்.

சங்கீதம் 79:11

எரித்ரியா - செங்கடல் கடற்கரையை ஒட்டிய ஒரு வடகிழக்கு ஆப்பிரிக்க நாடு. இதின் ஒரு எல்லை சூடான், மறு எல்லை எத்தியோப்பியா..

உலகத்தில் கிறிஸ்தவர்களை, வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவு சித்ரவதை செய்து ஒடுக்கும் நாடுகளில் ஒன்று எரித்ரியா.

இந்தக் கிறிஸ்தவர்கள் தங்கள் தேசத்தைவிட தங்கள் தேவனுக்கே தலை வணங்குபவர்கள் என்றும் இதனால் நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்தானவர்கள் என்ற கண்ணோட்டத்தோடேயே அவர்களைக் காண்கிறது அந்த அரசாங்கம்.

சமீபத்திய 2007, 2010ல் நடந்த நிகழ்வுகள் இவை..

பதிவு செய்யப்படாத சபைகளின் தலைவர்களும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களும் கைது செய்யப்பட்டு எரித்ரியாவின் கொடூரத்துக்குப் பேர்போன சிறைக் கொட்டடைகளில் அடைக்கப்பட்டனர்.

கோரமான நிலைமைகளில் அடைக்கப்பட்ட அவர்களில் பலர் சிறையிலேயே உயிர் விட்டனர். தங்கள் விசுவாசத்தை மறுதலிக்காத பட்சத்தில் அவர்களுக்கு மருத்துவம் மறுக்கப்பட்டது.

மாகோஸ் சாலமன் சேமேருக்கு 2007ல் நடந்தது இது தான்.. கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்ததால், மருத்துவம் மட்டுமன்றி தன்னைச் சந்திக்க வந்த, தான் திருமணம் செய்து கொள்ளப்போகும் பெண்ணுக்கும் அனுமதி மறுக்கப்பட்டு மகா கொடுமையான சித்ரவதையால் மரித்தார் மாகோஸ்.

28 வயது செனைட் ஹாப்தா ஒரு யுனிவர்சிட்டி மாணவி. அவளோடு 15 மாணவர்களும் 2010ல் கைதானார்கள். அவர்கள் செய்ததெல்லாம் ஒரு பைபிள் ஸ்டடியில் பங்கெடுத்தது தான்.

ஏற்றுமதி இறக்குமதியில் பயன்படுத்தப்படும் மெட்டல் கன்ட்டெய்னர் ஒன்றில் இரண்டு வருடமாக அடைக்கப்பட்டிருந்த செனைட்டை பகலின் வெயிலின் வெப்பத்தின் அகோரமும் இரவின் குளிரின் கடுமையும் கொல்ல, 2 வருடத்தில் மிகவும் சீரியஸான நிலைமையில் கன்ட்டெயினரிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டாள் செனைட்.

'உனக்கு மருத்துவ வசதி செய்து விடுதலையும் செய்து விடுகிறோம், இயேசுவை விட்டுவிடு..' என்று அரசாங்கம் சொல்ல, அதை நிராகரித்துவிட்ட செனைட், 2010 ஏப்ரல் 23ம் தேதி இரத்தசாட்சிகள் கூட்டத்தோடு தன் ஆண்டவரிடம் சேர்ந்தாள்.

57

இந்தோனேஷிய கிறிஸ்தவர்கள்

கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோர்

அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

வெளி 21:4

2001, பெப்ரவரி 10..

இந்தோனேஷியாவின் அம்பான் தீவு..

பழங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்த கிறிஸ்தவர் ஒருவர் கழுத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்படுகிறார்..

சரியாக ஆறு நாட்களுக்குப் பின் அதே போல் இன்னொரு கிறிஸ்தவரும் சுடப்பட்டு கொல்லப்படுகிறார். அவர்கள் செய்த தவறு - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசம் ஒன்றே..

1999 ஜனவரிக்கும் 2001 பெப்ரவரிக்கும் இடைப்பட்ட நாட்களில் மட்டும் இந்தோனேஷியாவின் 'மலுக்கு' மாநிலத்தின் அம்பான் என்ற கிறிஸ்தவர்கள் நிறைந்த தலைநகர் பகுதியில் 9000க்கும் மேற்பட்ட இந்தோனேஷிய விசுவாசிகள் கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலவரத்தில் கொல்லப்பட்டதாக புள்ளிவிபரம் சொல்கிறது.

இதற்குக் காரணமான லஷ்கர்-இ-தொய்பா அந்தப் பகுதியின் அநேகரைக் கொன்று ஆயிரக்கணக்கானோரை வீடுவாசலின்றி துரத்தியடித்தது.

இதன் காரணமாக சுமார் 5 லட்சம் கிறிஸ்தவர்கள் வெறுங்கையாய் வெளியேறினர்.

இப்படியும் ஒரு தைரியமா ?

58

செர்பியா - ஜார்ஜ்



ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர்நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.

பிலிப்பியர் 1:29

'நான் சாகிறதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்'

ஜார்ஜ்.. கிபி 1515..

செர்பியாவின் ஒட்டமான் ராஜ்யத்தில் வாழ்ந்த ஜார்ஜ் ஒரு அழகான வாலிபன். தங்க நகை செய்யும் தொழில்.. கிறிஸ்துவை அளவில்லாமல் நேசிக்கும், தேவனுக்கு பயந்த ஒரு வாலிபன். அவனது நடவடிக்கைகள் அவன் இருந்த இடத்திலுள்ள சில முஸ்லீம்களின் கவனத்தைத் திருப்பவே, அவனைக் கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து திருப்ப, இஸ்லாமிய சட்ட நிபுணரான முஃப்தி ஒருவரை அவனோடு விவாதிக்க அனுப்பி வைத்தனர். அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் அவரால் எதிர்த்து நிற்கக் கூடாமல் போகவே, அவனை இஸ்லாமுக்கு மாற்ற நினைத்தவர்களின் கோபத்துக்கும் எரிச்சலுக்கும் ஆளானான் ஜார்ஜ்.

மறுநாள் நீதிபதிக்கு முன் வரவழைக்கப்பட்ட ஜார்ஜுக்கு, கிறிஸ்துவை மறுதலித்து விட்டால் பெரிய தொகை கொடுப்பதாக விலை பேசப்பட்டது. அதையும் அவன் மறுத்துவிடவே அன்றிரவே கைது செய்யப்பட்டான் ஜார்ஜ்.

மறுநாள் தனக்கு விரோதமாய் எதிர்த்து நின்ற பெரிய கூட்டத்துக்கு முன், நான் அறிக்கையிட்டு அறிவிக்கிற கிறிஸ்துவின் சத்தியத்துக்காக சாகிறதற்கும் ஆயத்தமாய் இருக்கிறேன் என்று தைரியமாய் முழங்கினான் அவன். அவனது இந்த அறிக்கை ஒன்றே போதுமானதாக இருந்தது அவனை உயிரோடு எரிக்க.. 1515 பெப்ரவரி 11ம் தேதி இதே நாளில் தன் ஆண்டவருக்காக உயிரோடு கொளுத்தப்பட்டு இரத்தசாட்சியானான் ஜார்ஜ்.

பன்னிரண்டு எகிப்திய இரத்தசாட்சிகள் (1997) ஆராதனையில் நடந்த படுகொலை



1997 பெப்ரவரி 12..

எகிப்தின் அல்-மின்யா மாநிலத்தின் அபு குர்காஸ் பகுதியிலுள்ள மேரி கிர்கிஸ் சபையில் ஆராதனையின் போது புகுந்தனர் தீவிரவாதிகள்.

கண்மூடித்தனமாக விசுவாசிகளை சுட்டுத்தள்ளியதில் 12 எகிப்திய விசுவாசிகள் பிரசங்க நேரத்திலேயே மரித்தனர். மறுநாள், மரித்த அனைவருக்கும் அடக்க ஆராதனை ஆயத்தமானது. ஆனால் எகிப்திய பாதுகாப்புத்துறை அனுமதி மறுத்து அவரவர் குடும்பங்கள் தங்களுடையவர்களை தனித்தனியே அடக்கம் செய்யும்படி சொல்லிவிட்டது.

அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.

யோவான் 15:21

தன் மகனை சாகக் கொடுத்த தந்தை ஒருவர், தன் மகனுக்காக வந்த இரங்கல் செய்தியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

அதற்கு அவர் சொன்ன காரணம் - 'என் மகன் கர்த்தருக்காக இரத்தசாட்சி ஆகியிருக்கிறான்.. இரத்தசாட்சி மரணத்துக்கு இரங்கலோ பரிதாபமோ அவசியமில்லை..'

60

ஸ்பெயின் - கொலம்பா

கொலம்பா (கிபி 853) கிறிஸ்துவுக்காக மரணபரியந்தம் உண்மையாயிருந்தவர்

ஸ்பெயினின் தபனோஸில் உள்ள கான்வென்ட் ஒன்றில் கன்னியாஸ்திரீயாக தன்னை ஒப்புக்கொடுத்து சேவை செய்து வந்தவர் வாலிபப் பெண்ணாகிய கொலம்பா. அப்போது வட ஆப்பிரிக்காவிலிருந்து படையெடுத்து வந்த இஸ்லாமியர்கள் தபனோஸிலுள்ள கிறிஸ்தவர்களைச் சிதறடித்தபோது கொர்டோபாவின் முஸ்லீம் நீதிபதிக்கு முன் தைரியமாய்ப் போய் நின்றாள் கொலம்பா.

இயேசு: 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்..'

யோவான் 14:6

கிறிஸ்துவின் மேல் தனக்கிருந்த விசுவாசத்தை பிரகடனப்படுத்திய அவள், இஸ்லாமையும் முகமது நபியையும் கடுமையாக சாடியதுடன், முகமது நபி ஒரு கள்ளத் தீர்க்கதரிசி என்று எந்த மனித முகத்துக்கும் அஞ்சாமல் துணிந்து சொன்னாள்.

அவளது அந்த வாக்குமூலம் ஒன்றே அவளது தலை வெட்டப்பட்டு அவளது உடலை க்வாடல்க்வீர் நதியில் வீசி எறிய போதுமானதாயிருந்தது.

கிபி 853 வாக்கில் நடந்த இந்த நிகழ்ச்சியை பதிவு செய்தவர் கொர்டோபாவின் யூலோஜியஸ் என்பவர். அவரும் இரத்தசாட்சியாக மரித்தார் என்கிறது வரலாறு.

இரத்தசாட்சிகளாய் மடிவோம்

இரத்தசாட்சிகளாய் மடிவோம் - நல்
கோதுமை மணியாய் மடிவோம் - மடிவோம்

கல்லெறியப்பட்ட ஸ்தேவான் - நாடு
கடத்தப்பட்டானே யோவான்
கத்தியாலே குத்துண்ட மத்தேயு
கால்கள் கிழியுண்ட மாற்கு - மாற்கு

கழுமரம் ஏறிய லூக்கா
ஈட்டியால் குத்தப்பட்ட தோமா
பட்டயத்தால் வெட்டுண்ட யாக்கோபு
வாளால் அறுப்புண்ட ததேயு லபேயு

தோல் உரியுண்ட பர்த்தலோமே
சிலுவையில் அறையுண்ட பிலிப்பே
தலைகீழாய் அறையுண்ட பேதுரு தலை
வெட்டப்பட்டானே பவுலே - சவுலே

ஜீவ பலியாய்த் தருவோம்
செத்தாலும் சாகிறோம் என்போம்...
இயேசுவின் பாதையில் செல்வோம்
அவருக்காய் ஜீவனைத் தருவோம் - மடிவோம்

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ,கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

யோவான் 12:24

இப்படியும் ஒரு நினைவுகூருதலா ?

62

ரோம் - வேலன்ட்டைன்

வேலன்ட்டைன் (கிபி 269)
காதலர்களின் காவலன் என்று தவறாக நினைவுகூரப்படுபவர்

அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத் தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்.

எரேமியா 31:3

'வேலன்ட்டைன் ' என்ற குருவானவர் இறந்த நாளான 'வேலன்ட்டைன் டே ' உலகெங்கும் காதலர்கள் தினமாகக் கொண்டாடப்படும் போது உண்மையாகவே அவர் அன்று இரத்தசாட்சியாக மரித்தார் என்பது மறக்கப்பட்டுப் போன ஒரு வேதனையான உண்மை.

அவருடைய வாழ்க்கைக்கும் காதல் சமாச்சாரங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதும் இது போன்ற காரியங்களால் உண்மையான வேலன்ட்டைன் என்ற தேவ மனிதன் மறக்கப்பட்டுப் போனார் என்பதுமே உண்மை.

ரோமாபுரியில் இரண்டாம் கிலவுதிராயன் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலாபனையில் கைது செய்யப்பட்ட வேலன்ட்டைன், நீதிபதியின் முன் நிறுத்தப்பட்ட போது, தன் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்துவிட்டதால், இரும்பு ஆயுதங்களால் தொடர்ந்து தாக்கப்பட்டு பின்னர் கழுத்து வெட்டப்பட்டு கி பி 269ல் இரத்தசாட்சியாக மரித்தார்..

63

பாகிஸ்தான் - முக்தார் மஸி

முக்தார் மஸி (2004) துணிந்து நின்றவர்

2004 ஜனவரியின் ஒரு அதிகாலை நேரம்..

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த பாஸ்டர் முக்தார், காலை ட்ரெயினைப் பிடிக்க போய்க் கொண்டிருந்த வழியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தினமும் காலையில் அவரது சபையிலிருந்து ஒலிபரப்பப்படும் பாடல்கள் மற்றும் வேத வசனங்களின் ஒலிபரப்பை நிறுத்துமாறு அதற்குமுன் பலமுறை அவர் மிரட்டப்பட்டார்.

அவர் செய்து வந்த ஊழியங்கள் அங்கு பெருவாரியாக வசித்து வந்த இஸ்லாமியர்களை எரிச்சலூட்டியதால் பலமுறை அவரோடு அவர்கள் வாக்குவாதம் செய்ததுண்டு.

சம்பவம் நடந்த அன்று அவரை நெஞ்சில் சுட்ட அவர்கள், அவரிடமிருந்து பொருட்கள் எதையும் அபகரித்துச் செல்லாதது, அவர்களது கொலையின் நோக்கத்தைத் தெளிவாக வெளிப்படுத்தியது.

நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்.

1 கொரி 1 : 23

இப்படியும் ஒரு தீர்க்கதரிசனமா ?

64

எருசலேம் - இயேசு கிறிஸ்து

“இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம், அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள். ”

“ஆனாலும் அது உங்களுக்குச் சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும். ஆகையால் என்ன உத்தரவுசொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம்பண்ணிக்கொள்ளுங்கள்.”

“உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்.”

“பெற்றாராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள்; உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்.”

“என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்.’

லூக்கா 21 : 12 - 19

ஜனானி லுவம் (1977)
சர்வாதிகாரிக்கு தலைவலி தந்தவர்

1971..ஆப்பிரிக்காவின் உகாண்டா..

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைத் தூக்கியெறிந்து இராணுவம் ஆட்சியைப் பிடித்து அதின் சர்வாதியாகிறார் இடி அமீன்.. அப்போது உகாண்டாவின் கம்ப்பாலா பகுதியில் ஆங்கிலிக்கன் ஆர்ச்பிஷப்பாக இருந்தவர் ஜனானி லுவம். ஆரம்பத்தில் இடி அமீனின் அராஜகங்களைத் தட்டிக்கேட்கத் தயங்கிய ஜனானியால் நாட்கள் செல்லச் செல்ல தாக்குப்பிடிக்க முடியவில்லை.

பிழைத்திருக்கிற வர்கள் இனித் தங்களுக் கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக் கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.

1 கொரி 1 : 23

1976 கடைசியில் எல்லா பிஷப்புகளையும் இடி அமீனுக்கு எதிராக ஒன்று கூட்டினார் ஜனானி. அமீனின் ஆட்கள் ஜனானி மற்றும் அவரோடிருந்த யாவரது வீடுகளையும் அடித்து நொறுக்கினர். 1977 பிப்ரவரி 12 அன்று சர்வாதிகாரிக்கு விரோதமாக போராட்டத்தில் இறங்கியது பிஷப் யூனியன்.

16ம் தேதி அனைவரும் அமீனை சந்திக்க அழைக்கப்பட்டு கம்ப்பாலா கான்ஃபரன்ஸ் சென்ட்டருக்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட அவர்களை அமீனின் அடியாட்கள் அடிக்க ஆரம்பித்தனர். கடைசியில் தனிமையாக்கப்பட்ட ஜனானி லுவம், அமீனின் ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தார் என்று கைது செய்யப்பட்டார்.

அன்று மாலை 6.30 மணிக்கு உகாண்டா வானொலி ஜனானியும் அவரோடு இன்னும் இரண்டு பிஷப்புகளும் கைது செய்யப்பட்டதாக அறிவித்தது.

அவரது மனைவியும் மற்றவர்களும் அவரைத் தொடர்பு கொள்ளும் முன்பாகவே மறுபடியும் 9 மணிக்கு பிஷப் ஜனானி லுவம் விபத்து ஒன்றில் ஏற்பட்ட உள்காயங்களால் மரித்துப் போனதாக வானொலிஅறிவித்தது.

அவரது குடும்பத்துக்கு அவரது உடல் தரப்படாவிட்டாலும் அவர் வளர்ந்த அகோலி கிராமத்துக்கு அடக்கம்பண்ணப்பட ஜனானியின் உடல் கொண்டுவரப்பட்ட போது அவரது உடலில் இருந்த துப்பாக்கி குண்டுத் துளைகள் அவரது மரணத்தின் காரணத்தை சொல்லாமல் சொல்லியது.

66

ரோம் - ஆக்னஸ்

ஆக்னஸ் கி பி 305

இயேசு கிறிஸ்து ஒருவரே என் ஆத்தும நேசரும் மணவாளனும் வாழ்க்கைத் துணையுமானவர்



சுத்தமுள்ளவர்களுக்கு சகலமும் சுத்தமாயிருக்கும் .அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது.

1 கொரி 1 : 23

ரோம் நகரிலுள்ள ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தின் 13 வயது சிறுமி ஆக்னஸ்.

கிறிஸ்துவின் மேலுள்ள அவளது விசுவாசத்தின் விளைவாக உள்ளூர் மேயரின் மகன் அவளை அழைத்தனுப்புகிறான். என்னென்னவோ பேசிப்பார்க்கிறான். அவனது அன்பின் வார்த்தைகளோ மிரட்டலோ எதற்கும் அவள் மசிவதாகத் தெரியவில்லை.

தீர்க்கமாகச் சொல்லிவிட்டாள் - இயேசு கிறிஸ்து ஒருவரே என் ஆத்தும நேசரும் மணவாளனும் வாழ்க்கைத் துணையும் என்று.. வேறு வழியின்றி கைதாகி சிறையிலிடப் படுகிறாள் ஆக்னஸ்.ஆனால் இயேசுவை மட்டும் அவள் மறுதலிக்கவுமில்லை அவர்களது தெய்வங்களுக்கு முன் மண்டியிட்டு பலியிடவுமில்லை.

வரலாறு சொல்கிறது...கடைசியாக வாளால் தலை வெட்டப்பட அவள் அழைத்துச் செல்லப்படப் போகும்போது ஆக்னஸின் முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வயா நோமன்ட்டனா என்ற இடத்தில் இரத்தசாட்சியாக அவள் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் இன்று ஒரு ஆலயம் அவளது ஞாபகார்த்தமாக நிமிர்ந்து நிற்கிறது.

67

சபீனா உம்பிராண்ட்

சபை தன் சொந்த சரீரத்தின் அங்கங்களான மற்ற அவயவங்களின் பாடுகளையும் வலியையும் உணராமல் போனால் (இரத்த சாட்சிகளை நினையாமல் போனால்) அதின் நரம்புகள் செத்து உணர்ச்சியற்றுப் போயிற்று என்பதே உண்மை..

-சபீனா உம்பிராண்ட்

இப்படியும் ஒரு வைராக்கியமா ?

68

ஈராக் - பர்பாஸிமஸ்

பர்பாஸிமஸ் (கிபி 346) மறுதலிக்க மறுத்தவர்

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன்.

பிலிப்பியர் 3:7

இன்றைய ஈராக்கின் செலுசியா பகுதியின் பிஷப்பாக இருந்தவர் மிகுந்த கனத்துக்கும் மரியாதைக்கும் உரிய பிஷப் பர்பாஸிமஸ்.

அப்போது அங்குள்ள ஸஸ்ஸனைடில் மன்னனாக இருந்த இரண்டாம் ஷாப்பூரின் நாட்களில் நடந்த கொடிய உபத்திரவ காலத்தில் அவரும் அவரோடு 16 குருவானவர்களும் கைது செய்யப்பட்டனர்.

ஒரு நாள் அவருக்கு முன்பாக ஒரு கோப்பை நிறைய தங்க நாணயங்கள் வைக்கப்பட்டு, விசுவாசத்தை விட்டுவிட்டால் அவருக்கு கவர்னர் பதவியும் தருவதாக வாக்களிக்கப்பட்டது. அவரை சித்ரவதை செய்தவர்கள் சூரியநமஸ்காரம் செய்யும்படி அவரைக் கட்டாயப்படுத்தினர். செய்யாதபட்சத்தில் ஆகாரம் தண்ணீரின்றி கட்டுகளும் காவலும் இன்னும் பலக்கும் என்று மிரட்டப்பட்டார் பிஷப் பர்பாஸிமஸ்.

ஆனால் பணமோ பதவியோ மிரட்டலோ சித்ரவதையோ அவரை அசைக்க முடியவில்லை.

'நீங்கள் எவ்வளவு கிறிஸ்தவர்களைக் கொல்லுவீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் பெருகிக் கொண்டே போவார்கள் என்றார் அவர்.

கடைசியாக அவர்கள் எல்லாரும் தலை வெட்டப்பட்டு இரத்தசாட்சியானார்கள்.

தர்சு - பவுல்



“நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.”

“யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்”

“மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.”

“அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்.”

‘‘இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.’

2 கொரி 11:28

மடகாஸ்கர் - ரஃபரலாஹி

ரஃபரலாஹி (1838)
ஆட்டுத்தோல் போர்த்த ஓநாயால் காட்டிக் கொடுக்கப்பட்டவர்

தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்?

சங்கீதம் 56:11

1835...

மடகாஸ்கர் தீவின் அரசி முதலாம் இரனவலோனா ஆட்சி செய்த காலம்.. தீவில் ஒருவரும் கிறிஸ்தவத்தைப் பின்பற்றக்கூடாது என்று பிரகடனப்படுத்தினாள் ராணி. கிறிஸ்தவர்களுக்கு எதிரான உபத்திரவம் தொடங்கியது. மடகாஸ்கரில் இருந்த கிறிஸ்தவர்களில் தீவிரமாய் இருந்தவர் ரஃபரலாஹி.. அரசியின் ஆணையை மதிப்பதா அல்லது தன் இரட்சகருக்காக துணிந்து நிற்பதா என்ற போராட்டத்தில் இருந்தார் ரஃபரலாஹி.

கடைசியாக, என்ன வந்தாலும் வரட்டும் என்று தன் ஜெபத்தையும் சாட்சியையும் ஊழியத்தையும் இன்னும் தீவிரப்படுத்தினார் அவர். இந்த நேரத்தில் தான் அவரோடு இணைந்தான் ரஃபியாகரானா என்ற மனிதன். தானும் ஒரு விசுவாசி என்று சொல்லி ரஃபரலாஹியின் நம்பிக்கையைப் பெற்ற ரஃபியாகரானா, அவரது இருப்பிடம், ஊழிய நடவடிக்கைகள், மற்றும் இரகசியமாய் வாழ்ந்து வந்த சக விசுவாசிகள் யாவரது காரியங்களையும் அறிந்து கொண்டு, பண ஆசையினாலும் அதிகார வர்க்கத்தினரின் மிரட்டலாலும் ரஃபரலாஹியைக் காட்டிக்கொடுத்து விட்டான்..

உடனே கைது செய்யப்பட்ட லாஹி தன் சக விசுவாசிகளின் பெயர்களைத் தெரிவிக்கும்படி சித்ரவதை செய்யப்பட்டார். ஆனாலும் ஒருவரைக் கூட காட்டிக் கொடுக்காத லாஹி 1838 பெப்ரவரி 19 அன்று அம்போஹிபோட்ஸி என்ற இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார்.

ரஃபரலாஹியின் இரத்தம் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறது..

மொழிபெயர்ப்புகள்:

ஒரு கைதியின் டைரி
[ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith]

கேட்டகோம்ப்ஸ்
இரத்தசாட்சிகள்
[Martyrs of Catacombs]

நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[Thou art My battle Axe -
Dr. Paul Enenche]

கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

மொழிபெயர்ப்புகள்:

ரேவன்ஹில்
பேஜஸ்

என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[Rev. லியோனார்ட் ரேவன்ஹில்]

உடைத்தெறி
[Breakthrough -
Rudy Lack]

எழுப்புதல்
எழுத்துக்கள்
[Assorted Revival Notes]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !

என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !

விக்கினத்தின்
மேல் விக்கினம்

சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...

நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?

இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...

மீண்டும்
ஒரு
மிஸா ?

மிஷன் 2024

குருதிப் பிரளயம்

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

இதோ நாட்கள்
வருகிறது !

நாட்கள்
எண்ணப்படுகிறது

ரிவைவா

ஒரு எழுப்புதல் பயிற்சிப் பாசறை

வெளியீடுகள்

எழுப்புதலின் அடிப்படைகள், ஆரம்பப் பாடங்கள், ஆணி வேர்கள்.

ரிவைவல் 66 வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள்

ரிவைவல் 66 [பகுதி 2] வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள்

எழுப்புதல் 300 சபை சரித்திரம் கண்ட 300 எழுப்புதல்கள்

எழுப்புதலும் மிஷனரி வரலாறும்

எழுப்புதலும் [பகுதி 2] சுருக்கமான சபை சரித்திரமும்

எழுப்புதலும் வரப்போகும் நாட்களும் [பகுதி 1]

எழுப்புதலும் இன்றைய நாட்களும் [பகுதி 2]

புத்தகங்கள் கிடைக்குமிடம்

அடைபட்ட அக்கினி

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091
Cell: 98106 46981 / 99901 03010

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !

அடைபட்ட
அக்கினி

246-B, Pocket - C, Mayur Vihar,
Phase-2, Delhi - 110091
Mob : 9810646981
email: hiddenfireromilton@gmail.com

LC
LIVING CREATION

R A T T H A T H I N R A T T H A M

இரத்தத்தின் இரத்தம்

சவால் ஒன்றுக்கு நீங்கள் ஆயத்தமா? அப்படியானால், கிறிஸ்துவுக்காகத் தங்களை முழுவதுமாய் விற்றுப்போட்ட எழுபது பேர் கொண்ட இப்புத்தகத்தின் பக்கங்களை ஒவ்வொன்றாய்த் திருப்புங்கள்.

கிறிஸ்துவைத் தீவிரமாய்ப் பின்பற்றுகிறவர்கள் அதற்கான ஒரு விலைக்கிரயத்தை செலுத்தவே செய்கின்றனர். அவரை வெறித்தனமாய்ப் பின்பற்றுகிறவர்களோ அதற்கேற்ற மிகப்பெரிய விலைக்கிரயத்தை அடிக்கடி செலுத்திக்கொண்டே செல்கின்றனர். அப்படிக் கேட்கப்பட்ட விலைக்கிரயத்தை மனதார செலுத்திய அர்ப்பணிப்பும், திட வைராக்கியமும், நேச அக்கினியும் நிறைந்த சாட்சிகளின் தின தியானங்கள் கொண்ட நூல் இது.

சகலத்திலும் எல்லை மீறிய தலைமுறை கண்ட இந்தக் காலத்திலே, கிறிஸ்துவின் மேலிருந்த தங்கள் அன்புக்காக எந்த எல்லைக்கும் சென்று எப்படிப்பட்ட விலைக்கிரயத்தையும், சென்றுபோன நூற்றாண்டுகள் முதல் இன்று வரை உலகம் முழுவதுமிலிருந்து செலுத்தி வந்த நமது சக விசுவாச உதிரங்களின் இந்த வாழ்க்கை வரலாறுகள் உண்மையாகவே நமது விசுவாசத்தைத் தட்டியெழுப்பி, பெலப்படுத்தி, உற்சாகமும் நம்பிக்கையும் அளிக்கிறது.

இதிலுள்ள ஒவ்வொரு கதையும் உண்மை. ஒவ்வொன்றும் மறக்க முடியாதது. காலத்தைத் தாண்டி நிற்கும் இவை ஒவ்வொன்றும் உண்மையாகவே உங்கள் வாழ்வை மாற்றும்.

சவாலை உங்களுக்கென்று ஏற்று முன் செல்லுங்கள். வரலாறு திரும்புகிறது!

அடைபட்ட அக்கினி
246- B, Pocket - C, Mayur Vihar, Phase -2,
Delhi - 110091. **Mob : 98106 46981**

பாஸ்டர். S.ரொமில்ட்டன்